விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 மாசி 19 ஞாயிற்றுக்கிழமை (03.03.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 074

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித
நடவடிக்கைகள், பொதிகள் சேவை
உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து
WESTERN UNION மூலம்
அனுப்பிய பணத்தை ஒருசில
நிமிடங்களில் நீங்கள்
பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(C-5621)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

## ஜெனிவாவில் இலங்கை தொடர்பில் புதிய தீர்மானம்

### ஐ.நாவில் இன்று இலங்கைக்கு எதிரான தீர்மானம் தொடர்பான கலந்துரையாடலும் நடைபெறும்

(ஜெனிவா)

ஜெனிவாவில் இலங்கை தொடர்பான புதிய தீர்மானம் ஒன்று கொண்டுவரப்படவுள்ளது. இலங்கை தொடர்பாக கொண்டுவரப்படவுள்ள தீர்மான வரைபு குறித்த முதலாவது கலந்துரையாட்லும் இன்று ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இடம் பெறவுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

## 25 இலங்கை மீனவர்கள் மாலைதீவில் கைது

(கொழும்பு)

25 இலங்கை மீனவர்கள் மாலைதீவில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மீனவர்கள் மாலைதீவு கடல் எல்லையில் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட 15

## மரண தண்டனை இம் மாதமே நிறைவேற்றப்படும்

### மைத்திரி அதிரடி

(கொழும்பு)

இந்த மாதத்திற்குள் மரண தண்டனை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. 04

### வலி வடக்கில் இடம்பெயர்ந்தோர்

## காணிகளை ஒப்படைக்க கோரி கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்



சேர்ந்த, வலி வடக்கு இடம்பெயர்ந்தோர் மக்கள் ஒன்றியத்தினர் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டமொன்றை 16

(கொழும்பு)

யுத்தத்தில் இடம்பெயர்ந்த மக்களின் காணி உரிமைகளை உறுதி செய்யும் நோக்கில் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கில் வியாபாரிமூலை பருத்தித்துறையைச்

## மேலிடத்தில் கேட்காமல் கையெழுத்திட முடியாது

### தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை



(யாழ்ப்பாணம்)

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் இலங்கை விவகாரத்தை எப்படி கையாள்வதென்பது தொடர்பாக ஆராய்வதற்காக. ரெலோ அமைப்பு 15

## பௌத்தத்தை உலகிற்கு வழங்கும் மத்திய நிலையமாக இலங்கை மாறவேண்டும் - ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

எமது நாட்டை அன்று போன்று இன்றும் எதிர்காலத்திலும் உலகிற்கு தேரவாத பௌத்த சமயத்தை வழங்கும் மத்திய நிலையமாக ஆக்குவதற்கு தற்போதைய அரச தலைவர் என்ற வகையில் தன்து பொறுப்பை நிறைவேற்றுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். பேராதனை ஈரியகம ஸ்ரீ சுபோதாராம விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள 15

### நிறைவேற்று அதிகாரம் கொண்ட

## ஜனாதிபதி முறையை நீக்குவதில் நெருக்கடி

(கொழும்பு)

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கி பாராளுமன்ற முறைமையை உருவாக்கும் 20 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தத்தினை நிறைவேற்றும் ஜே.வி.பி.யின் தீவிர முயற்சிக்கு ஐக்கிய தேசியக் கட்சி பச்சைக் கொடி 15

## கிளிநொச்சி போராட்டத்தில் இடம்பெற்ற தவறுக்காக

### பகிரங்க மன்னிப்பு கேட்டார் சிறீதரன் எம்.பி.



(கிளிநொச்சி)

கடந்த மாதம் 25ஆம் திகதி கிளிநொச்சியில் இடம்பெற்ற போராட்டத்தில் தமது தரப்பில் தவறு இடம்பெற்றுள்ளமைக்கு பகிரங்கமாக மன்னிப்பு கேட்கின்றேன் என பாராளுமன்ற உறுப் 15

### வரவு–செலவுத்திட்டம்

## 5ஆம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

2019 ஆம் ஆண்டுக்கான ஐக்கிய தேசிய முன்னணி அரசின் வரவு - செலவுத்திட்டம் எதிரவரும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நிதி அமைச்சர் மங்கள சமரவீரவால் முன்வைக்கப்படும் இந்த வரவு-செலவுத்திட்டத்தில், வழமை போல இம்முறையும் பாதுகாப்பு அமைச்சுக்கே கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு 5ஆம் திகதி நிதி அமைச்சரின் வரவு - செல 15

## இலங்கைக்கு கால அவகாசம் வழங்கக்கூடாது

### மாவை சேனாதிராசா

(யாழ்ப்பாணம்)

ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் இலங்கை அரசாங்கத்திற்கு மேலும் கால அவகாசம் வழங்கப்படக்கூடாது என 04

## இலங்கை தொடர்பில் ஆராய ஐ.நாவில் விசேட அதிகாரியை நியமிக்க வேண்டும்

### தமிழ்க் கட்சிகள் கூட்டத்தில் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொடர்பாக ஆராய ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை. விசேட அதிகாரி ஒரு வரை நியமிக்க வேண்டும் என தமிழ்க் கட்சிகள் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. அத்தோடு குறித்த விசேட நபர் ஐ.நா. ஆணையாளருக்கு 6 மாதங்களுக்கு ஒரு முறை அந்த அறிக்கையினை வழங்குவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் தெரி 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532
Viber: 0766363378


## மணமகள் தேவை

83, பரணி, 50 பாவம், To மண மகனிற்கு படித்த மணமகள் தேவை.

**துர்க்கா திருமண சேவை**
0778185978, 0750111122

(7733)

## வீடு விற்பனைக்கு

கட்டுடை, மானிப்பாயில் 5 1/2 பரப்பு காணியில் 6 அறைகளுடன் கூடிய நல்ல நிலையிலுள்ள வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
**077 664 0070**

(7720)

## ஆடு விற்பனைக்கு

முல்லைத்தீவுப் பகுதியில் ஆடுகள் விற்பனைக்கு உண்டு.

**077 168 1697**

(C-5672)

## Room வாடகைக்கு

பாடசாலை மாணவர்கள், வைத்திய தாதிகள், பல்கலைக் கழக மாணவர்கள் தங்குவதற்கு ஏற்ற அறைகள் வாடகைக்கு உண்டு. நல்லூர் ஆலயத்துக்கு அருகில் பாதுகாப்பு வசதி மற்றும் ஏனைய வசதிகளும் செய்து தரப்படும்.

தொடர்பு: **077 791 7753**

(7734)

## Studio Mayu
## வேலையாட்கள் தேவை

மேற்படி தனியார் வீடியோ நிறுவனத்துக்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

01. வரவேற்பாளர் - பெண் (Receptionist)
02. வீடியோ மற்றும் புகைப்பட வடிவமைப்பாளர் - ஆண்/பெண் (Video & Photo Designer)

குறிப்பு : சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
**077 155 2006**

(C-5675)

## சொர்க்கம் திருமண சேவை

கனடாவில் வசிக்கும் 31 வயதுள்ள, செவ்வாய் குற்றம் உள்ள, யாழ் மண மகனுக்கு மணமகளைத் தேடுகின்றோம். கனடாவில் வசிக்கும் 38 வயதுடைய செவ்வாய் குற்றம் இல்லாத மணமகனுக்கு அழகான மணமகளைத் தேடுகின்றோம்.

T.P & Viber: 0014166661855, 0016475043336
Facebook Id: sorkham matrimony

(C-5674)

## வகுப்பு

மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியலாளரால் A/L Physics தமிழ், English மூல வகுப்புக்கள் (Theory மற்றும் Passpaper) தனியாகவோ, குழுவாகவோ நெல்லியடியில் கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
**077 129 8168**

(C-5673)

## London Academy of Beauty Studies
## மகளிருக்கான கற்கை நெறிகள்




Class Time
Week days
weekend

10.03.2019

**NEW BATCH START IN JAFFNA**

Academy Course

அழகுக்கலை
- Diploma in Beauty Culture
- Advance Diploma in Beauty Culture

தையல் கலை
- Diploma in Tailoring
- Free - Patch work, Ribbon work, Smoking work

கேக் ஐசிங்
- Diploma in Icing
- Practise things Free
- 7 types of Icing

சிகை அலங்காரம்
- Diploma in Hair dressing
- Dumi Free

**Professional Bridal Makeup**

| | | |
|---|---|---|
| Theory | Hindu Bridal | Reception Makeup |
| Non HD Makeup | Sinhala Bridal | Party Makeup |
| saree draping | Muslim Bridal | Flower girl Makeup |
| Personal Grooming | Christian Bridal | Hand on practice |

Diploma in sinhala,English, language (students, officers)

Free- Makeup Practice things Free, Hairstyle things Free

**Now Open For Registration Call Now 076 970 7896**

எம்மிடம் பயிற்சி பெறும் மாணவர்கள் சுயவேலைவாய்ப்பு மூலம் 15,000/= முதல் 50,000/= வரை வருமானம் பெறலாம்.
ஒரே தடவையில் முழுக்கட்டணமும் செலுத்துபவர்களுக்கு ரூபா 2,000/= வரை கழிவு
18 வயதிற்கு மேல் வயதெல்லை இல்லை.
குழுக்களாக கற்பிக்கப்படும்.

(7772)

No.58,Palaly Road,Thirunelvely North,Jaffna.
076 97 07 896

## 10-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 30 . 12 . 1989
உதிர்வு 03 . 03 . 2009

### அமரர் சிவகௌரி சிவபாலன்

எமை நீங்கள் பிரிந்து ஆண்டுகள் பத்து கடந்ததுவே
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் எம் நெஞ்சங்களில் உங்கள் நினைவு
என்றென்றும் நிலைத்திருக்கும் எத்தனை பிறவி எடுத்தாலும்
அனைத்திலும் நீங்கள் எம் மகளாய் பிறந்திட வேண்டுமென்று
ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்!

இல.611, 6-ம் யுனிற்,
இராமநாதபுரம்.

உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்...
அப்பா, அம்மா, தம்பி

(C-5671)




**பயிற்சி விற்பனை பிராந்திய முகாமையாளர்**
- க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
- விற்பனை / தனியார் துறையில் 04 வருட அனுபவம்
- அடிப்படை கொடுப்பனவு 60,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்

**முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி**
- க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
- விற்பனை / தனியார் துறையில் 03 வருட அனுபவம்
- அடிப்படை கொடுப்பனவு 40,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்

**உதவி முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி**
- க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
- விற்பனை / தனியார் துறையில் 03 வருட அனுபவம்
- அடிப்படை கொடுப்பனவு 30,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்

**வியாபார அபிவிருத்தி உத்தியோகஸ்தர்**
- க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
- விற்பனை / தனியார் துறையில் 03 வருட அனுபவம்
- அடிப்படை கொடுப்பனவு 25,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்

(C-5661)

**தொழில் வாய்ப்புகள் - யாழ் பிராந்தியம்**

பயிற்சி விற்பனை பிராந்திய முகாமையாளர்
முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி
உதவி முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி
வியாபார அபிவிருத்தி உத்தியோகஸ்தர்

உங்களது சுய விபரக்கோவையினை அல்லது விண்ணப்பங்களை 08 மார்ச் 2019க்கு முன்னர் கீழ்க்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
tharmalingamk@ualink.lk

Great Place To Work · Best Workplaces 2019

139, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

யூனியன் அஷ்யூரன்ஸ்
உங்கள் நாளை நம்பிக்கை, இன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய வழக்குகளை விசாரிக்க தனி விசேட நீதிமன்றம்

(கொழும்பு)

**போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய வழக்குகளை விசாரிக்க தனியான விசேட நீதிமன்றம் ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கவனம் செலுத்தியுள்ளார். இதுபற்றி தான் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.**



போதைப்பொருட்களைக் கட்டுப்படுத்துதல், குற்றங்களைக் குறைத்தல் தொடர்பான சட்ட வரைபுகள் தொடர்பாக நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு நீண்ட காலம் செல்கின்றமை, போதைப்பொருள் ஒழிப்புக்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களுக்கு பெரும் தடையாகவுள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, இந்த நிலைமை விரைவில் சரி செய்யப்பட வேண்டுமென சுட்டிக் காட்டினார்.

தற்போதுள்ள உயர் நீதிமன்ற கட்டடத் தொகுதியிலேயே இந்த புதிய நீதிமன்றத்தையும் ஸ்தாபிப்பது பற்றிக் கவனம் செலுத்தப்பட்டது. போதைப்பொருட்களுடன் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவது தொடர்பாக இன்று நாட்டின் அனைத்து மக்களும் கவனம் செலுத்தி இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இதேநேரம் கைப்பற்றப்படும் போதைப்பொருட்களை அழிப்பது தொடர்பான முறைமைகளைத் திருத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் இந்தக் கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டதுடன், இது தொடர்பில் நடைமுறையிலுள்ள சட்ட ஏற்பாடுகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்காக புனர்வாழ்வு அதிகார சபை ஒன்றை தாபிப்பதற்கான நடவடிக்கைகள் ஜனாதிபதியின் தலையீட்டில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த அதிகார சபையை தாபிக்கும் வரை குறித்த திட்டங்களை தயாரிப்பதற்கு நிர்வாக சபை ஒன்று ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளதுடன், அதன் செயற்பாடுகள் குறித்தும் இதன்போது ஜனாதிபதி கேட்டறிந்தார்.

பாடசாலை மாணவர்கள் பாபுல் போன்ற போதைப் பொருட்களுக்கு அடிமையாகின்ற நிலைமை அதிகரித்து வருவது பற்றியும் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதுடன், சட்ட ஏற்பாடுகள் இல்லாமை இதற்கான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதில் தடையாக உள்ளதாக பாடசாலை அதிபர்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் தன்னிடம் தெரிவிப்பதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, இதற்கான சட்ட திருத்தங்களை மேற்கொள்வது குறித்தும் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

சிறைச்சாலைகளின் பாதுகாப்பு மற்றும் அவற்றில் இடம்பெறும் குற்றங்களைத் தடுப்பது குறித்தும் இதன்போது விசேடமாக கவனம் செலுத்தப்பட்டதுடன், வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள பாரதூரமான குற்றவாளிகளைப் பூசா சிறைச்சாலைக்கு மாற்றுவது தொடர்பிலும் தற்போதைய நிலைமைகளைக் கேட்டறிந்த ஜனாதிபதி, அந்த நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்குப் பணிப்புரை விடுத்தார்.

இந்த நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை கண்டறியும் கலந்துரையாடல் ஒன்றை ஏப்ரல் மாதம் 2 திகதி தனது தலைமையில் மீண்டும் ஏற்பாடு செய்யுமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர். (இ)

## பெற்றோரின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப பாடசாலைகள் இருக்க வேண்டும்

### சுமந்திரன் எம்.பி.சுட்டிக்காட்டு



(கரணவாய்)

பெற்றோர்களின் எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்றவாறு பாடசாலைகளின் தராதரம் இருக்க வேண்டும். அப்படி இருக்கின்ற போதுதான் அவர்கள் நம்பிக்கையோடு பிள்ளைகளை அந்த பாடசாலைகளுக்கு அனுப்புவார்கள் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும் திட்டத்தில் நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலையில் நிர்மாணிக்கப்பட்ட ஆரம்ப கற்றல்வள நிலையத் திறப்பு விழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

இதில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற வேலைத்திட்டத்தை விட அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற கோட்பாடு சிறந்தது.

எங்களுடைய நாட்டிலே நல்ல பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்ப வேண்டும் என்று மிக தூர இடங்களிலுள்ள பாடசாலைகளுக்குப் பெற்றோர்கள் பிள்ளைகளை அனுப்புகிறார்கள்.

அது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியைப் பாதிக்கின்ற ஒன்றாக இருக்கிறது.

பிள்ளைகள் பாடசாலைக்கு நீண்ட தூரம் செல்லாமல் அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலைக்குச் செல்ல வேண்டும்.

கல்வி நடவடிக்கையில் மட்டுமல்ல பாடசாலைகளில் அவர்களுக்கு விளையாட்டு மற்றும் வெவ்வேறு தலைமைத்துவப் பயிற்சியும் இருக்க வேண்டும். வீட்டிற்கு அருகிலே இருக்கிற போதுதான் அதை செய்வது இலகுவாக இருக்கும்.

அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற கோட்பாட்டை செய்வது மட்டும் போதாது. பெற்றோர்களின் எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்றவாறு பாடசாலைகளின் தராதரம் இருக்க வேண்டும். அப்படி இருக்கின்ற போது தான் அவர்கள் நம்பிக்கையோடு பிள்ளைகளை அந்த பாடசாலைகளுக்கு அனுப்புவார்கள்.

எல்லாப் பிரதேசங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சில பாடசாலையையாவது தெரிந்தெடுத்து இந்த விடயத்தில் இணைத்துக் கொண்டு ஒவ்வொரு பிரதேசத்திற்குள்ளும் சிறப்பான பாடசாலையை உருவாக்கும் இவ் வேலைத்திட்டம் வெற்றி பெற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-60)

## கடந்த காலங்களில் வடக்கு - கிழக்கை காட்டி வேறு மாகாணங்களை அரசு அபிவிருத்தி செய்தது

### இராஜாங்க அமைச்சர் விஜயகலா விசனம்



(கரணவாய்)

கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கை காட்டி வேறு மாகாணங்களையே அரசு அபிவிருத்தி செய்ததாக கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் குற்றம்சாட்டினார்.

நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையில் அயலிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும் திட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஆரம்ப கற்றல்வள நிலையத் திறப்புவிழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடளாவிய ரீதியில் 200 பாடசாலைகளில் கட்டடங்களை வைபவ ரீதியாக திறந்து வைத்துள்ளோம்.

யுத்தம் காரணமாக எங்களது கல்வி மந்தநிலையில் இருந்தது. ஏனெனில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த கடந்த அரசு கல்வி ரீதியாக எந்த அபிவிருத்தியும் செய்யவில்லை. ஆனால் இன்று எமது அரசாங்கம் கல்வி ரீதியாக அபிவிருத்தி செய்து வருகிறது.

பாராளுமன்ற உறுப்பினர்கள்,அமைச்சர்கள் சேர்ந்து இந்தக் கட்டடங்களைத் திறந்து வைத்தமை ஐ.தே. கட்சி அரசின் வரப்பிரசாதம்.

கடந்த காலங்களில் பாதிக்கப்பட்ட கிராமம், பிரதேசம், பாடசாலைகளை அபிவிருத்தி சென்றடையவில்லை. இன்றும் எத்தனையோ பாடசாலைகளில் கட்டடங்கள் பற்றாக்குறையாக உள்ளன. அதே போல் ஆசிரியர், தளபாட பற்றாக் குறைகளுடன் இயங்குகின்றன.

போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு 10 ஆண்டுகளில் அந்தந்த அரசாங்கங்களால் நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஆனால் கடந்த காலங்களில் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கை காட்டி வேறு மாகாணங்களே அபிவிருத்தி செய்யப்பட்டன.

அரசியலில் அசம்பாவிதம் ஏற்பட்ட காலத்தில் கம்பரெலிய திட்டத்தில் வடக்கிற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் அந்த 52 நாட்களில் நிதிகளை மாற்றி தங்களது வேலைத்திட்டங்களை செய்துள்ளார்கள். அந்த காலத்தில் ஒதுக்கப்பட்ட நிதி அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்தது.

நல்லாட்சி அரசாங்கம் நிறைய வேலைத்திட்டத்தைச் செய்துள்ளது செய்து கொண்டிருக்கிறது.

யுத்தத்தாலும் அனர்த்தத்தாலும் பாதிக்கப்பட்டும் பராமரிக்கப்படாமலும் இங்கு பாடசாலைகள் இருக்கின்றன.

கடந்த அரசு எமது மாணவர்களுக்குக் கல்வி ரீதியாக எந்த அபிவிருத்தியும் செய்யவில்லை. மாறாக தெற்கில் இருந்து போதைப் பொருட்களையே அனுப்பியது.

வடக்கு-கிழக்கு மாணவர்களைத் தேசிய நிலைக்கு, சர்வதேச நிலைக்கு கொண்டுவரும் திட்டம் ஒன்றைக் கொண்டு வந்துள்ளோம்.

க.பொ.த.சாதாரணதரத்தில் இருந்து உயர் தரத்திற்குச் செல்ல முடியாதவர்களுக்காக 26 கற்கை நெறிகளை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

வலிகாமம், உடுப்பிட்டி, தீவகம் ஆகிய தொகுதிகளில் ஒவ்வொரு தேசிய பாடசாலைகளை கொண்டு வருவோம்.

மருதங்கேணியிலுள்ள மாணவர்கள் கிளிநொச்சி சென்று கல்வி கற்க முடியாத நிலைக்கு இனவாதத்தை தூண்டுகிறார்கள்.

யாழ் மாணவர்கள் அங்கு வந்து குறைந்த புள்ளியிலே பல்கலைக்கழகம் சென்றுவிடுவார்கள் என்ற காரணம்.

குடிநீரையே கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கே எங்களுக்குள்ளே முரண்பாடுகள் இருக்கின்றன. எங்களுக்குக் கல்வி ஒன்றுதான் மிஞ்சப்போகிறது. கல்வியை நாங்கள் தொடர வேண்டும்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சு, செயலாளர்கள் இங்கு என்ன தேவை உள்ளது என்பதை கூறுங்கள் அதற்காக அரசாங்கத்துடன் முரண்பட்டாவது அதனைக் கொண்டு வருவோம்.

நாங்கள் கட்சியை வளர்க்க பாராளுமன்றம் செல்லவில்லை. நீங்கள் தேவைகள் குறித்து எனக்கு எடுத்துக் கூறி எங்களுடன் ஒத்துழையுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-60)

## வெடி கொளுத்தியவரின் கை சிதைவு!

(யாழ்ப்பாணம்)

மூலவெடி கொளுத்தியதில் வலதுகை சிதைவடைந்த நிலையில் ஒருவர் நேற்றுக் காலை யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

[illegible]ந்துமாடிக் குடியிருப்பைச்சேர்ந்த அ.கிஜின்ரோஸ் (வயது-28) என்ற நபரே இவ்வாறு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, குறித்த நபர் நேற்றையதினம்குருநகர்பகுதியில் அமைந்துள்ள கத்தோலிக்க தேவாலய நிகழ்வொன்றில் மூல வெடி பலவற்றை ஒன்றாகச் சேர்த்துக் கொளுத்தியபோது முகத்திலும் கையிலும் படுகாயமடைந்தநிலையில்வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்கந்தா விடாப் பிடி; மகாஜன கடும் பிடி

## வீரர்களின் போர் சமனிலையானது



வெற்றிக் கிண்ணத்துடன் இரு கல்லூரி அணித் தலைவர்கள்

இரசிகர்களுக்கு இறுதிவரை விருந்தளித்த வீரர்களின் போர் பெருந்துடுப்பாட்ட சமர் சமனிலையில் நிறைவடைந்தது. ஸ்கந்தா இறுதிவரை வெற்றிக்காக போராடிய போதிலும் சளைக்காமல் போராடிய மகாஜன வீரர்கள் போட்டியை சமனிலையாக்கினர்.

வீரர்களின் போர் என வர்ணிக்கப்படும் தெல்லிப்பழை மகாஜன கல்லூரி - சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி அணிகளுக்கு இடையிலான வருடாந்த துடுப்பாட்ட சமரின் 19ஆவது அத்தியாயம் நேற்று முன்தினம் ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில் அரங்கேறியது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்கந்தவரோதய கல்லூரியின் பணிப்புக்கு அமைய முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜன கல்லூரி அணி முதல் இன்னிங்ஸில் டான்சனின் துல்லியமான வேகத்துக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் முதல் இன்னிங்ஸில் 144 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

துடுப்பாட்டத்தில் மகாஜனக் கல்லூரி அணி சார்பில் கிரிதரன் 31, வரலக்சன் 25, யு.மதீசன் 19 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டங்களாக பெற்றனர்.

பந்துவீச்சில் ஸ்கந்தவரோதய கல்லூரி அணி சார்பில் எஸ்.டான்சன் 10 ஓவர்கள் பந்துவீசி 6 ஓட்டங்களைக் கொடுத்து 4, எஸ்.பிரசன் 9 ஓவர்கள் பந்துவீசி 20 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த ஸ்கந்தவரோதய கல்லூரி அணிக்கு டிலுக்ஸனின் பொறுப்பான அரைச்சத துடுப்பாட்டம் கைகொடுக்க,




நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்டநேர நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 180 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்றைய 2ஆவதும் இறுதியுமான நாளாட்டத்தில் தமது முதல் இன்னிங்ஸை தொடர்ந்த ஸ்கந்தவரோதய கல்லூரி 59.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 248 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் ஸ்கந்தவரோதய அணி கல்லூரி அணி சார்பில் எஸ்.டிலுக்சன் 61 பந்துகளில் 51, எஸ்.பிரசன் 38 பந்துகளில் 25, எஸ்.சோபிதன் 34 பந்துகளில் 20, ஜே.கலிஸ்ரன் 59 பந்துகளில் 28, டான்சன் 34 பந்துகளில் 25 ஓட்டங்களை எடுத்தனர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க 104 ஓட்டங்களை எடுக்க வேண்டும் என்ற நிலையில் தமது 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த மகாஜனக் கல்லூரி ஆட்டநேர நிறைவில் 78 ஓவர்களைச் சந்தித்து 8 விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களை எடுத்திருந்தபோது போட்டி சமனிலையில் நிறைவடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

துடுப்பாட்டத்தில் மகாஜன கல்லூரி அணி சார்பில் சிவகரன் 24, மதீசன் 21 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டங்களாக எடுத்தனர். (26,105)

**சிறந்த துடுப்பாட்ட வீரராக எஸ்.டிலுக்ஸன் (ஸ்கந்தவரோதய கல்லூரி), சிறந்த பந்துவீச்சாளராக எஸ்.டான்சன் (ஸ்கந்தவரோதய கல்லூரி), சிறந்த களத்தடுப்பாளராக கே.கிருசன் (மகாஜனக் கல்லூரி), சகலதுறை ஆட்டக்காரராக எஸ்.டிலுக்சன் (ஸ்கந்தவரோதய கல்லூரி), போட்டியின் சிறப்பாட்டக்காராக எஸ்.டான்சனும் (ஸ்கந்தவரோதய கல்லூரி) தெரிவாகினர்.**


**பொன்னாவெளி உண்ணாமுலை உமையாள் சமேத அண்ணாமலைச் சிவன் ஆலயம்**

**மகா சிவராத்திரி உற்சவம் 2019**

பூநகரிப் பிரதேசத்தின் பொன்னாவெளிக் கிராமத்தில் அமைந்துள்ள மிகப்பழமையான வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாவெளி உண்ணாமுலை உமையாள் சமேத அண்ணாமலைச் சிவன் ஆலயத்தில் சிவராத்திரி உற்சவம் பரந்துபட்டு வாழும் பொன்னாவெளி மக்களும் ஆலய பரிபாலன சபையினரும் உபயகாரர்களும் அடியார்களும் பொன்னாவெளி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய நிர்வாகத்தினரும் இணைந்து உற்சவத்தை நடத்த அண்ணாமலையான் அருள் பாலித்துள்ளமையால் பக்த அடியார்கள் ஆலயத்துக்கு வருகை தந்து பகல் விசேட அபிசேகத்திலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் இரவுப் பூசையிலும் பங்குபற்றி அண்ணாமலைச்சிவன் அருள் பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**காலையில் அன்னதானம் சிறப்பாக இடம்பெறும்.**
**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**ஆலய பரிபாலன சபையினர்,**
**உபயகாரர்கள்,**
**அடியார்கள்.**

(7726)


## இம்மாதமே...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

போதைப்பொருள் குற்றச்சாட்டுகளில் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டவர்களுக்கு கிரமமான முறையில் மரண தண்டனை நிறைவேற்றப்படவுள்ளது.

பண்டிகை மாதமான ஏப்ரல் மாதம் மற்றும் அதற்கு பின்னர் வெசாக் மற்றும் பொசன் போன்ற விசேட காலங்களாகும்.

இதனால் அதற்கு முன்னர் மரண தண்டனை வழங்குவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

தற்போது அதற்கான ஆவணங்கள் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (ம-3)

## கால அவகாசம்...

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் 40ஆவது ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வில் தமிழர் தரப்பால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக தமிழ் தேசிய கட்சிகள் ஒன்றுகூடி ஆராய்ந்தன. இந்தக் கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள யாழ்பாடி விடுதியில் நேற்று இடம்பெற்றது.

"ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் இலங்கை அரசாங்கத்திற்கு 2 வருட கால அவகாசம் வழங்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். மேலும் ஜெனிவா தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதிலிருந்து இலங்கை விலகுவதை ஏற்றுக்கொள்ள முடியாது" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)




**அருள்மிகு ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில்**
**இணுவில் தெற்கு, யாழ்ப்பாணம்.**

**பெருஞ்சிவனிரவு (மகா சிவராத்திரி) - 2019**

**காலம்: 04.03.2019 (திங்கட்கிழமை)**

★ நாள் முழுவதும் அடியார்கள் தங்கள் கரங்களால் எம் பெருமானுக்கு பால், நீர் கொண்டு திருமஞ்சனம் (அபிடேகம்) செய்தும் வில்வம் முதலான மலர்கள் சாத்தியும் வழிபாடு ஆற்றலாம்.
★ இரண்டாம் கால வழிபாட்டினைத் தொடர்ந்து 1008 சிவனடியார்கள் பால் கொண்டு திருமஞ்சனம் செய்வார்கள் (முற்பதிவு செய்யலாம்)
★ எம்பெருமான் புகழ் பரப்பும் முத்தமிழ் நிகழ்வுகளும் நேர்ன்பின் நிறைவாக மாகேசுர பூசையும் (அன்னதானம்) இடம்பெறும்.

**எம் பெருமானை தெய்வத்தமிழில் வழிபட்டு**
**அருள் நிறையப் பெற்றுய்ய அன்புடன் அழைக்கின்றோம்**

**சைவநெறிக்கூடம்**
**அருள்மிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில் இணுவில்.**
**021 224 3545**

(7732)



*பாராட்டி ஆசிகூறி வாழ்த்துகின்றோம்*



**"சித்தாந்தரத்தினம்"**
**தங்கவடிவேலு தயாபரன்**

திருவாவடுதுறை ஆதீனம் சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையத்தினால் இணுவிலில் நடத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்து இன்று (03.03.2019) ஞாயிற்றுக்கிழமை இணுவில் கந்தசுவாமி ஆலய இளம் தொண்டர் சபை மண்டபத்தில் நடைபெறும் விழாவில் "சித்தாந்த ரத்தினம்" பட்டம் பெறும் திரு.தங்கவடிவேலு தயாபரன் (கோவிற்கடவை, துன்னாலை மத்தி, கரவெட்டி) அவர்களை பாராட்டி ஆசி கூறி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்: சிவஸ்ரீ நா.கலாதரக் குருக்கள்**
**கோவிற்கடவை சித்தி விநாயகர் [illegible]**
**இணுவில் கந்தசுவாமி [illegible] குருமார்கள்**

(C-5678)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேஸ்வரத்தில் சிவலிங்கம் உடைப்பு ஜனாதிபதி உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## கலாநிதி ஆறு.திருமுருகன் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

திருக்கோணேஸ்வரத்தில் சிவலிங்கப் பெருமானை உடைத்தவர்கள் மீது உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.


சரித்திரப் பிரசித்தி பெற்ற திருகோணமலை கோணேஸ்வரர் ஆலய தலைவாசலில் அமைக்கப்பட்ட சைவ மக்களின் பிரதான வழிபாட்டுச் சின்னமாகிய சிவலிங்கத்தை யார் உடைத்தார்களோ அவர்கள் மீது ஜனாதிபதி உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். சைவ மக்களுக்கு அதிர்ச்சி அளிக்கும் செய்தியாக இச் சம்பவம் அமைந்துள்ளது.

நாட்டில் அமைதியும் சமாதானமும் உருவாவதற்கு இடையூறாக இப் பாதக செயல் இடம்பெற்றுள்ளது.

சகல இன மக்களும் தரிசிக்கும் கோணேஸ்வரர் ஆலயத்தின் சிறப்புக்கு எவ்வித இடையூறும் ஏற்படாது காக்க வேண்டியது அனைவரதும் கடமையாகும். இந்து கலாசார அமைச்சர் மற்றும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்விடயம் தொடர்பாக உடன் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் நடைபெறாது இருக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டுகின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

# மக்கள் உணராதவரை நிரந்தரத் தீர்வை வெற்றிகொள்வது சுலபமான காரியமல்ல

## டக்ளஸ் எம்.பி.இடித்துரைப்பு



சுயநலமற்றவகையில் மக்கள் சேவையை மேற்கொள்ளும் தரப்பினரிடம் தமிழ் மக்கள் தமது அரசியல் அதிகாரங்களை வழங்காதவரை எமது இனம் நிரந்தரமான தீர்வை பெற்றுக் கொள்வதென்பது சுலபமானதாக அமையப்பெறாது என எண்ணுவதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சியின் மாவட்ட மற்றும் பிரதேச நிர்வாக செயற்பாட்டாளர்களுடனான விசேட சந்திப்பொன்று நேற்று யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது. இதில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரது செயற்பாடுகளும் கட்சியின் கொள்கை நடைமுறைகளுக்கு இணங்க மக்களது நலன்களை முன்னிறுத்தியதாக அமைய வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும்.

நாம் முன்வைத்துவந்த வழிமுறையையே இன்று தமிழ்த்தரப்பினர் அனைவரும் ஏற்றுக்கொண்டு முன்னெடுத்து வருகின்றனர். ஆனாலும் எமது பொறிமுறைக்கு அவர்கள் இன்னமும் வராதிருப்பதே பல பிரச்சினைகளுக்கு காரணம்.

இலங்கை- இந்திய ஒப்பந்தத்திற்கு முன்னர் இருந்த அரசுகள் தமிழ் மக்களை மாற்றான்தாய் பிள்ளைகளாக பார்த்ததே அன்று எமது இனம் போராட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது.

நாம் பதவிகளுக்காக வெறுமனே வேதமோதும் சாத்தான்கள் கிடையாது. மக்களது தேவைகளையும் அவர்களது அபிலாஷைகளையும் நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளும் பொறிமுறைகளும் எம்மிடம் உள்ளன. ஆனாலும்அதைநிறைவு செய்து கொடுப்பதற்கான அரசியல் அதிகாரம் எம்மிடம் போதாமல் இருப்பதே அதை முழுமையாக செயற்படுத்தி சாதித்துக்காட்ட முடியாதுள்ளது.

முயற்சிகள் என்பது ஒவ்வொரு வெற்றியினதும் படிக்கற்களாகவே இருந்துள்ளதாக வரலாறுகள் சொல்கின்றன. அந்தவகையில் நாம் எமது மக்களின் அபிலாஷைகளை வெற்றிகொள்ளும் முயற்சிகளை மேற்கொள்வதில் இடையூறுகள் வரலாம் ஆனால் அவற்றை எல்லாம் தாண்டி இன்று வரை பல தேவைப்பாடுகளை செய்து சாதித்துக் காட்டியிருக்கின்றோம்.

அதுமட்டுமல்லாது நாம் மக்களுக்காக முன்னெடுக்கும் ஒவ்வொரு செயற்பாடுகளும் நன்கு உழுது பண்படுத்திய நிலத்தில் தான் விதைத்து பயன்களை பெற்றுக்கொடுத்து வருகின்றோம்.

அந்தவகையில் மக்கள் தமக்கான அரசியல் தீர்வையும் அபிவிருத்திசார் தேவைகளையும் பெற்றுக் கொடுக்கக்கூடிய தரப்பாக எம்மிடம் அரசியல் அதிகாரங்களை வரவுள்ள சந்தர்ப்பத்தில் தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அவ்வாறு வழங்கும் பட்சத்தில் நிச்சயம் நாம் குறுகிய காலத்தில் தமிழ் மக்களது அனைத்துப் பிரச்சினைகளுக்குமான தீர்வுகளை வென்றெடுத்துக் காட்டுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 15 06 1940

இறப்பு 13 03 2018

அமரர் **துரைராசா வியாழாச்சி** (துரையம்மா)

(திதி:- துவாதசி-03.03.2019)

ஆண்டொன்று ஆனதம்மா- உன் அழகு முகம் காணாமல் ஏங்குகின்றோம்
பாரில் எமைத் தவிக்க விட்டு- நீ எங்கேதான் சென்றாயோ?
அழுவதற்குக் கண்ணீர் இல்லை- இனி எமை ஆற்றுவார் யாருமில்லையம்மா
ஒருமுறை வந்து விடு உன் அழகு முகம் கண்டு விட!

உடுவில் தெற்கு, புதுமடம்,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.
075 440 0169


# இராசி பலன்

**மீனம்:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலை மோதும் நாள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், போசன சுகமுண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மேடம்:** வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம், ஆரோக்கியமான நாள்.

**இடபம்:** அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்:** எந்தக் காரியத்திலும் நிதானத்துடன் நடந்து கொள்வது நல்லது, தேக நலனில் கவனம் செலுத்த வேண்டிய நாள், வேலைச்சுமை அதிகரிக்கும், பிரயாண பயமுண்டு.

**கும்பம்:** வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், உறவினர்களின் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்படலாம்.

**கடகம்:** நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நட்பு கிடைக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொண்டு மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு, புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**மகரம்:** உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், தொட்ட காரியங்களில் வெற்றிபெற- பரம்பொருளை வழிபட வேண்டிய நாள்.

**சிம்மம்:** கௌரவமான நாள், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும்.

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | செவ் | | ராகு |
| சூரி, புத | இராசி பலன் | | |
| சுக், சந் | | | |
| சனி, கேது | குரு | | |

சந்திராஷ்டமம் - புனர்பூசம்

**03.03.2019**

மாசி 19, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.24 மணிக்கு
துவாதசி பிற்பகல் 3.57 மணிவரை
உத்தராடம் முற்பகல் 11.09 மணிவரை
சுபநேரம் 9.27-6.27 மணிவரை
இராகுகாலம் 4.57-6.27 மணிவரை
பிரதோச விரதம்

வளவன்

**தனுசு:** நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறியுண்டு, செய் தொழில் மேன்மையுண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**விருச்சிகம்:** பொதுவாழ்வில் புகழ்கூடும் நாள், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பயணங்களால் பலலுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**துலாம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வாகன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் அதிக [illegible] காட்டுவீர்கள்.

**கன்னி:** மனநிறைவு கூடும் நாள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரங்குகளின் தொல்லையைக் கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

வரணியில் உள்ள பல கிராம சேவையாளர் பிரிவுகளிலும் அண்மைக்காலமாக குரங்குளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக பொதுமக்கள்கவலைதெரிவித்துள்ளனர்.

குறிப்பாக இடைக்குறிச்சி, மாசேரி போன்ற கிராம சேவையாளர் பிரிவுகளில் குரங்குகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். மக்கள் விவசாயம் செய்ய முடியாதுள்ளதாகவும் அத்துடன் உணவுப் பயிர்களை அழிப்பதாகவும் வீட்டுக்கூரைகளை சேதப்படுத்துவதாகவும் பாடசாலை செல்லும் மாணவர்களை துரத்துவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதுமட்டுமன்றி வீடுகளுக்குள் புகுந்து உணவுப் பொருட்களையும் மரக்கறிகளையும் உண்பதாகவும் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதுதொடர்பாக கடந்த காலங்களில் உரிய அதிகாரிகளுகன்கு தெரியப்படுத்தியமையால் குரங்குகளைப் பிடிப்பதற்காக கூண்டுகள் வழங்கப்பட்டன. பின்பு அவற்றை விடுவிப்பதற்கான ஒழுங்குகளில் பிரச்சினைகளை ஏற்பட்டன.

இதனால் கூடுகள் மீளவும் பெறப்பட்டன. இதனால் குரங்குகளின் பெருக்கம் அண்மைக்காலத்தில் அதிகரித்துள்ளது. எனவே குரங்குத்தொல்லையைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய அதிகாரிகள் மீளவும் நடவடிக்கையெடுக்க வேண்டும் என கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-103)





# யாழ்.பிரதேச செயலாளராக சாம்பசிவம் சுதர்சன் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பிரதேச செயலராக, யாழ்.மாவட்ட செயலக உதவி மாவட்ட செயலராக பணியாற்றி வந்த சாம்பவசிவம் சுதர்சன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு யாழ்.மாவட்ட செயலக உதவித்திட்டப் பணிப்பாளராக இணைந்து கொண்ட இவர், மாவட்ட செயலக புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தின் உதவித்திட்ட பணிப்பாளராக பணியாற்றினார். மீள் எழுச்சித்திட்டம், வடக்கின் துரித மீட்சித் திட்டம் என்பவற்றின் பிரதித்திட்டமிடல் பணிப்பாளராகப் பணியாற்றியதுடன் 2013 ஆம் ஆண்டு உதவி மாவட்ட செயலராக நியமிக்கப்பட்டார்.



2016 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவை தரம் ஒன்றுக்கு தெரிவு செய்யப்பட்ட இவர் அமெரிக்க சிராக்கியூஸ் பல்கலைக்கழகத்தில் புலமைப்பரிசில் பெற்றுச் சென்று பொது நிர்வாக உயர் கற்கைகளுக்கான சான்றிதழை கடந்த வருடம் பெற்றிருந்தார். இவர் மாவட்ட செயலகத்தில் இருந்து விடைபெற்று நேற்று முன்தினம் யாழ்ப்பாண பிரதேச செயலராக தனது கடமைகளை பொறுப்பேற்றார். (5-9)

# யோகாப் பயிற்சி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.யோகா உலகம் நல்லூர் தேரடிஅருகே63நாயன்மார் குருபூசை மண்டபத்தில் புதிய யோகா பயிற்சி நெறிகளுக்கான அறிமுகநிகழ்வு இன்று 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் யோகா உலகம் அமைப்பின் இயக்குநர் சி.உமாசுதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகின் தலைவர் வைத்தியகலாநிதி திருமதி.விவியன் சத்தியசீலன் விசேட கருத்துரையும் அனுபவப் பகிர்வை யோகசீலனும் வழங்குவர்.

யோகா வகுப்புக்கள் காலை மற்றும் மாலை வேளையில் 6 மணி தொடக்கம் 7 மணிவரை இரு பிரிவுகளாக ஒரு மாதம் தினமும் நடைபெறும். இவை தவிர்ந்த நேரங்களிலான வகுப்புக்களுக்கான பதிவுகளையும் மேற்கொள்ளமுடியும்.

ஆரோக்கியத்திற்கு அவசியமான ஆசனம், பிராணாயாமம், தியானம்மற்றும்சாந்த வழிமுறைகள் அனுபவம் உள்ள ஆசான்களால் நுணுக்கமாக பயிற்றுவிக்கப்படுவதுடன் நோயாளர்களுக்கு விசேட கவனம் செலுத்தப்பட்டு மருத்துவர்களின் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

யோகாப் பயிற்சிநெறியில் இணைய விரும்புபவர்கள் அறிமுக நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு யாழ். யோகா உலகப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (5)

# விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

வீட்டு மின் இணைப்பு, இரண்டாம் மொழி சிங்களம், அலங்காரப் பொருள் உற்பத்தி (சிரட்டை) ஆகிய பயிற்சி நெறிகளை போதிப்பதற்கு தகுதி வாய்ந்த போதனாசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி வடமராட்சி பிரதேசத்திற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தினை சுயமாகத் தயாரித்து எதிர்வரும் 2019.03.10 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் யோ. ரவீந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார். (5)

# ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தென்னிந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள கலாநிதி தமிழருவி பேராசிரியர் வே.சங்கரநாராயணனின் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வுகள் இன்று 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை நல்லூர் துர்க்கா மணிமண்டபத் தில் நடைபெறும் என திணைக்களத்தின் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இச் சிறப்பு சொற்பொழிவு நிகழ்வில் இந்துசமய அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களும் ஆன்மீகப் பிரசாரக மாணவர்களும் பங்குகொள்ளவுள்ளார்கள் என வட பிராந்திய அலுவலக அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.செந்தூரன் தெரிவித்துள்ளார்.(5)

# மொழியுரிமைப் போராளி கோடீஸ்வரனுக்கு வடக்கு மேல் நீதிமன்றில் சிறப்பு அஞ்சலி அமர்வு



(யாழ்ப்பாணம்)

தமிழ் மொழியுரிமைப் போராட்ட வரலாற்றில் தடம் பதித்த வரலாற்று நாயகன் மூத்த சட்டத்தரணி செல்லையா கோடீஸ்வரன் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் வடக்கு மாகாண மேல் நீதிமன்றின் சிறப்பு அமர்வு நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாண நீதிமன்ற கட்டடத்தொகுதியில் ஆரம்ப மாகி இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் தலைமையில் கூடிய இந்த சிறப்பு மேல் நீதிமன்ற அமர்வில் மறைந்த மூத்த சட்டத்தரணி செல்லையா கோடீஸ்வரனுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

அமர்வில் யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி தாவூத் லெப்பை அப்துல் மனாப், யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி விநாயகமூர்த்தி இராமகமலன், யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன், தொழில் நியாய சபையின் தலைவர் வெள்ளத்தம்பி முகமெட்சியான் மற்றும் சட்டத்தரணிகள், சட்டத்தரணி செல்லையா கோடீஸ்வரனின் இளைய புதல்வர் மருத்துவர் கே.சிவகுமார் உள்ளிட்ட உறவினர்கள் பற்கேற்றனர்.

அமர்வின் ஆரம்பத்தில் யாழ்ப்பாண மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சுப்பிரமணியம் பரமராசா இரங்கல் உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் இரங்கல் உரையாற்றினார். (5-9)

# ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிதெற்குஅறுகுவெளிப் பகுதியில் மக்கள் பங்களிப்புடன் அமைவுறும் உப்பளத்துக்கான ஆலோசனைக் கூட்டம் கடந்த 28 ஆம் திகதி கொடிகாமம் சாவகச்சேரி பிரதேச மண்டபத்தில் சாவகச்சேரி பிரதேச சபை பிரதித் தவிசாளர் செ.மயூரன் தலைமையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த இடைக்குறிச்சி, மாசேரி, வடவரணி, நாவற்காடு, குடமியன், இயற்றாலை, தாவளை இயற்றாலை, மந்துவில் கிழக்கு, மந்துவில் மேற்கு, மந்துவில் வடக்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பயனாளிகள் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வின் வளவாளர்களாக ஆனந்தா சோல்ற் நிறுவன நிதி ஆலோசகர் வி.அருளானந்தம் மற்றும் யாழ். பல்கலைக்கழக முன்னாள் விவசாயபீடாதிபதி பேராசிரியர் அ.நவரட்ணராஜா ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகள்ள வழங்கினர். (5-10)

# மல்லாகம் மாவட்ட நீதவான் நீதிமன்ற வாகன ஏலவிற்பனை அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பல்வேறு வழக்குகளுடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகள், ஹயஸ் வாகனங்கள், இரு சக்கர உழவு இயந்திரங்கள், உழவு இயந்திரம், கன்டர் ரக வாகனம், பட்டா ரக வாகனங்கள், துவிச்சக்கரவண்டிகள், லொறி வாகனம் உள்ளிட்ட அனைத்து வாகனங்களினதும் உரிமையாளர்கள் தங்களது உரிமைக் கோரிக்கைகளை எதிர் வரும் 29ஆம் திகதிக்கு முன்னதாக நீதிமன்ற பதிவாளரைத் தொடர்பு கொண்டு முன்வைக்குமாறும் உரிமை கோரப்படாத சகல விதமான வாகனங்களும் அரசுடைமையாக்கப்பட்டு பகிரங்க ஏலத்தில் விற்கப்படுவதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்ப டும் என்பதையும் மல்லாகம் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (5)



மாணவர் மற்றும் இளைஞர், யுவதிகளுக்கான உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி தகவல்கள் அடங்கிய கையேடு வெளியீட்டு வைபவம் கடந்த வியாழக்கிழமை சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் கலந்து சிறப்பித்தார். (படங்கள்:-அராலி செய்தியாளர்)



அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும் திட்டத்தில் நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையில் நிர்மாணிக்கப்பட்ட ஆரம்ப கற்றல்வள நிலைய திறப்புவிழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. ஆரம்ப கற்றல் வள நிலையத்தை கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் [illegible] ஆகியோர் திறந்து வைத்தனர். (படங்கள்:-[illegible] செய்தியாளர்)

# சிவராத்திரியை முன்னிட்டு விசேட போக்குவரத்துச்சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தில் நாளை மறுதினம் 4 ஆம் திகதி இடம்பெறும் மகாசிவராத்திரி விரத்தினை மேற்கொள்வோருக்கான விசேட பயண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் 768 வழி இலக்கமுடைய பேருந்து சுன்னாகம், அளவெட்டி ஊடாகவும் 769வழிஇலக்கமுடைய பேருந்து காங்கேசன் துறை பிரதான வழியூடாகவும் ஆலயத்தைச் சென்ற டையும்.

இரவு நேரப் பேருந்து சேவைகள்யாவும் யாழ்.பஸ் தரிப்பிடத்தில் இருந்து ஆரம்பமாகும். அதேவேளை மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வழிபாட்டில் கலந்து கொள்ளும்பக்தர்களுக்கும் விசேட பேருந்து சேவை மேற்கொள்ளப்படுமென யாழ்.சாலை நிர்வாகம் மேலும் தெரிவித்துள்ளது. (5-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஞ்சனின் சொத்து விபரம் வெளியீடு



(கொழும்பு)

தனது சொத்து விபரங்களை பகிரங்கமாக வெளியிட்ட வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்த ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களைத் தொடர்ந்து நேற்று முன்தினம் ரஞ்சன் ராமநாயக்கவும் தனது சொத்து விபரங்களை வெளியிட்டு ஆறாவது பாராளுமன்ற உறுப்பினராக இணைந்து கொண்டார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான வாசுதேவ நாணயக்கார ரூபவ் தாரக பாலசூரிய, விதுர விக்கிரமநாயக்க, எம்.ஏ.சுமந்திரன் மற்றும் எரான் விக்கிரமரத்ன ஆகியோர் தமது சொத்து விபரங்களை கடந்த வியாழக்கிழமை பகிரங்கமாக வெளியிட்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரின் சொத்து விபரங்கள் பொதுமக்கள் மத்தியில் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் அமைப்பு கடந்த காலங்களில் தொடர்ந்து வலியுறுத்தி வந்தது.

அதுமாத்திரமன்றி கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 9ஆம் திகதி சொத்து விபரங்களைப் பகிரங்கப்படுத்துமாறும் அது தொடர்பில் மக்கள் தமது பிரதிநிதிகளுக்கு அழுத்தம் வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தி விழிப்புணர்வூட்டும் வகையிலான விளம்பரமொன்றை ஊடகங்கள் வாயிலாக விடுத்திருந்தது.

அந்தவகையில்தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐவர் தமது சொத்து விபரங்களை கடந்த வியாழக்கிழமை நிப்பொன் ஹோட்டலில் ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போது பகிரங்கமாக வெளியிட்டதுடன் அதனை மக்களும் பார்வையிட முடியும் என அறிவித்தனர்.

அவர்களைத் தொடர்ந்தே தற்போது ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவும் தனது சொத்து விபரங்களை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ)

## ஐஸ் போதைப்பொருளுடன்

# இம்ரானுக்கு நெருக்கமான மற்றுமொருவர் கைது

(கொட்டாஞ்சேனை)

டுபாயில் கைது செய்யப்பட்டுள்ள கஞ்சிபான இம்ரானுக்கு நெருக்கமான முக்கிய நபர் ஒருவர் ஐஸ் போதைப் பொருளுடன்கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் திட்டமிட்ட குற்றத் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் படி நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் 2080 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளும் வாள் ஒன்றும் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் நீண்ட காலமாக ஐஸ் வகைப் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வருவது தெரிய வந்துள்ளதாக பொலிஸ் விஷேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக கொட்டாஞ்சேனை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.(இ)


## புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 2019 March 5th-100hrs

Main Office: Weekday weekend 9.00 AM to 12.30 PM

➢Spoken/Business English with Soft Skill & Career Guidance.
காரியாலய, வியாபார, ஆங்கிலம். நுண்திறனும் தொழில் வழிகாட்டியும்

➢Ms Office- ICT, equivalent to NVQ 3

100% வரை புலமைப்பரிசில் வழங்கப்படும் இப்போதே பதிவுசெய்யவும்

For admissions please contact the Director 0776505580 or Chairman. 0768525406 NTI Main Office : Northern Technical Institute PVT 121637 Jaffna YMCA building
107, 2/1, Kandy Rd, Classes at Regional Office ; From 03 to 06PM or 02 to 05PM

| Regional Office I | Regional Office II | Regional Office III |
|---|---|---|
| சனசமூக நிலையம் பாண்டவெட்டை சுழிபுரம் 077 009 5294 | அறவளிக்குழு No 29 கண்டி வீதி,நுணாவில். சாவகச்சேரி 076 690 0867 | Navaly YMCA, Prasad Rd , Navaly. 077 133 1526 |

(7702)

## பணிப்பெண் தேவை

- பிறவுண் வீதியில் உள்ள மூன்று பேர் கொண்ட வீட்டில் தங்கி நின்று வேலை செய்யவும்
- நல்லூர் பகுதியில் உள்ள வீட்டில் காலை வந்து மாலை செல்லவும் பணிப் பெண்கள் தேவை.

சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு : 076 142 3233

(7714)

## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாககணித்துத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:
076 835 1932, 021 223 2222

(7292)

## Vacancies

**Account assistant (Female-Below 28 Years of Age)**

➢ A/L பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
➢ குறித்த துறையில் முன் அனுபவம் இருப்பது விரும்பத்தக்கது.

**Receptionst (Female-Below 28 Years of Age)**

➢ A/L பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
➢ குறித்த துறையில் முன் அனுபவம் இருப்பது விரும்பத்தக்கது.

**Computer Hardware & CCTV Security System (Male-Below 30 Years of Age)**

➢ NVQ4 அல்லது அதற்குச் சமனான தொழில் பயிற்சி சான்றிதழ்.
➢ Computer, Laptop, CCTV Camera திருத்துவதில் 2 வருட அனுபவம்
➢ செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் தங்களின் சுயவிபரக்கோவையினை (தொலைபேசி இலக்கம் உட்பட) northlead@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு 08.03.2019 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

North Lead Computer Sales & Service
No: 253, Stanly Road, Jaffna.
Tel : 021 221 6980, MOB : 077 253 3390

பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

(C-7590)

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களுக்கும் மூன்று பொழுதில் பலன்

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 4<br>கி.பா:7 3/4 செவ் 12 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L,வியாபாரம்<br>எதிர்பார்ப்பு:O/L<br>தொ.இ: B/796 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>கி.பா: 34<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L,அரசஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/2722 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 3<br>கி.பா: 25<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்HND(QS),B.Sc,Manager<br>எதிர்பார்ப்பு: A/L,பட்டதாரி<br>தொ.இ: B/813 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 13<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:Bio Medicine, Uk PR<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, Uk PR<br>தொ.இ: G/2725 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம் 2<br>கி.பா: 24செவ் 2 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:B.Sc, BED,MED அரச ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:A/L<br>தொ.இ: B/823 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்திராடம் 1<br>கி.பா: 11<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: HNDA, அரச அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>தொ.இ: G/2744 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 4<br>கி.பா: 88 செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:MBBS Doctor<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/831 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 3<br>கி.பா: 23 செவ் 8 இல்<br>தகைமை/தொழில்:A/L , CIMA ii<br>எதிர்பார்ப்பு:A/L,அரசதனியார் சொந்த தொழில்<br>தொ.இ: G/2761 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## விளையாட்டு விருதுகள் விழா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விருதுகள் விழா 03.03.2019 (ஞாயிற்றுக்கிழமை) அன்று பி.ப 4.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர். இரட்ணம் விக்னேஸ்வரன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 2017ஆம் ஆண்டிற்கான விளையாட்டு அணிகளை பிரதிநிதித்துவப்படுத்திய மாணவர்களை அன்று பி.ப 3.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கிற்கு தவறாது வருகை தருமாறு வேண்டிக் கொள்கிறோம்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(C-5644)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் இறைமையைப்பாதுகாக்கும் விமானப் படைக்கு ஜனாதிபதி பாராட்டு

(ஹிங்குராங்கொட)

68 வருட காலமாக தாய் நாட்டின் இறைமையையும் பௌதீக ஒருமைப்பாட்டை யும் பாதுகாப்பதற்காக இல ங்கை விமானப்படை மேற் கொண்டுவரும் பணிகள் பாராட்டத்தக்கதாகுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்று ஹிங்குராங்கொட விமானப் படை முகாமில் கோலாகலமாக இடம்பெற்ற இலங்கை விமானப் படை யின் 68 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இவ்வருடம் விசேட கண் காட்சி மற்றும் களியாட்ட நிகழ்வுடன் இடம்பெறும் இந்த ஆண்டு நிறைவு விழா வில், விமானப் படையின் இல.07 ஹெலிகொப்டர் பிரிவு மற்றும் இலக்கம் 08 மென் போக்குவரத்து பிரிவு என்பன தேசத்திற்கு மேற் கொண்ட முக்கிய பணி களை பாராட்டி ஜனாதி பதி விருதுகள் வழங்கப்பட் டன.

தொழில் திறன்கள், தொழில் நுட்ப அறிவு, ஒழு க்க பண்பாடு, அர்ப்பணிப்பு ஆகிய உயர்ந்த பண்புகளு டன் உலகின் முன்னணி விமானப் படைகளுக்கு நிக ராகச் செயற்படும் இயலு மையும் தொழில்நுட்ப திறன் களும் எமது விமானப் படை யினரிடம் உள்ளதென்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித் தார். நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்த மற்றும் அங்கவீனமுற்ற படையின ருக்கும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் ஜனா திபதி தனது நன்றியை தெரிவித்தார்.

நேற்று முற்பகல் ஹிங் குராங்கொட விமானப்படை முகாமுக்கு சென்ற ஜனா திபதியை விமானப் படை தளபதி எயார் மார்ஷல் கபில ஜயம்பதி வரவேற் றார். அதனைத் தொடர்ந்து ஜனாதிபதிக்கு விசேட அணிவகுப்பு மரியாதையும் வழங்கப்பட்டது.

இலங்கை விமானப் படையின் 68 ஆவது ஆண்டு நிறைவுடன் இணைந்ததாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள Air Tattoo - 2019 விமானப் படை கண்காட்சி மற்றும் களியாட்ட நிகழ்ச்சி ஜனாதி பதியால் திறந்து வைக்கப்ப ட்டது.

கண்காட்சியைத் திறந்து வைத்த ஜனாதிபதி, அத னைப் பார்வையிட்டதுடன், விமானத்தின் மூலம் விதை களைத் தூவுவது தொடர் பாக அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி கூடத்தையும் பார்வையிட்டார். அதேபோ ன்று விமானப் படையின் பயிற்சி நிலையத்தினால் அமைக்கப்பட்டிருந்த கண் காட்சி கூடத்திற்குச் சென்ற ஜனாதிபதிக்கு பயிற்சி நட வடிக்கைகள் தொடர்பான நூலொன்றும் கையளிக் கப்பட்டது. அங்கு ஜனாதி பதி புதிய இணையத்தள மொன்றையும் திறந்து வைத்தார்.

இன்று முதல் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை ஹிங் குராங்கொட விமானப் படை முகாம் வளாகத்தில் இடம் பெறும் இக்கண்காட்சியில் விமானப் படையின் பணி கள் மற்றும் விமானப் படை யிடமுள்ள வளங்கள் காட் சிப்படுத்தப்படவுள்ளதுடன், மக்களுக்கு திடீர் அனர்த்த நிலைமைகள் ஏற்படும்போ தும் இயற்கை அனர்த்தங் களின்போதும் விமானப் படையினர் செயற்படும் விதம் தொடர்பாகவும் விளக்கம ளிக்கப்படும்.

மேலும் விமான சாக சங்கள், பரசூட் காட்சிகள், விமானப் படை விசேட பிரிவுகளினால் மேற்கொள் ளப்படும் சில தரைப் போரா ட்டக் காட்சிகள், விமானப் படை நாய்களின் சாகச காட்சிகள், பாண்ட் வாத்திய காட்சிகள், கலாசார மற்றும் இசை நிகழ்ச்சிகளும் இங்கு இடம்பெறவிருக்கின்றன.

தினமும் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் களியாட்ட நிகழ்ச்சி இரவு 12 மணி வரை இடம்பெ றும்.

இது பொதுமக்களுக் காக கட்டணமின்றி இலவச மாக இடம் பெறவுள்ளது.

இலங்கை விமானப் படை அதன் 68 ஆவது ஆண்டு நிறைவை முன் னிட்டு அதன் திறமைகளை வடமத்திய மாகாணத்தி லுள்ள மக்களுக்கு கண்டு களிப்பதற்காக ஏற்பாடு செய் துள்ள சிறந்தோர் வாய்ப் பென்ற வகையில் இதனை கண்டுகளிக்க வருகை தரு மாறு அனைத்து பொதுமக் களுக்கும் அழைப்பு விடுத் துள்ளது.

பாதுகாப்பு பணிக்குழாம் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, இராணு வத் தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஷ் சேனநா யக்க ஆகியோர் உள்ளிட்ட பாதுகாப்புத்துறை சிரேஷ்ட அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (இ-9)


## பாரம்பரிய விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கரணவாய் கிழக்கு கல ட்டி ஐக்கிய சனசமூக நிலை யம் நடத்தும் "பாரம்பரிய விளையாட்டு விழா" இன்று 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கி ழமை பிற்பகல் 2.30 மணி யளவில் சனசமூக நிலைய முன்றலில் தலைவர் க.திரு மாலழகன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பரந்தன் அரச விதை உற்பத்திப் பண்ணை முகாமையாளர் சி.ஸ்ரீதரன், சிறப்பு விருந்தி னர்களாக திடீர் மரண விசாரணை அதிகாரியும் செலிங்கோ ஆயுள் காப் புறுதி முகாமையாளருமான வே.பாஸ்கரன் (ஜே.பி.) யாழ்.மாவட்ட செயலக உதை பந்தாட்ட பயிற்றுநர் பா.முகு ந்தன், கௌரவ விருந்தினர் களாக கணக்காளர் ச.நகு லேஸ்வரன், யாழ்.சிறுப்பிட்டி இ.த.க.பாடசாலை அதிபர் ந.கிருஸ்ணகுமார், K.V. thash, Electrical & Plum bing works உரிமையாளர் கு.விநாயகதாசன், Yarl Bike Zone உரிமையாளர் க.சுதர் சன் ஆகியோர் கலந்து கொள் வர். (இ-5)

## மோட்டார் சைக்கிள் விபத்து தாயும் பிள்ளையும் காயம்



(கரணவாய்)

மோட்டார் சைக்கிள்கள் இரண்டு மோதி விபத்திற் குள்ளானதில் தாயும் பிள் ளையும் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்க ப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுச் சனிக்கிழமை முற்பகல் யாழ்ப்பாணம்-பருத்தித்துறை பிரதான வீதியிலுள்ள சாரையடிப் பகுதியில் இவ் விபத்து இடம் பெற்றது.

இதில் துன்னாலை கிழக் கைச் சேர்ந்த நிசாந்தன் தர்சினி (வயது-33),அவ ரது பிள்ளை சுஞ்சிகா (வயது -5) ஆகிய இருவரும் படு காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதாரவைத் தியசாலையில் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டனர்.

இவ்விபத்துத் தொடர் பில் பருத்தித்துறை போக்கு வரத்து பொலிஸார் விசார ணைகளை மேற்கொண் டுள்ளனர். (5-60)

## மீள்குடியேற்ற கருத்திட்டத்தில் கல்வி அபிவிருத்திக்கு முன்னுரிமை

(ஏறாவூர்)

தேசிய கொள்கைகள் பொருளாதார விவகாரம், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடமா காண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிரு த்தி மற்றும் இளைஞர் விவ காரங்கள் அமைச்சின் கீழ் முன்னெடுக்கப்பட்ட கருத் திட்டங்களில் பின்தங்கிய பாடசாலைகளை அபிவிரு த்தி செய்கின்ற வேலைத் திட்டத்திற்கு அதன் மூலம் மாகாணங்களில் கல்வித் தரத்தினை முன்னேற்று கின்ற வேலைத்திட்டங்க ளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பிரதமர் ரணில் விக்கி ரமசிங்க இவ்வமைச்சின் அமைச்சர் என்ற வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுத்த 3 பாடசாலை களுக்கான கட்டட, உபக ரண, விஞ்ஞான ஆய்வு கூடங்கள் என்பவற்றை கையளிக்கும் வைபவங்கள் கடந்த 28 ஆம் திகதி மட் டக்களப்பில் இடம்பெற்றன.

இவற்றில் வாழைச் சேனை இந்துக் கல்லூரிக்கு விஞ்ஞான ஆய்வு கூடம் வழங்கப்பட்டது. மேலும் கொம்மாதுறை சித்திவிநா யகர் பாடசாலைக்கு புதிய கட்டடத் தொகுதி ஒன்றும் நெடியமுனை அ.த.க. பாடசா லைக்கு புதிய கட்டடத்தொகுதி ஒன்றும் அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்ட வைபவ மும் இடம் பெற்றது. இம் மூன்று செயற்றிட்டங்களுக் கும் மொத்த முதலீடு ரூபா. 26 மில்லியன் ஆகும். இக்கட்டடத் திறப்பு விழாவி லும் ஆய்வுகூட கையளிப் பிலும் அமைச்சின் செயலாள ருமான வே.சிவஞானசோதி, மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகே ஸ்வரன், ஞா.சிறீநேசன், பாடசாலை அதிபர்கள், உப அதிபர்கள், வலய கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி பணிப்பாளர்கள் உட் பட பலரும் கலந்து கொண் டனர். (இ-9)

## சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்க ணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வ ரர் ஆலய மஹா சிவராத்திரி விரத உற்சவம் நாளை 4 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4.30 மணியளவில் ஆரம்பமாகி நான்கு சாமப் பூஜைகளும் நடைபெறும்.(5)

■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■

(யாழ்ப்பாணம்)

நல்லூர் நாயன்மார்க ட்டு அரசடிப் பிள்ளையார் ஆலய் மகா சிவராத்திரி விழா நாளை 4 ஆம் திகதி திங்கட் கிழமை மாலை நடைபெறும். இதில் விசேட பூஜைகளும் பொங்கல் நிகழ்வும் இடம் பெறும். (5)

## விசேட சிற்றூர்திச் சேவை

(யாழ்ப்பாணம்)

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நாளை திங்கட் கிழமை கீரிமலை நகுலே ஸ்வரர் ஆலயத்திற்குச் செல் லும் பக்தர்களின் நலன் கருதி யாழ்ப்பாணத்திலி ருந்து காங்கேசன்துறைக்கு 769 ஆம் இலக்க வழிப் பாதை ஊடாகச் செல்லும் சிற்றூர்திகள் விசேட சேவை யில் ஈடுபடுத்தப்படுமென 769 சிற்றூர்திச் சேவைக் கம் பனி அறிவித்துள்ளது. (5-9)

## வலயமட்ட மெய்வல்லுநர் அரை இறுதிப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையி லான வலயமட்ட மெய்வல் லுநர் போட்டியின் அரை இறுதிப் போட்டிகள் நாளை மறுதினம் 5 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை வரணி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறு மென தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந் தரசிவம் தெரிவித்துள்ளார்.

மேலும் வலயமட்ட மெய் வல்லுநர் போட்டிகளின் இறுதிப் போட்டிகள் எதிர் வரும் 9 ஆம் திகதி சனிக் கிழமை இடம்பெறுமென அவர் மேலும் தெரிவித் தார். (5-10)

## மகளிர் மாநாடு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தின த்தை முன்னிட்டு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் (அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்) மகளிர் அணி யின் ஏற்பாட்டில் இன்று 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் வீரசிங்க மண் டபத்தில் மகளிர் மாநாடு நடைபெறும். (5)



வடக்கு-கிழக்கு மாகாண அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் கீழ் யாழ்.தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் சேவையை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட அதிதீவிர சத்திரசிகிச்சைப்பிரிவிற்கென அமைக்கப்பட்ட ஓட்சிசன் விநியோகத்தொகுதிக்கூடம் மற்றும் முழு வைத்தியசாலைக்குமான இரண்டு பாரிய மின்பிறப்பாக்கி இயந்திரங்களைக் கொண்ட மின் பிறப்பாக்கி தொகுதி மற்றும் வைத்தியர்களுக்கான கடமை அலுவலகம் என்பன நேற்றுத் திறந்து வைக்கப்பட்டன. தெல்லிப்பழை வைத்தியசாலை அத்தியட்சகர் யோ.திவாகர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடக்கு-கிழக்கு மாகாண அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் செயலாளர் வீ.சிவஞானசோதி மற்றும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராஜா ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டு இந்த அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்றதிகாரத்தை ஒழிப்பதற்கான பிரேரணையை யார் சமர்ப்பித்தாலும் ஆதரவு

## அமைச்சர் ஹரிசன் தெரிவிப்பு



(கொழும்பு)

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாமலாக்குவதற்கு யார் பிரேரணை கொண்டுவந்தாலும் அதற்கு ஆதரவளிக்க ஐக்கிய தேசியக் கட்சி எந்த சந்தர்ப்பத்திலும் தயாராகவுள்ளதாக அமைச்சர் பீ. ஹரிசன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது 20 ஆவது திருத்தம் ஊடாக நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாமலாக்க மக்கள் விடுதலை முன்னணி நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதுதொடர்பாக அந்த கட்சி அனைத்துக் கட்சிகளுடனும் கலந்துரையாட இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

எனவே ஐக்கிய தேசிய கட்சியை பொறுத்தவரை நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இல்லாமலாக்கப் படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)




# நாட்டுக்கு இன்று தேவை பாராளுமன்றத் தேர்தலே

## ஜே.வி.பி.மாகாண சபை உறுப்பினர் சமந்த உறுதி

(கொழும்பு)

"பிரதான கட்சிகளுக்கு எதிர்வரும் காலம் சவாலானது" என மக்கள் விடுதலை முன்னணியின் ஊவா மாகாண சபை உறுப்பினர் சமந்த் வித்யாரத்ன தெரிவித்தார்.

எல்லை நிர்ணய அறிக்கையில் குறைபாடுகள் இருப்பினும் மக்களின் வாக்குரிமையை ஒத்திவைக்க முடியாது!

ஜனாதிபதித் தேர்தலைப் பற்றிப் பேச எவருக்கும் உரிமையில்லை. நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதாக கூறியே அனைவரும் பதவிக்கு வந்தார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

புதிய தேர்தல் முறைக்குச் செல்வது உள்ளிட்ட விடயங்களுக்காகவே மக்கள் இந்த அரசாங்கத்திற்கு அதிகாரத்தை வழங்கினார்கள். பழைய முறையில் இருந்த குறைபாடுகளால்தானே எல்லை நிர்ணய ஆணைக்குழு நியமித்து புதிய முறை கொண்டு வரப்பட்டது. "தாம் வளர்த்த பிள்ளை வேண்டாம்" என்பதைப் போன்றுதான் மகிந்தவின் குழுவும், ரணிலின் குழுவும், மைத்திரி அணியும் எல்லை நிர்ணய சட்டத்தை நிராகரித்தன.

அவர்கள் தேர்தலைப் பிற்போடுவதற்கு வழி சமைத்தார்கள். தற்போது நாட்டுக்குத் தேவைப்படுவது பாராளுமன்றத் தேர்தலேயன்றி மாகாண சபைத் தேர்தல் அல்ல.

எல்லை நிர்ணய அறிக்கையில் குறைபாடுகள் இருந்தாலும் வாக்கு உரிமையை பிற்போட முடியாது. மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அது தொடர்பில் மாற்றுக் கருத்து இல்லை.

எனினும் உரிய காலத்தில் தேர்தலை நடத்தும் அரசாங்கமல்ல அதிகாரத்திலிருப்பது. ஜனாதிபதி பதவி தொடர்பிலும் பிரச்சினை உள்ளது. நாட்டு மக்களுக்கு உள்ள பிரச்சினை பற்றியும் இந்த அரசாங்கத்திற்கு பொறுப்பில்லையே! இவ்வாறான



நிலையில் பாராளுமன்றத் தேர்தலை நடத்தி மக்கள் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கக்கூடிய அரசாங்கத்திற்கு அதிகாரத்தை வழங்க வேண்டும்.

நாட்டின் முக்கிய தீர்மானங்களை மேற்கொள்ளும் மையம் இன்றி எதனையும் செய்ய முடியாது. அரசாங்கத்தின் இயலாமையினால் தானே மாகாண சபைத் தேர்தலையும் உரிய காலத்தில் நடத்த முடியாமல் போயிருக்கின்றது. நாட்டின் முக்கிய தீர்மானங்களை மேற்கொள்ள மாகாண சபைகளால் முடியாது. அவ்வாறான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு பாராளுமன்றத்தில் நிலையான அரசாங்கம் ஒன்று இருக்க வேண்டும்.

இப்போது நாடு அராஜக நிலைக்கு உள்ளாகியதைப் போன்றுள்ளது. அவ்வாறான நாட்டில் கண்டிப்பாக ஆட்சி மாற்றம் ஒன்று இடம்பெற வேண்டும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக மகிந்த ராஜபக்ஷ இரண்டு தடவைகள் வாக்குறுதி வழங்கினார். ரணில்,மைத்திரி இரு தரப்பும் அதிகாரத்திற்கு வந்ததும் அதைப் பற்றிக் கூறியேயாகும். சந்திரிகா பண்டாரநாயக்கவும் அதைத்தான் கூறினார்.

இவ்வாறு கூறியவர்களால் வெட்கமில்லாமல் அதைப் பற்றிப் பேச முடியுமா? எவ்வாறாயினும் 20வது யாப்புத் திருத்தம், நிறைவேற்றப்படாவிட்டால் ஜனாதிபதித் தேர்தலுக்குச் செல்ல வேண்டும். அவ்வாறு இடம்பெற்றால் நாமும் அபேட்சகர் ஒருவரை களமிறக்குவோம்.

பிரதான அரசியல் கட்சிகளுக்கு சவால் விடுக்கக் கூடிய அதிகாரத்தை தற்போது சிவில் சமூகங்கள் உருவாக்கிக்கொண்டிருக்கின்றன. கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது அதனை நன்றாக அவதானிக்க முடிந்தது. மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக ஆக்குவதற்கு சிவில் அமைப்புக்கள் ஒன்று திரண்டன. மக்கள் விடுதலை முன்னணியைச் சுற்றியிருக்கும் நிபுணர் குழுவிற்கு எதிர்வரும் காலத்தில் மக்கள் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கு வாய்ப்புக் கிடைக்கும்.

அந்த மக்கள் அமைப்புகளுக்கு தமது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு பங்களிப்பைக் கொண்டு செல்வதற்குரிய இடம் உருவாகவில்லை. அந்த ஆற்றல், அவர்களது அனுபவங்களை முன்னே கொண்டு செல்வதற்கான முன்னெடுப்புக்களைச் செய்ய வேண்டும். அந்த விடயத்தில் ஜே.வி.பி.முன்னணியில் இருக்கின்றது.

போதைப்பொருள் பாவிப்பவர்கள், அதன் ஏஜெண்டுகளாகச் செயற்படுபவர்கள், பாதாள உலகத்தை வழிநடத்துபவர்கள் போன்றோர் பாராளுமன்றத்தில் இருப்பார்களாயின் அங்கு தூய்மையான அரசியலை மக்களால் எதிர்பார்க்க முடியாது என் [illegible] க்கின்றன.

ஜே.வி.பி என்பது எப்போதும் செயற்பட்டுக் கொண்டிருக்கும் கட்சி. இந்த வருடம் தேர்தல் வருடம் என அடையாளப்படுத்தப்பட்டதுடன் நாம் அதற்கான அதிக செயற்பாட்டை முன்னெடுக்கின்றோம்.

எனினும் ஜே.வி.பி.தேர்தலை இலக்காக வைத்து செயற்படும் கட்சியல்ல. அதே போன்று தற்போது அரசியலில் ஈடுபட்டுள்ள அநேகமானவர்கள் விபசார விடுதி உரிமையாளர் அல்லது மதுபான விற்பனை நிலைய உரிமையாளர்கள் போன்றவர்களே என்பதை தற்போது மக்கள் புரிந்து கொண்டிருப்பதைக் கூற வேண்டும்.

அவ்வாறானவர்கள் எவ்வாறு அரசியலில் தெரிவாகினர்? தகுதியானவர்கள் முன்வராததாலேயே இது நடந்தது என்பதையும் மக்கள் இப்போது விளங்கிக் கொண்டிருக்கின்றார்கள். எனவே அந்த இடைவெளியை நிரப்புவதற்கு மக்களும் சிவில் நடவடிக்கை மேற்கொள்வார்கள். அதற்கான நிபுணர் குழு தற்போது உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் மாகாண சபை முறை எமது நாட்டிற்கு பலவந்தமாக திணிக்கப்பட்ட ஒன்றுதானே. அது எந்த வகையிலும் எமக்கு தகுதியானதல்ல. "வெள்ளை யானை" கதையையும் முதலில் நாமே கூறினோம்.

எனினும் அது இன்று நாட்டின் ஒரு பகுதியாகியல்லவா போயிருக்கின்றது! எனவே அதனை ஒரேயடியாக நீக்க முடியாது. எனினும் உரிய முகாமைத்துவம் இடம் பெறுமாயின் அதனைக் கொண்டு நாட்டுக்கு பயனளிக்கக் கூடிய முறையில் செயற்பட முடியும். மாகாண சபை மாத்திரமல்ல, தற்போது பாராளுமன்றமும் "வெள்ளை யானை" யாக ஆகிவிட்டது. இது முற்றாகவே மாறி விட்டிருக்கின்றது. மொத்தமாகவே சுத்தப்படுத்த வேண்டியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# 700 கோடி ரூபாய் பெறுமதியான வைரம் கொள்ளை; மேலும் இருவர் கைது

(பேலியகொட)

சுமார் 700 கோடி ரூபாய் பெறுமதியான வைரம் மற்றும் இரத்தினக்கற்கள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவத்துக்கு உதவி ஒத்தாசை வழங்கிய சந்தேகத்தின் பேரில் இரண்டு பேர் பிலியந்தல பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

28 வயதுடைய இரண்டு பேர் நேற்று முன்தினம் இவ்வாறு பேலியகொடை விசேட விசாரணை பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5ஆம் திகதி இடம்பெற்றதாக கூறப்படும் இந்தக் கொள்ளை தொடர்பில் பேலியகொடை விசேட விசாரணை பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இருவரில் ஒருவரின் சித்தப்பா, டுபாயில் கைது செய்யப்பட்டுள்ள மாகந்துரே மதூஷ்க்கு நெருக்கமானவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

## யானைக்குட்டி விவகாரம்

# உடுவே தம்மாலோக தேரர் குற்றமற்றவராக விடுதலை

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் யானைக்குட்டிகளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டிலிருந்து உடுவே தம்மாலோக தேரரை குற்றமற்றவராக விடுதலை செய்வதற்கு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சம்பத் விஜயரத்ன இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

பிரதிவாதியான உடுவே தம்மாலோக தேரருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை சரியான முறையில் நிரூபிக்கவில்லை என்று நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் இந்த வழக்குடன் சம்பந்தப்பட்ட அப்போது அமைச்சராக இருந்த வசந்த சேனாநாயக்க வழங்கிய சாட்சி ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருப்பதாகவும் நீதிபதி தெரிவித்தார்.

அதன்படி பிரதிவாதியான உடுவே தம்மாலோக தேரருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்க முடியாததன் காரணமாக உடுவே தம்மாலோக தேரரை குற்றமற்றவராக விடுதலை செய்வதாக நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

உரிய ஆவணங்கள் இன்றி யானைக் குட்டியை வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்டு உடுவே தம்மாலோக தேரர் கடந்த 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். (இ)

# எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் கொள்ளை

(ஹொரணை)

ஹொரணை, பொகுனுவட்ட பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் நேற்று அதிகாலை கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

முகமூடிஅணிந்துகொண்டு மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு பேர் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதன்போது கொள்ளையர்கள் வானை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு 95 ஆயிரத்து 500 ரூபா பணத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

சம்பவம்தொடர்பில்எவரும் இதுவரை கைது செய்யப்படாத நிலையில்ஹொரணை பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்பியோடிய அர்ஜுன் மகேந்திரனை இலங்கைக்கு கொண்டு வருவது பிரதமருடைய பொறுப்பு-மனோ



(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை இலங்கைக்குக் கொண்டு வரவேண்டிய பொறுப்பு பிரதமருடையது என்று அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

எனினும் அது சம்பந்தமாக பிரதமரை நேரடியாகக் குற்றம் சுமத்துவது தவறாகும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

கொழும்பு பிரதேசத்தில் வைத்து ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அமைச்சர் மனோ கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ)

# பிரித்தானியாவிலுள்ள தமிழ் செயற்பாட்டாளர்களை உத்தியோகபூர்வமாக உளவு பார்க்கும் இலங்கை

## அதிர்ச்சித் தகவல் வெளியீடு


(லண்டன்)

பிரித்தானியாவிலுள்ள தமிழ் செயற்பாட்டாளர்கள் மற்றும் இலங்கை அரசிற்கு எதிரானவர்களை உளவு பார்ப்பதற்காக இலங்கை அரசினால் உத்தியோகபூர்வமாக இராணுவ அதிகாரிகள் லண்டனுக்கு அனுப்பப்படுவதுடன் செயற்பாட்டாளரின் விபரங்கள் இலங்கை அரசால் சேகரிக்கப்படுகிறது என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

கொலை அச்சுறுத்தல் விடுத்த பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிராக ICPPG யினால் பிரித்தானிய நீதவான் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசாரணைகளிலேயே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

சர்ச்சைக்குரிய பிரியங்க பெர்னாண்டோ தரப்பினரது வாதங்கள் மன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது தூதரக அதிகாரியாக பிரியங்க பெர்னாண்டோவிற்குரிய உத்தியோகபூர்வ கடமைகள் தொடர்பிலான பட்டியல் அறிக்கையிடப்பட்டது. அந்த அறிக்கையிலேயே மேற்படி தகவல் வெளிவந்துள்ளது.

அந்தவகையில் தூதரகத்தின் பாதுகாப்பு அதிகாரியாக கடமைபுரிந்த பிரியங்க பெர்னாண்டோவிற்குரிய உத்தியோகபூர்வ கடமைகளில் பிரித்தானியாவில் இடம்பெறும் இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளை கண்காணித்து இலங்கை உயர்ஸ்தானிகரகம் மற்றும் அதன் செயலாளர் ஊடாக இலங்கையிலுள்ள பாதுகாப்பு அமைச்சு, வெளியுறவு அமைச்சு மற்றும் இலங்கையிலுள்ள புலனாய்வு முகவர்களுக்கு அறிக்கை வழங்குதல்



அதேபோல் பிரித்தானியாவிலுள்ள தமிழ் செயற்பாட்டாளர்கள் இலங்கை அரசிற்கு எதிரான நிகழ்வுகளில் ஈடுபடுபவர்கள் தொடர்பிலும் இலங்கை புலனாய்வுத்துறையினருக்கு அறிக்கையிடுதல் என்பன இடம் பெற்றுள்ளது

இந்நிலையிலேயே, பிரித்தானியாவிலுள்ள தமிழ் செயற்பாட்டாளர்கள் இலங்கை இராணுவத்தினரால் உளவு பார்க்கப்படுவதுடன் உயர்ஸ்தானிகரகத்தினரால் விபரங்கள் இலங்கை அரசிற்கு அனுப்பி வைக்கப்படுகிறது என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. (இ-9)

# எதிர்வரும் தேர்தல் முடிவுகளை அனைவரும் ஆவலுடன் எதிர்பார்ப்பு

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

(அநுராதபுரம்)

ஜனாதிபதியும் பிரதமரும் இரு துருவங்களாக இருந்தாலும், அவர்களின் புகைப்படங்கள் ஒன்றாக உள்ளன. இந்நிலையில் எதிர்வரும் தேர்தலில் எந்தக் கட்சி வெற்றிபெறும் என்று எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

25 மாவட்டங்களில் 1000 நீர் சுத்திகரிப்பு நிலையங்களை திறந்துவைக்கும் நிகழ்வின் அங்கமாக நேற்று அநுராதபுர மாவட்டத்தில் கடவத ரத்மல, ஹொரவ பொத்தான - பத்தாவ, கியுல்லுகட, மெதவாச்சிய சந்தி, கஹடகஸ்திலிய, நாச்சியாதீவு போன்ற இடங்களில் நீர் சுத்திகரிப்பு நிலையங்களை திறந்து வைத்தபின்னர் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி அண்மையில் செய்த ஆட்சிக் கவிழ்ப்பினால் இரண்டு மாதங்கள் எல்லா வேலைத்திட்டங்களும் தடைப்பட்டிருந்தன. ஜனாதிபதியும் பிரதமரும் இரு துருவங்களாக இருந்தாலும், இன்று அவர்களின் புகைப்படங்கள் எல்லா இடங்களும் ஒன்றாக உள்ளன. இந்நிலையில் இந்த வருடத்துக்குள் தேர்தல் வரவுள்ளது. அதில் எந்தக் கட்சி வெற்றிபெறும் என்று எல்லோரும் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

ஜனாதிபதி வேட்பாளர் தெரிவிலும் என்ன நடக்கப்போகிறது என்று தெரியாமல் உள்ளது. சமூகத்துக்கு நன்மையான வேட்பாளரை நாங்கள் ஆதரிப்போம். இந்நிலையில்மாகாண சபை மற்றும் பாராளுமன்ற தேர்தல்களில் எங்களது உறுப்பினர்களை சரியாக தெரிவுசெய்ய வேண்டும். தேர்தல் முறையிலுள்ள வாய்ப்புக்களை நாங்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# நல்லாட்சியையும் ஜனாதிபதியையும் மகிந்தவுக்கு பலிகொடுக்க மாட்டோம்

## அமைச்சர் சஜித் திட்டவட்டம்

நாம் உருவாக்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையோ நாம் உருவாக்கிய நல்லாட்சியையோ எக்காரணத்திற்காகவும் ராஜபக்ஷவினருக்கு பலிகொடுக்கமாட்டோம் என அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டு மக்கள் எமக்குக் கொடுத்த ஆணையை எம்மால் மீறமுடியாது. நாம் அனைவரும் ஒன்றாகவே



உள்ளோம். ஜனாதிபதி இன்றும் எம்மோடுதான் உள்ளார். எதிர்காலத்தில் நல்ல காட்சிகள் அரங்கேறும். நாம் மைத்திரிபால சிறிசேனவை ஆயுதமாக பயன்படுத்த மாட்டோம். அவருடன் அரசியல் உடன்படிக்கை ஒன்றும் செய்யவில்லை.

ஆனால் அவரை பாதுகாக்க வேண்டிய கடமை எமக்கு உள்ளது. அவருக்கு நெருக்கடி உருவாக நாம் இடமளிக்க மாட்டோம் எனவும் சஜித் தெரிவித்தார். (இ)

# கொக்கெய்ன்; பெயர்ப்பட்டியலை ஐ.தே.கவிடம் வழங்கி பயனில்லை

## இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் நம்பிக்கையீனம்

(கொழும்பு)

கொக்கெய்ன் போதைப் பொருள் பாவனை செய்பவர்களின் பெயர்ப்பட்டியலை ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவுக்கோ பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவுக்கோ வழங்குவதில் எந்தப் பயனும் இல்லை. அதனால் நடவடிக்கை எடுக்கக் கூடியவர்களுக்கு அந்தப் பட்டியலை வழங்கியுள்ளேன் என இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.



கொக்கெய்ன் போதைப் பொருள் பாவிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியலை கட்சியின் செயற்குழு கூடிய போது வெளிப்படுத்தாமல் இருந்ததற்கு காரணம் என்னவென வினவியதற்கு பதிலளிக்கையிலேயே ரஞ்சன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களில் கொக்கெய்ன் பாவிப்பவர்கள் இருப்பதாக நான் தெரிவித்திருந்தேன். அது தொடர்பில் பலரும் என்னை விமர்சித்து வருகின்றனர். என்னை விமர்சிப்பதில் பயனில்லை. அவர்கள் இந்தப் போதைப்பொருளை பாவிப்பதில்லை என்றால் அவர்கள் இரத்த பரிசோதனை மேற்கொண்டு உறுதிப்படுத்தினால் பிரச்சினை முடிந்துவிடும் எனவும் அவர் தெரிவித்தார். (இ)

# சிவலிங்கம் உடைக்கப்பட்டமைக்கு இந்து சமயத் தொண்டர் சபை கண்டனம்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை திருக்கோணேஸ்வரம் கோவிலுக்கு செல்லும் வழியில் அமைக்கப்பட்ட சிவலிங்கம் உடைக்கப்பட்டமைக்கு இலங்கை இந்து சமயத் தொண்டர் சபை கண்டனம் வெளியிட்டுள்ளது.

எமது ஆதியும் அந்தமும் இல்லாத எம் அரும்பெரும் சோதி எம்பெருமான் குடியிருக்கும் சிவபிரான் அருள் பாலிக்கும் திருகோணமலையில் அதுவும் இராவணன் ஆண்ட எம் சிவபூமி; இங்கே இவ்வாறான நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. இதனை வன்மையாக கண்டிக்கின்றோம். மத முரண்பாட்டை தூண்ட வேண்டாம்.

சம்பந்தப்பட்டவர்கள் இதை நிறுத்திக்கொள்ள வேண்டும். இல்லையேல் சிவனின் கோபத்துக்கு ஆளாக வேண்டி வரும். இத்தகைய அட்டூழியங்களை சிவனின் பக்தர்கள் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள்.

எனவே இதற்கு உடனடி நடவடிக்கை வேண்டும் எனவும் அந்த அமைப்பினர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# திருமணம் செய்வதாகக் கூறி 50 இலட்சம் ரூபாய் மோசடி

## பெண் மீது பொலிஸில் முறைப்பாடு

திருமணம் செய்வதாக கூறி 50 இலட்சம் ரூபாய் பணத்தை பெண் ஒருவர் மோசடி செய்துள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் வசிப்பதாகத் தெரிவித்து பெண் ஒருவர் ஐரோப்பிய நாட்டிலுள்ள நபர் ஒருவருடன் முகப்புத்தகம் ஊடாக நட்பு வைத்துள்ளார். பின்னர் திருமணம் செய்ய இருவரும் முடிவெடுத்துள்ளனர்.

இந் நிலையில் குறித்த நபர் கடந்த வாரம் தனது சொந்த இடமான யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளார். குறித்த பெண்ணும் அவருடைய வீட்டுக்கு சென்றுள்ளார்.

திருமணத்துக்கு தேவையான நகைகள் உள்ளிட்ட ஆபரணங்களுடன் தொலைபேசிகள், வெளிநாட்டு நாணயங்கள் என்பவற்றை குறித்த நபர் அந்த பெண்ணிடம் ஒப்படைத்துள்ளார். அத்துடன் பெண்ணின் வங்கிக்கணக்கும் 15 இலட்சம் ரூபாய் வைப்பிலிட்டுள்ளார்.

இந்த நிலையில் குறித்த நபர் வீட்டில் இல்லாத வேளை அந்த பெண் நகைகள் பணம் மற்றும் தொலைபேசிகளுடன் தலைமறைவாகியுள்ளார். தான் ஏமாற்றம் அடைந்ததை உணர்ந்த நபர் அனைத்து ஆவணங்களுடனும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (இ-9-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ‘ஜனநாயகத்திற்கு பாரிய தாக்குதல்’

# சுயாதீன ஆணைக்குழுக்கள் சுயாதீனமாக இயங்கவில்லை

“நாம் பாராளுமன்றத் தேர்தலிலும், ஜனாதிபதித் தேர்தலிலும் வெற்றி பெறுவோம்” என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தல் ஒத்திவைக்கப்படும் என்பதே எனது கருத்து. கூட்டணியொன்றை உருவாக்கி, பலம்மிக்க தலைவரை ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்குவோம் எனவும் தெரிவித்தார்.

கேள்வி:-கொக்கெய்ன் பாவிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களை அறிந்து கொள்வதற்காக பிரதமர் குழு ஒன்றை நியமித்திருக்கின்றார். இது தொடர்பில் எதிர்க்கட்சியின் நிலைப்பாடு என்ன?

பதில்: -இது அவர்களது ஒரு உறுப்பினர், அவர்களுக்கு எதிராகவே முன்வைத்த குற்றச்சாட்டு. அதனை அவர்களே பார்த்துக் கொள்வார்கள். எமது உறுப்பினர்கள் எவரும் கொக்கெய்னோ அல்லது வேறு போதைப் பொருட்களோ பாவிப்பதில்லை என்பதை நாம் அறிவோம். எனவே இது எமக்கு எந்த வகையிலும் தொடர்பான ஒன்றல்ல. அவர்கள் குழு ஒன்றை நியமித்து என்ன செய்து கொள்வார்கள் என எமக்குத் தெரியாது. கொக்கெய்ன் பாவிப்பவர்கள் இருப்பார்களாயின் அவர்களுக்குப் புனர்வாழ்வளிக்க வேண்டுமே தவிர அடித்துத் திருத்த முடியாது. அடுத்தது, போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்தால் மாத்திரமே இலங்கை சட்டத்தின் பிரகாரம் கைது செய்ய முடியும் போதைப் பொருளைப் பாவித்தமைக்காக கைது செய்வதற்கு இலங்கையில் சட்டங்கள் இல்லை. பாவிப்பதாயின் செய்யக் கூடிய ஒரே விடயம் அவர்களை புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்புவதாகும். அதைத் தவிர வேறு செய்வதற்கு எதுவுமில்லை.

கேள்வி:- மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு இருக்கும் சட்டப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அடுத்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறுவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபரை அக்கூட்டத்துக்கு அழைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாகாண சபைத் தேர்தல் பிற்போடப்படுவதாக உங்களது தரப்பு அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தினாலும் தேர்தலை உரிய முறையில் நடத்துவதற்கு அரசாங்க தரப்பிற்கு தேவை உள்ளதுதானே?

பதில்:- இவை அனைத்தினாலும் இடம்பெறுவது மாகாண சபைத் தேர்தலைப் பிற்போடும் செயற்பாடேயாகும். இந்த ஆயத்தங்கள் தேர்தலைப் பிற்போடுவதே தவிர தேர்தலை நடத்துவதற்கல்ல. மாகாண சபைத் தேர்தலின் போது வட்டாரங்களை ஒதுக்கும் செயற்பாட்டை அநேகமானோர் விரும்பவில்லை. காரணம் எல்லை நிர்ணயம் செய்யும் ஆணைக்குழுவின் அறிக்கைக்கு அப்போதிருந்த முன்னாள் அமைச்சர் எதிராகவே வாக்களித்தார். இதனடிப்படையில் இந்த முறைக்கு எதிர்வரும் காலங்களிலும் பாராளுமன்றத்தில் வரவேற்பு கிடைக்கும் என நான் நினைக்கவில்லை. அதேபோன்று பழைய முறையை செல்லுபடியாக்க பாராளுமன்றத்திற்கு புதிதாக சட்டம் ஒன்றைக் கொண்டு வர வேண்டும். இவை இரண்டும் துரிதமாக இடம்பெறப் போவதில்லை. எனவே தேர்தல் தொடர்ந்தும் பிற்போடப்படும் என்றே நான் நினைக்கின்றேன்.

கேள்வி:- நாட்டின் ஆட்சி அதிகாரம் கிடைத்தால் அரசியலமைப்பை முற்றாக மாற்றுவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறுவதாகவும், அவ்வாறு நடந்தால் ஒரே இடத்தில் அதிகாரங்கள் மையப்படுத்தப்படும் நிலையே ஏற்படும் எனவும் அரச தரப்பின் சிலர் கூறுகின்றனரே?

பதில்:- இந்நாட்டில் ஜனநாயக ரீதியாகப் பெற்ற சிறந்த செயற்பாடுகளை எந்த வகையிலும் மாற்றுவதற்கு எவருக்கும் எண்ணங்கள் இல்லை. இது கருத்துக்கள் திரிபுபடுத்திக் கூறப்படுகின்றன. இவை முற்றாகவே தவறான பேச்சுகளாகும். ஆணைக்குழுக்களை நியமிக்கும் போது அவற்றில் சில குறைபாடுகள் இருக்கின்றன என்றே நாம் கூறுகின்றோம். நாம் எந்த வகையிலும் அதிகாரத்தை ஒரு கையில் மையப்படுத்திக் கொள்ளத் தேவையில்லை. அந்த அமைப்புக்கள் சுயாதீனமாகும் போது சிலசில மாற்றங்கள் நிகழும். எனினும் நாம் எந்த ஆணைக்குழுவையும் நீக்குவதாகக் கூறவில்லை. அதன் நடைமுறைகள், அமைப்பு போன்ற மாற்றமடைய வேண்டும் என்றே நாம் கூறுகின்றோம்.

கேள்வி:- அப்படியாயின் சுயாதீன ஆணைக்குழுக்கள், பொலிஸ் மற்றும் நீதிமன்றங்களின் சுயாதீனத் தன்மை இல்லாமல் போய்விடும் என்ற குற்றச்சாட்டு எழுப்பப்படுகின்றதே?

பதில்: -சுயாதீனம் என நியமிக்கப்பட்டவர்கள் சுயாதீனமாக இல்லை என்ற நிலைப்பாடே நாட்டில் இருக்கின்றது. பெயர் “சுயாதீன



ஆணைக்குழு” என்றிருந்தாலும் அவற்றின் செயற்பாடுகள் சுயாதீனமாக இல்லை. நியமிக்கப்பட்ட அதிகாரிகள் ஒரு வகையில் அரசாங்கத்திற்கு சார்பானவர்கள். ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தேவையான வகையிலேயே இந்த ஆணைக்குழுக்கள் செயற்படுகின்றன என்றே நாம் கூறுகின்றோம். ஐ.தே. கட்சி செய்யும் இந்தச் செயற்பாட்டினால் நாட்டின் ஜனநாயகத்திற்கு பாரிய தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த ஆணைக்குழுக்கள் முழுமையாகவே சுயாதீனமடைய வேண்டும் என்ற விடயத்தையே நாம் வலியுறுத்துகின்றோம். அரசியலமைப்புச் சபை நியமிப்பதாயின் அதற்காக அனைத்துக் கட்சிகளுக்கும் பக்கச் சார்பற்ற தீர்மானங்களை மேற்கொள்ளக் கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

கேள்வி: -தேசிய அரசாங்கம் ஒன்றை உருவாக்க முடியாது போனால் பாராளுமன்றத்தைக் கலைத்து துரிதமாக பாராளுமன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசாங்கத்தின் கவனம் சென்றுள்ளதுதானே?

பதில்: -அவ்வாறு ஆயத்தங்கள் இருக்குமாயின் நாம் எந்த நேரத்திலும் ஒத்துழைப்பை வழங்கத் தயார். ஜனாதிபதி ஒரு நிலைப்பாட்டிலும், பிரதமர் ஒரு நிலைப்பாட்டிலும் இருக்கும் வேளையில் இவ்வாறான சிக்கலான சமூக பொருளாதார பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதற்கான நிலை ஏற்படும். எனவே நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் விழும். முதலீட்டு வாய்ப்புக்கள் இல்லை. நாட்டின் கைத்தொழில் வீழ்ச்சியடைந்துள்ளது. கைத்தொழிலாளர்கள் நிர்க்கதி நிலையில் இருக்கின்றார்கள். இவ்வாறான சந்தர்ப்பத்தில் புதிய அரசாங்கத்தினூள் புதிய வேலைத் திட்டங்களை மேற்கொள்வதே சிறந்ததாகும்.

கேள்வி:-ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என ஜனாதிபதி கூறுகின்றாரே?

பதில்:- மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான தேவை ஜனாதிபதிக்கு உள்ளது. அவர் அதனை [illegible]

எனினும் அதனை நடைமுறைப்படுத்துவதாயின் தற்போதைய அரசாங்கம் அதற்குத் தேவையான ஒழுங்குகளைச் செய்ய வேண்டும். அதனைச் செய்யாது தேர்தலைப் பிற்போடும் நிலையை காணப்படுகின்றது. ஜனாதிபதியின் நோக்கம் எந்த அளவுக்கு நல்லதாக இருந்தாலும் அதனை நடைமுறைப் படுத்தும் அரசாங்கம் அதற்கு இணங்காவிட்டால் நாடு தற்போது வீழ்ந்திருக்கும் பாதாளத்தில் தொடர்ந்தும் இருக்கும்.

கேள்வி:- தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு அரசாங்கம் தயாராகி வருகின்றதுதானே?

பதில்:- தேசிய அரசாங்கத்தை உருவாக்குவதற்கான வாய்ப்புக்கள் இல்லை. நாம் அதனை எதிர்க்கின்றோம். பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி, ஜே.வி.பி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற கட்சிகளும் இதனை எதிர்க்கின்றன. இவ்வாறான எதிர்ப்புக்களுக்கு மத்தியில் அதனை ஒருபோதும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியாது.

கேள்வி:- பரந்த கூட்டணி ஒன்றை அமைப்பதற்காக ஸ்ரீ.சு.கட்சி மற்றும் பொதுஜன பெரமுன கட்சிகளுக்கிடையான பேச்சுவார்த்தையின் போது ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் பெரும் குழப்பங்கள் ஏற்பட்டதுதானே?

பதில்:- அதற்கான சந்தர்ப்பத்தின் போது தாம் விரும்பும் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அந்தக் கட்சிக்கு வாய்ப்புள்ளது. தேவையான விடயங்கள் இடம்பெறும், தேசிய கூட்டணியொன்று உருவாகும். அதில் எந்த பிரச்சினையுமில்லை. கூட்டணி ஒன்று உருவாகவே வேண்டும். இந்த நிலையின் அடிப்படையில் ஐ.தே.கட்சிக்கு எதிரான பரந்த கூட்டமைப்பு பொன்றை உருவாக்கி மிகப் பலமிக்க தலைவர் ஒருவரை களமிறக்கி வெற்றி பெறுவதற்கான வாய்ப்புள்ளதாக நாம் நம்புகின்றோம். பாராளுமன்றத் தேர்தலையும், ஜனாதிபதித் தேர்தலையும் எம்மால் வெற்றி கொள்ள முடியும் என நினைக்கின்றேன் என அவர் தெரிவித்தார். (இ)

# சிவபூமி மடத்தில் சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

சிவராத்திரியை முன்னிட்டு அன்னதானமும், சிறப்புக் கலை நிகழ்ச்சிகளும் நாளை திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு கீரிமலை சிவபூமி மடத்தில் இடம்பெறும்.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் சமயச்சொற்பொழிவும், வீரபத்திரர் வசந்தன் கூத்தினை குருசாமி சுகுமார் குழுவினரும், மாவிட்டபுரம் பொதுச்சேவைக் கழகம் வழங்கும் சத்தியவான் சாவித்திரி இசை நாடகமும், கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலய மாணவர்களின் இசை நடன நிகழ்ச்சியும், அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவர்களின் காவடியாட்டம், ஒயிலாட்டம் நிகழ்ச்சியும், தெல்லிப்பழை தமிழ்ச் சங்கம் வழங்கும் அரிச்சந்திர மயான காண்டம் இசை நாடகமும் நடைபெறவுள்ளதாக கீரிமலை சிவபூமி அறக்கட்டளை அறிவித்துள்ளது. (இ-9)

# தங்காலை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரின் மனு 5 ஆம் திகதி விசாரணைக்கு

(கொழும்பு)

2012 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் நாட்டைச் சேர்ந்த குர்மன்ஷேக்ஸ்வ கொலை செய்தமை மற்றும் அவருடைய ரஷ்ய நாட்டு காதலியை பாலியல் பலாத்காரம் செய்தமைக்காக 20 வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் நால்வர் தாக்கல் செய்துள்ள மேன்முறையீட்டு மனுவை நாளை மறுதினம் 5 ஆம் திகதி விசாரிக்க, மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

பிரியந்த பெர்னாண்டோ மற்றும் ஷிரான் குணரத்ன ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் முன்னிலையில் நேற்று முன்தினம் இந்த மேன்முறையீட்டு மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தங்காலை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சம்பத் புஷ்ப விதானபத்திரன உட்பட நால்வர் இந்த மேன் முறையீட்டு மனுவைத் தாக் கல் செய்துள்ளனர். (இ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 90 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 85 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 240 | 220 | 200 |
| தக்காளி | 60 | 50 | 30 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 60 | 60 |
| கோவா | 30 | 50 | 50 | 60 |
| கரட் | 80 | 100 | 90 | 140 |
| பூசணி | 40 | 40 | 30 | 40 |
| புடோல் | 60 | 40 | 30 | 80 |
| வாழைக்காய் | 80 | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 80 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 120 | 120 | 90 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 40 | 80 |
| பயற்றங்காய் | 120 | 90 | 80 | 100 |
| லீக்ஸ் | 80 | 100 | 70 | 120 |
| பீற்றூட் | 50 | 60 | 25 | 60 |
| கறிமிளகாய் | 100 | 80 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 400 | 280 | 250 | 400 |
| போஞ்சி | 80 | 70 | 70 | 100 |
| கத்தரிதம்புள்ள | 80 | 35 | 60 | 80 |
| கீரை-1பிடி | 20 | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 60 | 70 | 55 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 35 | 35 | 35-50 |
| இராசவள்ளி | 140 | 100 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 50 | 60 | 40 | 100 |
| முள்ளங்கி | 40 | 70 | 30 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 15 | 40 |
| வல்லாரை | 15 | 30 | 10 | 20 |
| ஈரப்பலா | — | 60 | 100 | 80 |

# சாதாரணதரப் பரீட்சை பெறுபேறுகள் இம்மாதம் இறுதிக்குள் வெளியாகும்

2018 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் இந்த மாத இறுதிக்குள் வெளியிடப்பட உள்ளதாக பரீட்சைகள் திணைக் [illegible] பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எஸ்.பிரணவதாசன் தெரிவித்துள்ளார்.

2018ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை கடந்த டிசெம்பர் மாதம் 3ஆம் திகதி ஆரம்பமாகி 12ஆம் திகதி வரை இடம்பெற்றது.

நாடு முழுவதும் உள்ள 4 ஆயிரத்து 661 பரீட்சை நிலையங்களில் இடம் பெற்ற இந்தப் பரீட்சையில் 6 இலட்சத்து 56 ஆயிரத்து 641 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## த.தே.கூட்டமைப்பின் எம்.பிக்கள்

# வெடுக்குநாறிமலை பிரச்சினையை நேரில் சென்று பார்வையிட்டனர்



(கண்டாவளை)

வவுனியா வடக்கு நெடுங்கேணி வெடுக்குநாறி மலைக்கு பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன்,சாள்ஸ் நிர்மலநாதன் உள்ளிட்ட குழுவினர் நேற்றைய தினம் விஜயம் ஒன்றை மேற்கொண்டு அந்தப் பிரதேச மக்களுடன் கலந்துரையாடல் மேற்கொண்டுள்ளனர்.

மிகவும்பழைமைவாய்ந்த ஆலயமாக காணப்படுகின்ற ஆதி சிவன் ஆலயத்தை தொல்லியல் திணைக்களம் ஆக்கிரமித்து அவற்றை பௌத்த மயமாக்கலுக்கு முயற்சிகளை முன்னெடுத்து வருகின்ற நிலையில் பல்வேறு எதிர்ப்புகள்எழுந்துள்ளன.

இந்த நிலையில் குறிப்பிட்ட பகுதிக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட குழுவினர் நேற்று விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இந்த விஜயத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன்,சி.சிறிதரன்,முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.சத்தியலிங்கம்,ஜி.ரி.லிங்கநாதன் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு இவ்விடத்துக்குச் சென்று நிலைமைகளை பார்வையிட்டதுடன் அம் மக்களுடனும் கலந்துரையாடியுள்ளனர்.குறித்த விடயம் தொடர்பாக தாம் கலந்துரையாடி நல்ல ஒரு தீர்க்கமான முடிவை ஏற்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

அதாவது இந்தப் பிரதேசத்தில் இருக்கின்ற மிகவும் பழைமையான ஆலயத்துக்கு செல்லுகின்ற பாதை அமைப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆகவே நாங்கள் பூர்வீகமாக வழிபட்ட இடத்தில் நாங்கள் முன்பு வழிபட்ட ஆலயத்தில் தொடர்ந்து வழிபாடுகளைச் செய்ய தங்களுக்கான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என பிரதேச மக்கள் இதன்போது கோரிக்கை விடுத்துள்ளனர். (2-250-315)




## இரணைதீவு மக்களின் பிரச்சினை தொடர்பாக

# ஆராய மனித உரிமை ஆணைக்குழு திடீர் விஜயம்



(மன்னார்)

கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட இரணைதீவு பகுதியில் குடியேறியுள்ள மக்கள் தொடர்பாகவும் மக்கள் எதிர்நோக்கும்பிரச்சினைகள் தொடர்பாகவும் நேரடியாக அறிந்து கொள்வதற்காக யாழ்.மற்றும் கிளிநொச்சி பிராந்திய மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் கனகராஜ் தலைமையிலான அதிகாரிகள் கொண்ட குழுவினர் நேற்று முன்தினம் முற்பகல்10 மணியளவில் இரணைமாதா நகரில் இருந்து படகு மூலம் இரணைதீவிற்கு நேரடி விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

தங்களுடைய முறைப்பாடுகளை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகளின் முன்னிலையில் தெரிவித்திருந்தனர்.

குறிப்பாக இரணைதீவு பகுதியில் குடியேறி ஒருவருடம்கடந்த நிலையில்இதுவரை தாங்கள் ஒழுங்கான முறையில் இன்னமும் குடியேற்றப்படவில்லை.

தங்களுக்கு கிடைக்கும் சமுர்த்தி பணம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை கூட அதிகாரிகள் எமது பகுதிகளில் வழங்குவதில்லை.

சிறிய தொகை பணத்தை பெறுவதற்குக் கூட தாங்கள் 14 மைல் தூரம் கடலில் பயணித்து இரணைமாதா நகரில் பெறவேண்டிய நிலை காணப்படுவதாகவும் தெரிவித்தனர்.

அதே நேரத்தில் தங்களுக்கு தேவையான போக்குவரத்து மற்றும் மருத்துவ தேவைகளையும் உடனடியாகபெற்றுதருவதற்கான செயற்பாடுகளையும் மேற்கொண்டு தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த நிலையில் குறித்த மக்களின் வீடுகள்,கோவில், பாடசலைகள் அனைத்திற்கும் நேரடியாக விஜயம் செய்த குழுவினர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பிராந்திய மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் இரணைதீவு மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொண்டு சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களை அழைத்து அவர்களிடம் விளக்கம் கோரவுள்ளதாகவும் அந்த விளக்கத்தின் பின்னர் அவர்களுடைய செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும் இவ்வருடத்திற்குள் சகல அரச திணைக்களங்களையும் ஒரு நடமாடும் சேவைக்கு அழைத்து இங்குள்ள மக்களின் பிரச்சினைகளை நேரடியாக ஆராய்வதற்கும் திட்டம் ஒன்றை தயாரித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆகவே மீள்குடியேற்றம் தொடர்பில் எடுக்கவேண்டிய சகல நட்வடிக்கை தொடர்பிலும் மனித உரிமை குழு கவனம் செலுத்தும் என தெரிவித்தார். (2-285)

## மகா சிவராத்திரி பெருவிழா

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சோழர்கால தொன்மை மிக்கதான அருள் மிகு உருத்திரபுரம் உருத்திர புரீஸ்வரர் ஆலயத்தில் மகா சிவராத்திரி பெருவிழா நாளை 4ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 6 மணிதொடக்கம் மறுநாள் அதிகாலை 6 மணி வரை நான்கு சாமப்பூசைகளுடன் மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளது.

தற்காலிக வீதி புனரமைப்பு நடைபெற்று வருவதுடன் போக்குவரத்து சேவைகளும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. (2-254)

# கனிஷ்ட விஞ்ஞான ஆய்வுகூடம், கற்றல்வள நிலையம் திறப்பு



முல்லைத்தீவு மாவட்டத்தின் கற்சிலைமடு பண்டார வன்னியன் மகாவித்தியாலயத்தில் கல்வி அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்ட கனிஷ்ட விஞ்ஞான ஆய்வுகூடம் கற்றல்வள நிலையம் உள்ளடங்கலாக இரண்டு கட்டட தொகுதிகளை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா திறந்து வைத்துள்ளார். (2-281)

## சிங்கன்குளப்பகுதியில் எருதுகள் களவு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட மதவாளசிங்கன் குளப் பகுதியில் காணி ஒன்றில் கட்டிவைக்கப்பட்ட இரண்டு எருதுகள் கடந்த 27 ஆம் திகதி இரவு களவாடப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

சுமார் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு மாடுகளும் காணியில் கட்டி வைத்திருந்த வேளை கயிற்றை அறுத்துக்கொண்டு களவாடிசென்றுள்ளதாக பாதிக்கப்பட்ட நபர்முறையிட்டுள்ளார்.

இறைச்சிக்காக மாடுகளை களவாடும் கும்பலின் செயற்பாடே இவ்வாறு மக்களின் வாழ்வாதாரங்களில் கைவைத்துமாடுகளை களவாடி இறைச்சிக்கு விற்பனை செய்து வருகின்றன.(2-281)



**கேப்பாபிலவு மக்களின் நிலமீட்புப் போராட்டம் இரண்டு வருடங்கள் கடந்து மூன்றாவது வருடத்தில் காலடி எடுத்து வைத்தும் அரசு எமது காணிகளை விட மறுக்கின்றது என தெரிவித்து வேதனையுடன் தமது கவனயீர்ப்புப் போராட்டத்தை உணவு தவிர்ப்பு போராட்டமாக நேற்று அனுஷ்டித்தனர். (௨-௯)**

# சமூக நீர் வழங்கல் திட்டம் ஒதியமலையில் ஆரம்பித்து வைப்பு



(பனிக்கன்குளம்)

நகர திட்டமிடல் நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீமின் ஆலோசனைக்கமைய நகரத் திட்டமிடல் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் லக்கி ஜயவர்த்தனவின் ஒருங்கிணைப்பில் ஆயிரம் கிராமங்களுக்கான சுத்தமான குடிநீர் வழங்கும் சமூக நீர் அபிமானத் திட்டம் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஒதியமலை கிராமத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த சமூக நீர் வழங்கல் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிக்கு ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட ஒதியமலை கிராமத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், தேசிய நீர் வழங்கல்வடிகாலமைப்பு சபை உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

திட்டமானது 10 மில்லியன் ரூபாவில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இதன் ஊடாக அந்த கிராம மக்கள் தங்களுடைய குடிநீர் தேவைகளை நிவர்த்தி செய்யப்படும் என தெரிவித்துள்ளனர்.(2-28)

## காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகம் எங்கு திறந்தாலும் அதில் நம்பிக்கை இல்லை

### மன்னார் மாவட்ட அலுவலக இணைப்பாளர் தெரிவிப்பு



(மன்னார்)

காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகத்தின் பிராந்திய காரியாலயங்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தற்போது அமைக்கப்பட்டு வருகின்ற நிலையில், காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகம் எங்கு திறந்தாலும் அதில் தமக்கு நம்பிக்கை இல்லை என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தின் இணைப்பாளர் அன்ரன் சகாயம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாக சர்வதேசத்தை ஏமாற்றுவதற்கும்பொறுப்பு கூறலில் இருந்து தப்பிப்பதற்காகவும் எந்தவொரு பரிந்துறையையும் ஏற்றுக்கொள்ளாது அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்துவதற்காகவே இந்த காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகம் திறக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ் அலுவலகம் இயங்க ஆரம்பித்து ஒரு வருடம் கடந்தும் இன்னமும் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பாக எந்த வித உண்மை நிலையையும் கண்டறியாமல் ஒரு அதிகாரம் அற்ற ஒரு அமைப்பாக காணப்படுவதனாலே நாங்கள் இந்த அலுவலகத்தை எதிர்க்கின்றோம்.

இலங்கைக்கு மீண்டும் இரண்டு வருட கால அவகாசம் கொடுக்க வேண்டாம் என மக்கள் பல்வேறு போராட்டங்களை நடத்திய போதும் ஒரு சில தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கால அவகாசத்துக்கு கையொப்பம் இட்டுவிட்டு தற்போது கால அவகாசம் கொடுக்க வேண்டாம் என பொய்யாக மக்களிடம் நாடகம் ஆடுவதாகவும் குறிப்பிட்டார்.

சர்வதேசம் தமிழரின் பிரச்சினைகளை தீர்க்குமோ தெரியவில்லை. ஆனாலும் அவர்களை விட எங்களுக்கு வேறு வழி இல்லை என்பதாலே நாங்கள் சர்வதேசத்தை நம்புவதாகவும் தெரிவித்தார். (2-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநேகர் தங்கள் காலத்தின் பெரும் பாகத்தைப் பிறரை அவலத்துக்கு உள்ளாக்குவதிலேயே கழிக்கின்றனர். — லா புரூயர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# வரவு செலவுத் திட்டம் மூலம்

## 5 ஆயிரம் வீடுகள் வடக்கில் கட்டப்படும்

### வடக்கு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பிரதமரின் வடக்கு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் 10 ஆயிரம் வீட்டுத்திட்டத்திற்கான 4 ஆயிரம் வீட்டுத்திட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், மிகுதி 5 ஆயிரம் வீடுகளையும வரவு செலவுத் திட்ட நிதியில் மிக விரைவில் நடைமுறைப்படுத்த முடியுமென அமைச்சின் செயலாளர் எஸ்.சிவஞானசோதி தெரிவித்தார்.

யாழிற்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சின் செயலாளர் வலிகாமம் வடக்கு மயிலிட்டி பகுதியில் உள்ள முளவை என்ற கிராமத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் வீட்டுத்திட்ட வேலைத்திட்டங்களை பார்வையிட்டதுடன், வீட்டுத்திட்டம் வழங்கிய மக்களுடன் கலந்துரையாடியதுடன், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் கேட்டறிந்தார்.

அதன்பின்னர், ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி வடக்கு மாகாண அபிவிருத்தி அமைச்சின் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் 10 ஆயிரம் வீட்டுத்திட்ட நடவடிக்கைகள் கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்டு, செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதில் 4 ஆயிரத்து 750 வீடுகள தற்போது, நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. முதற்கட்ட வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டில் 4 ஆயிரத்து 750 வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

ஏனைய 5 ஆயிரத்திற்கும் அதிகமான வீடுகள் எதிர்வரும் வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்படும் நிதியில் இருந்து நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரு நடவடிக்கையாக அமைந்துள்ளது. பெண் தலைமைத்துவ குடும்பங்கள், இடம்பெயர்ந்த மக்கள், நலன்புரி நிலையங்களில் இருந்த குடும்பங்கள், மாற்றுத் திறனாளிகளின் குடும்பங்கள், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், இந்தியாவில் இருந்து இலங்கைக்கு மீள வந்த குடும்பத்தினர் உள்ளிட்ட பல குடும்பங்கள் புள்ளிகளின் அடிப்படையில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

வீட்டுத் திட்டத்திற்கு தெரிவு செய்வதற்கு புள்ளி அடிப்படை வைக்கப்பட்டுள்ளது. புள்ளி விபரங்களில் பாதிக்கப்பட்டவர்கள், தமது முறைப்பாடுகளை முன்வைப்பதற்கு முறைப்பாட்டுக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அந்த முறைப்பாடுகளை பிரதேச செயலாளர் மற்றும் அரசாங்க அதிபர் உட்பட தேசிய ரீதியில் முறைப்பாட்டினை முன்வைக்க முடியும்.

தேசிய கொள்கைகள், பொருளாதார அபிவிருத்தி அலுவல்கள், வடக்கு அபிவிருத்தி அமைச்சினால் முன்னெடுக்கப்படும் இந்த ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை 3 மாத காலத்திற்குள் முடிவிற்குள் கொண்டு வர முடியுமென மக்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

எனவே, அடுத்த கட்ட வீட்டுத்திட்டத்திற்கான கோரல்களைப் பெற்று வருகின்றோம். அதனடிப்படையில், அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றார். (ம-101)

## அதிகாரப் பகிர்வு தொடர்பான யோசனை அடுத்தவாரம்

### பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

அதிகாரப் பகிர்வு குறித்த பிரேரணையொன்று சகல கட்சிகளினதும் ஆதரவுடன் அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கண்டியில் ஊடகவியலாளர் ஒருவர் நேற்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

நிறைவேற்று அதிகார முறைமை, தேர்தல் முறைமை என்பன இழுபறி நிலைமையில் காணப்படுகின்றன.

அது குறித்து தீர்க்கமான ஒரு கருத்தைக் கூற முடியாது. இருப்பினும், அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில் கட்டாயம் பிரேரணையொன்றை முன்வைக்கவுள்ளோம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-3)

## தொழில் தேடுவோர் பதிவு செய்க

(யாழ்ப்பாணம்)

தொழில் நாடும் இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக யாழ். மாவட்டத்திலுள்ள சகல தொழில் தேடுபவர்களுக்குமான பதிவுகள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக நல்லூர் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள தொழில் நாடுவோருக்கான பதிவுகள் நாளை 05.03.2019ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 8.30 மணி தொடக்கம் பி.ப 3.00 மணிவரை நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சகல கிராம அலுவலர் அலுவலகங்களிலும் மேற கொள்ளப்படவுள்ளன. (ம)

## மாணவிகளை காப்பாற்ற முற்பட்டபோது இருவர் உயிரிழப்பு

கொழும்பிலிருந்து சென்ற ரயிலில் மோதி இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாவலப்பிட்டி, ஜயசுந்தர பிரதேசத்தில் ரயில் பாதையில் சென்று கொண்டிருந்த இருவரே ரயிலில் மோதி உயிரிழந்துள்ளனர்.

கொழும்பு - கோட்டையில் இருந்து எல்ல நோக்கி பயணித்து கொண்டிருந்த ரயிலில் இந்த மாணவி மற்றும் மாணவன் மோதுண்டுள்ளனர்.

நாவலப்பிட்டி பகுதியை சேர்நத மாணவனும் மாணவியுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

ஹர்ஷ குமார மற்றும் பாக்யா செவ்வந்தி ஆகியோரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

உயிரிழந்த மாணவன் மாணவி ஒருவருடன் ரயில் வீதியில் பயணித்து கொண்டிருந்தபோது மற்றுமொரு மாணவி அவ்விடத்தில் தொலைபேசியில் பேசியவாறு சென்றுள்ளார்.

இதன்போது எல்ல நோக்கி பயணித்த ரயிலை அவதானித்த மாணவன் தன்னுடன் இருந்த மாணவியை காப்பாற்றிவிட்டு மற்ற மாணவியை காப்பாற்ற முயற்சித்தபோது இருவரும் ரயிலில் மோதுண்டு உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## சிநேகபூர்வ மென்பந்து போட்டி

யாழ்ப்பாணம் தபாலக அணிக்கும் மொரட்டுவ தபாலக அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ மென்பந்து ரி20 துடுப்பாட்டப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு அரியாலை காசிப்பிள்ளை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு சுற்றுலா மேற்கொள்ளும் மொரட்டுவ தபாலக பணியாளர்களுடன் இப்போட்டி ஏற்பாடாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## திருநாளைப் போவார் போல சிதம்பரத்துக்கு கப்பல் போகும்

நந்தனார் என்றொரு நாயனார் நம் சைவ சமயத்தில் இருந்தார். அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர்.

சிதம்பரத்தைச் தரிசிப்பதற்காக அங்கு நாளை போவேன். நாளை போவேன் என்று அவர் கூறியதால், அவருக்கு திருநாளைப் போவார் என்ற பெயர் ஏற்படலாயிற்று.

சிவன் பால் பக்தி மிக்க நந்தனார் என்றோ ஒருநாள் சிதம்பரத்துக்குச் சென்றார் என்பதும் அவரை சிவன் சிதம்பரத்துக்கு அழைத்தார் என்பதும் பெரியபுராணம் கூறும் கதை.

சரி திருநாளைப்போவார் பற்றி இப்போது என்ன கூற வருகிறீர்கள் என்று நீங்கள் கேட்பதும் நமக்குத் தெரிகிறது.

சிதம்பரத்துக்கு நாளை போவேன் நாளை போவேன் என்று கூறிய நந்தனார் என்றோ ஒருநாள் தில்லை எனும் சிதம்பரத்தைச் சென்றடைந்தார்.

ஆனால் நம் மண்ணில் ஒவ்வொரு சிவராத்திரி தினத்துக்கும் முன்னதாக மன்னாரில் இருந்து சிதம்பரத்துக்குக் கப்பல் போக்கு வரத்து இடம்பெறும். சிதம்பரத்தில் சிவராத்திரி பூஜை வழிபாடுகளை நம்மவர்கள் பார்ப்பதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று ஊடகங்களில் செய்தி வரும்.

நம்மவர்களும் சிதம்பரத்து தில்லேஸ்வரப் பெருமான் மீது கொண்ட அளப்பெரும் பக்தியால், இந்த முறை எப்படியும் மன்னாருக்குச் சென்று கப்பல் ஏறி சிதம்பரத்துக்குச் செல்ல வேண்டும் என ஆசைப்படுவர்.

ஆனால் கப்பல் போகாது. இப்படி பல வருடங்கள் சொல்லியாயிற்று.

கடந்த 2017,2018ஆம் ஆண்டுகளில் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு மன்னாரில் இருந்து சிதம்பரத்துக்கு கப்பல் சேவை இடம்பெறும் என்றும் குறைந்த கட்டணத்தில் நம்மவர்கள் சிதம்பரம் செல்லலாம் என்றும் சிவசேனை அமைப்பு அறிவித்திருந்தது.

சிவசேனை அமைப்பு விடுத்த அறிவிப்பு என்பதால், அதனை மக்கள் நம்பினர். இந்த வருடம் எப்படியும் கப்பல் ஏறி சிதம்பரத்துக்குச் சென்று சிவராத்திரி விரதத்தை அங்கு அனுஷ்டிப்பது என்று நம்மவர்கள் விரதம் பூண்டனர்.

ஆனால் கப்பல் வரவும் இல்லை. சிதம்பரம் போகவும் இல்லை.

சரி இந்த வருடமாவது (2019) கப்பலில் போகலாமென்றால், நாளை சிவராத்திரி தினம். கப்பல் இன்னமும் வரவில்லை. ஆக, இப்படியே நம்மவர்கள் அடுத்த வருடம் சிதம்பரத்துக்கு கப்பலில் போகலாம் என்று நம்புகிறார்களே தவிர, அது நடைமுறைப்படுவதாகத் தெரியவில்லை.

பரவாயில்லை, இப்போது இலங்கையில் ஏமாற்றப்படக் கூடிய சமயம் நம் சைவ சமயம் என்பதால் எவ்வளவு உச்சமாக நம்மை ஏமாற்ற முடியுமோ அந்தளவுக்கு ஏமாற்றட்டும்.

ஆனால் நாம் கேட்பதெல்லாம் சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு மன்னாரில் இருந்து சிதம்பரத்துக்கு (தமிழகம்) கப்பல் சேவையை நடத்த இந்தியத் துணைத் தூதுவர் உதவி புரிய வேண்டும் என்பதுதான்.

அவ்வாறு கப்பல் சேவையை செய்து கொடுத்தால், சிதம்பரத்து தில்லைக்கூத்தனைத் தரிசிக்க வேண்டும் என்று தங்கள் முதுமை வயதிலும் சதா நினைத்திருக்கும் நம்மவர்களுக்கு அந்தச் சிதம்பரத்தானைத் தரிசிக்கும் பெரும் பேறு கிடைக்கும்.

இதனை நம் இந்தியத் துணைத்தூதர் ஸ்ரீமான் பாலச்சந்திரன் அவர்கள் அடுத்த வருடத்திலேனும் செய்து கொடுப்பார் என நம்பலாம்.

இல்லையேல் திருநாளைபோவார் போலவே சிதம்பரத்துக்கான கப்பல் சேவையும் இருக்கும்.

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- அந்நியரை வரவேற்று விருந்தோம்ப மறவாதீர்கள். இவ்வாறு விருந்தோம்பியதால் சிலர் தங்களை அறியாமலே வான தூதர் களையே மகிழ்ச்சிப்படுத்தியதுண்டு. முணுமுணுக்காமல் ஒருவருக்கொருவர் விருந்தோம்புங்கள்.
- மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுக்குள் ஒருவருக்கு நீங்கள் செய்ததை எல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.
- நீர் விருந்துக்கு அழைக்கும்போது ஏழைகளையும், உடல் ஊனமுற்றோரையும், கால் ஊனமுற்றோரையும், பார்வையற்றோரையும் அழையும்.
- நேர்மையாளரின் பாதை வைகறை ஒளிபோன்றது. அது மேலும் மேலும் பெருகி நண்பகலாகின்றது.
- சான்றோரின் ஒளி சுடர்வீசிப் பெருகும். பொல்லாரின் விளக்கோ அணைக்கப்படும்.
- நீங்கள் எல்லோரும் ஒளியைச் சார்ந்தவர்கள். பகலில் நடப்பவர்கள். நாம் இரவையோ, இருளையோ சார்ந்தவர்கள் அல்ல.
- நீங்கள் சகோதரர்கள் அல்லவா? ஏன் ஒருவருக்கொருவர் தீங்கிழைத்துக் கொள்கிறீர்கள்?
- நம் சகோதர சகோதரிகளை வெறுப்போர் அனைவரும் கொலையாளிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தென்மராட்சி கல்வி வலயங்களுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டி கடந்த 28 ஆம் திகதி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் வரணி மத்திய கல்லூரியின் 16 வயதுப் பிரிவு அணி சம்பியன் பட்டத்தை வென்றதுடன் 20 வயது அணி 2ஆம் இடத்தையும் 18 வயதுப்பிரிவு அணி 3 ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டது. (க-29)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# தென்மராட்சி கல்விவலய எல்லே போட்டி வரணி மத்திய கல்லூரி அணி சம்பியன்




தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்,பெண் பிரிவுகளுக்கிடையிலான எல்லே போட்டிகள் வரணி மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த புதன்கிழமை இடம் பெற்றன.

போட்டிகளில் வரணி மத்திய கல்லூரி இரு பிரிவுகளிலும் வெற்றி பெற்று சம்பியனாகின. இறுதிப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் வரணி மத்திய கல்லூரி அணியும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியும் களமிறங்கின. முதலில் துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட பந்து வீச்சில் 1 புள்ளியினைப் பெற்றிருந்தது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வரணி மத்திய கல்லூரி 2 புள்ளிகளை பெற்று முதலிடம் பெற்றது.

பெண்கள் அணிகளுக்கான எல்லே போட்டியின் இறுதிப் போட்டியில் வரணி மத்திய கல்லூரி அணியும் சாவகச்சேரி மகளிர் கல்லூரி அணியும் களமிறங்கின.

நிர்ணயிக்கப்பட்ட பந்து வீச்சில் சாவகச்சேரி மகளிர் கல்லூரி அணி 5 புள்ளிகளையும் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வரணி மத்திய கல்லூரி 6 புள்ளிகளையும் பெற்று முதலிடம் பெற்றது. (க-10)

# கோல்மழை பொழிந்த ஆட்டம்; ஆனைக்கோட்டை யூனியன் வெற்றி

யாழ்ப்பாணம் லீக்கின் 75 ஆவது ஆண்டு நிறைவையொட்டி, யாழ்.மாவட்டத்திலுள்ள லீக்குகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடத்தி வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியின் முதற்சுற்று ஆட்டங்கள் தற்போது லீக் முறையில் நடைபெற்று வருகின்றது.

லீக் சுற்றின் இறுதியான ஆட்டமொன்றில் ஆனைக்கோட்டை யூனியன் அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணி மோதியது. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில், இரு அணிகளும் மாறிமாறி கோல் மழை பொழிந்தன. இறுதியில் யூனியன் அணி, 07:06 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. (க-26)

# அரையிறுதிக்குள் நுழைந்தது குருநகர் பாடும்மீன் அணி

யாழ்ப்பாணம் லீக்கின் 75 ஆவது ஆண்டு நிறைவையொட்டி, யாழ்.மாவட்டத்திலுள்ள லீக்குகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடத்தி வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியின் முதற்சுற்று ஆட்டங்கள் தற்போது லீக் முறையில் நடைபெற்று காலிறுதியாட்டங்களுக்கு அணிகள் உள்நுழைந்துள்ளன.

இதில் முதலாவது காலிறுதியாட்டம் கடந்த முதலாம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணியினை எதிர்த்து குருநகர் பாடும்மீன் அணி மோதியது. முதல்பாதியாட்டத்தில் பாடும்மீன் அணிக்கு, பனால்ட்டி வாய்ப்பொன்று கிடைக்க அதனை கோலாக மாற்றியது.

இரண்டாம் பாதியாட்டத்தில், முறையற்ற விதத்தில் செயற்பட்டார் என, பாடும்மீன் அணியின் நட்சத்திர வீரர் சாந்தன் சிவப்பு அட்டை காட்டப்பட்டு ஆட்டத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

அதன் பிறகு 10 வீரர்களுடன் ஆடிய பாடும்மீன் அணி, தடுப்பாட்டம் ஆடி, வெற்றியை உறுதி செய்தது. இறுதியில் பாடும்மீன் அணி, 01:00 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குள் நுழைந்தது. (க-26)





சர்வதேச சொடோகான் கராத்தே சங்கத்தினால் கராத்தே சுற்றுப் போட்டி கண்டி, டிகன உள்ளக விளையாட்டு அரங்கில் கடந்த 23ஆம் திகதி நடைபெற்றது. இப்போட்டியில் பூட்டான், இந்தியா, துருக்கிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்து போட்டியாளர்கள் இலங்கைக்கு வருகை தந்து இப்போட்டியில் கலந்து கொண்டிருந்தனர். இந்நிகழ்வில் நீண்டகால கராத்தே அனுபவம் வாய்ந்தவரும் சர்வதேசத்தில் 7ம் கறுப்புப் பட்டியும் இலங்கையில் 8ம் கறுப்புப் பட்டியும் பெற்ற சிகான் மா. இரத்தினசோதியின் மாணவன் சென்சி க. கமலேந்திரன் வரணி கிளை தற்காப்புக் கலையக போட்டியாளர்களும் கலந்து கொண்டனர். இதில் 7 வயது முதல் 32 வயது வரையான வரணி கிளை போட்டியாளர்கள் குறித்த கராத்தே சுற்றுப் போட்டியில் பங்கு பற்றி 3 தங்கப்பதக்கங்கள் உட்பட 12 பதக்கங்களை சுவீகரித்துள்ளனர். (க-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி முறை...

காட்டியுள்ள போதிலும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் பங்காளிகட்சிகள் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளன.

20ஆம் திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ உட்பட ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகளுடன் அடுத்த வாரம் ஜே.வி.பி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக அதன் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சியான தமிழ் முற்போக்கு கூட்டணி நிறைவேற்று அதிகார முறைமையை நீக்குவதற்கு உடன்பாடில்லை என்றவாறு கருத்துக்களை வெளியிட்டுள்ளது. (ம-3)

## பௌத்தத்தை உல...

புத்தகயா தூபியை திறந்து வைக்கும் புண்ணிய நிகழ்வு நேற்று பிற்பகல் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது நாட்டின் வரலாறு, கலாசாரம் மற்றும் பௌத்த மரபுரிமைகள் பற்றி பெருமையுடனும் கௌரவத்துடனும் பேச முடியுமாக இருப்பது தேரவாத பௌத்த சமயத்தின் மத்திய நிலையமாக அன்று எமது நாடு இருந்த தன் காரணத்தினாலேயே ஆகும். அந்த உன்னத பங்களிப்பை பாதுகாத்து உலகெங்கிலும் உள்ள அனைத்து மக்கள் மத்தியிலும் பௌத்த சமயத்தை கொண்டு செல்வது இன்றுள்ள பொறுப்பாகுமென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பர்மாவில் வசிக்கும் இலங்கை பிக்குகளுக்கு தங்குவதற்கு ஒரு இடம் இல்லாமல் இருப்பது பற்றி மகா சங்கத்தினர் ஜனாதிபதியிடம் முன்வைத்த கோரிக்கை பற்றி கவனம் செலுத்திய ஜனாதிபதி, இது பற்றி பர்மா அரசாங்கத்துடன் இராஜதந்திர மட்டத்தில் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். (ம-3)

## 5ஆம் திகதி பாரா...

வுத் திட்டம் தொடர்பான உரை மாத்திரமே இடம்பெறுமென்றும் 6ஆம் திகதி முதல் 12 ஆம் திகதிவரை இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நடைபெறுமென கூறப்படுகின்றது. மேலும் 12ஆம் திகதி மாலை 5 மணி க்கு வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது. (ம-3)

## 25 இலங்கை மீன...

தாக அந்நாட்டு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 25 ஆம் திகதி குறித்த மீனவர்கள் திக்கோவிட்ட மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து 4 படகுகளில் கடலுக்கு மீன்பிடிக்க சென்றுள்ளனர்.

இதன்போது சர்வதேச கடல் எல்லையைத் தாண்டி மாலைதீவு கடல் எல்லையில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டதால் குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.(ம-3)

## கிளிநொச்சி போரா...

பினர் சிறீதரன் தெரிவித்தார். கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த ஊடக சந்திப்பு நேற்று பிற்பகல் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழரசு கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றது. குறித்த ஊடக சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 25ம் திகதி கிளிநொச்சியில் இடம்பெற்ற காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் போராட்டத்தில் சில பிரதேச சபை உறுப்பினர்களும், மேலும் சில உறுப்பினர்களும் நடந்து கொண்ட விதம் தொடர்பில் செய்திகள், காணொளிகள் ஊடாக நாம் பார்த்தோம். அதன்படி குறித்த சம்பவம் தொடர்பில் நாம் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் குறித்த நபர்கள் அன்று நடந்து கொண்டமை தொடர்பில் தவறு என்பதை கண்டறிந்தோம்.

அதன்படி குறித்த உறுப்பினர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதேவேளை அன்று அவர்கள் நடந்து கொண்ட விதம் தொடர்பிலும், பத்திரிகையாளர்களுடன் நடந்துகொண்ட விதம் தொடர்பிலும் நான் பகிரங்கமாக மன்னிப்பு கோருகின்றேன் என சிறீதரன் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த போராட்டத்தில் காணாமல் போனோர் விடயத்தில் பொறுப்பு கூறவேண்டியவர்களும் கலந்து கொண்டு கோபத்தை சீண்ட கூடிய வகையில் நடந்து கொண்டனர் எனவும், அதனாலும் இவ்வாறு இளைஞர்கள் சிலர் சீண்டப்பட்டு அவர்களின் உணர்வுகள் தூண்டப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (ம-15)

## ஜெனிவாவில் இல...

அதேபோன்று எதிர்வரும் 20 ஆம் திகதி இலங்கை தொடர்பான விவாதம் இடம்பெறவுள்ளதுடன் இம்முறையும் முக்கிய பல நாடுகள் இலங்கைக்கு எதிராக கடும் போக்கை கையாண்டு வருகின்றன.குறிப்பாக ஐ.நாவில் சிறப்பு அந்தஸ்துடைய சர்வதேச அரச சார்பற்ற மனித உரிமைகள் அமைப்புகள் இலங்கைக்கு எதிராக குரல் எழுப்ப உள்ளன.

மறுபுறம் இலங்கை தொடர்பாக தீர்மானம் ஒன்றை இணை அனுசரணை நாடுகளுடன் இணைந்து முன்வைக்க பிரித்தானியா தீர்மானித்துள்ளது. இந்த தீர்மானம் குறித்த முறைசாரா கலந்துரையாடலை ஜெனிவாவில் இன்று நடத்தவுள்ளது.

இலங்கையின் பொறுப்புக்கூறல் மற்றும் மனித விவகார விடயங்கள் தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் முக்கிய நாடுகள் இறுக்கமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. குறிப்பாக பிரித்தானியா, கனடா உள்ளிட்ட நாடுகள் குறிப்பிட்ட கால வரையறைக்குள் இலங்கை ஆக்கபூர்வமான முன்னெடுப்புகளை வெளிப்படுத்தாவிடின் சர்வதேசத்தின் நேரடி தலையீட்டிற்கான பொறிமுறையினை உருவாக்கும் வகையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஏற்கெனவே இலங்கைக்கு வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் முடிவடைந்துள்ள நிலையில் உறுதிமொழிகளை நிறைவேற்றுவதில் இலங்கை இன்னும் முழுமைபெறவில்லை என இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஐ.நா விசேட நிபுணர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அந்த வகையில் இலங்கைக்கு மேலும் காலஅவகாசம் வழங்கும் வகையிலான தீர்மான முன்வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை பிரித்தானியா, கனடா, ஜேர்மனி , மசிடோனியா மற்றும் மொன்ரனிக்கோ ஆகிய நாடுகள் இணைந்தே இந்த தீர்மானத்தை கொண்டுவரவுள்ளனர். எதிர்வரும் 20ஆம் திகதி மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான புதிய தீர்மானத்தை சமர்ப்பிக்கவுள்ளன. (ம-3)

## மேலிடத்தில் கேட்...

ஏற்பாடு செய்த கூட்டம் நேற்று யாழில் இடம்பெற்றது.

இலங்கை விவகாரத்தில் ஐ.நா மனித உரிமைகள் பேரவை எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை வலியுறுத்தி, மகஜர் வடிவம் ஒன்றை ரெலோ முன்னதாக தயாரித்திருந்தது. அந்த வடிவத்தை கட்சிகளின் பிரநிதிகளிடம் சமர்ப்பித்து கலந்துரையாடப்பட்டது. கட்சிகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி அவர்களின் அபிப்பிராயங்களை பெற்று இறுதி வடிவம் தயாரானது.

ரெலோ தயாரித்த வடிவத்தில், பொறுப்புக்கூறலிற்கு காலநீடிப்பு வழங்கக்கூடாது, இலங்கையின் போர்க்குற்ற விவகாரங்கள் பொதுச்சபைக்கு கொண்டு செல்லப்பட்டு, உடனடியாக குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கு கட்சிகளின் பிரதிநிதிகள் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை.

அந்த வடிவத்தின் ஏனைய விடயங்களில் திருத்தங்கள் செய்யப்பட்ட போதும், இதில் திருத்தம் செய்யப்படவில்லை. கூட்டத்தில் பங்கேற்ற கட்சிகளின் பிரதிநிதிகள் இதை ஏற்றுக்கொண்டு கையொப்பமிட சம்மதித்தன. ஆனால், ஒரேயொரு நிபந்தனையாக ரெலோவின் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், கோடீஸ்வரன் ஆகியோரை முதலில் கையொப்பமிட வேண்டுமென குறிப்பிட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக கட்சி எடுக்கும் முடிவுகளிற்கு மாறாக, தமிழரசுக்கட்சியின் விருப்பப்படி இருவரும் இயங்குகிறார்கள் என்ற அபிப்பிராயம் அரசியலரங்கில் ஏற்பட்டதையடுத்தே, இந்த நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு காலஅவகாசம் வழங்கக் கூடாது, போர்க்குற்ற விடயங்கள் குற்றவியல் நீதிமன்றிற்கே பாரப்படுத்தப்பட வேண்டும் என்பதை மாவை சேனாதிராசாவும் ஏற்றுக் கொண்டார். எனினும், கட்சியின் பொறுப்பானவர்களுடன் கலந்தாலோசிக்காமல் தன்னால் கையொப்பமிட முடியாது, அவர்களுடன் கலந்துரையாடிவிட்டு கையொப்பமிடுவது பற்றி சொல்வதாக தெரிவித்து, தயாரிக்கப்பட்ட வரைவின் பிரதியொன்றை பெற்றுக்கொண்டு சென்றுள்ளார்.

தற்போது இந்தியாவில் உள்ள சி.வி.விக்னேஸ்வரன் தொலைபேசி வழியாக எம்.கே. சிவாஜிலிங்கத்துடன் பேசினார். வரைபை தயாரிக்கும்படியும் சிவராத்திரியை முடித்துக் கொண்டு யாழ்ப்பாணம் வந்து விடுவேன் என்றும் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில், அமைப்பாளர் மணிவண்ணனிடமே அழைப்பு விடுக்கப்பட்டது. சிவாஜிலிங்கம் பேசியிருந்தார். வருவதாக கூறியவர், இறுதிவரை வரவில்லை.

இதேவேளை, நாளை அல்லது மறுதினம் மீண்டும் சந்தித்து, ஐ.நாவில் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கக்கூடாது என்பதை வலியுறுத்தி, வெகுஜன போராட்டமொன்றிற்கு அழைப்பு விடவும் திட்டமிடப்பட்டுள்ளது. (ம-3)

## இலங்கை தொட...

விக்கப்பட்டது.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள யாழ்பாடி விடுதியில் நேற்று சனிக்கிழமை கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தின்போதே ஐ.நா. ஆணையாளரிடம் கையளிப்பதற்காக தாம் மாதிரி அறிக்கை ஒன்றை தயாரித்து தமிழரசுக்கட்சியிடம் வழங்கியதாக அவர் தெரிவித்தார்.

குறித்த அறிக்கையில் மூன்று கோரிக்கைகளை உள்ளடக்கியதாகவும் அவர் தெரிவித்தார். குறித்த அறிக்கையில் தமிழ் அரசியல் தலைவர்களிடம் கையெழுத்து பெறப்பட்டு ஐ.நா. ஆணையாளரிடம் நேரடியாக வழங்கப்படவுள்ளதோடு, அதன் பிரதிகள் பல தரப்பினருக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். (ம-3)






### கொவிசெத

| | |
|---|---|
| திகதி | 2019.03.02 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2051 |

ஆங்கில எழுத்து: P — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 04 18 39 74

தேசிய லொத்தர் சபை

### சுபிரி வாசனா

| | |
|---|---|
| திகதி | 2019/03/02 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1408 |

எழுத்து: 09 — வெற்றி இலக்கம்: 06 36 41 46 48 38

### ஜாதிக சம்பத

| | |
|---|---|
| சீட்டிழுப்பு திகதி | 02-03-2019 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 922 |

ஆங்கில எழுத்து: O — வெற்றி இலக்கங்கள்: 9 8 1 3 6 0

தேசிய லொத்தர் சபை

### செவண

| | |
|---|---|
| திகதி | 2019/03/02 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 166 |

ஆங்கில எழுத்து: J — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 10 15 41 59

தேசிய லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

நெல்லியடி நகர்ப்பகுதியில் புதிதாக கட்டப்பட்ட கடை விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்:

**077 703 5624** (7681)



## விரைவு பொதிகள் சேவை

**விசேட விலை குறைப்பு**



(C-5632)

DELIVERY IN 3-5 DAYS

UK- 550 /=Kg
கனடா- 900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

0768226240

V2 TRAVELS

● மானிப்பாய்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை



## புதிய பிரிவுகள் ஆரம்பம்

வங்கியியல் கற்கைநெறிகள்
**Banking courses**
**IABF&DABF**
(Tamil & English Medium)
Qualification : G.C.E. O/L 6 Passes with 5 credits including Maths

கணக்காளர் கற்கைநெறிகள்
**Chartered Accounting Courses**
Executive Level
(Tamil&English Medium)
Qualification :- G.C.E A/L 3 Passes

**Certificate Course in English**
18 Batches have Successfully Completed the course.Register Your names.

Further Details:
Jaffna College
Undergraduate Dept.
464,Hospital Road, Jaffna.
0212223382 / 0212229149
(C-5660)



வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION **070 330 5500** WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி (C-5622)

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை


# காணிகளை ஒப்படைக்க கோரி...

முன்னெடுத்தனர்.

காணி விடுவிப்பு தொடர்பான போராட்டங்களில் ஈடுபட்டு வரும் முல்லைத்தீவு, கேப்பாபுலவு, யாழ் வலி வடக்கு, மயிலிட்டி மற்றும் பலாலி மக்களைப் போலவே தொடர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள மன்னார் சிலாவத்துறை மக்களினதும், பல வருடங்களாக சட்டத்தின் மூலம் நீதியைப் பெற்றுக் கொள்வதற்காக போராடும் பள்ளிமுனை மக்களினதும் காணி உரிமையும் கடற்படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள முள்ளக்குளம், சம்பூர், பானம, அஷரப் நகர் மக்களின் காணிகளையும் அவர்களுக்கு மீள கையளிக்குமாறும் அரசாங்கத்திடம் வலியுறுத்துவதாக ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் இதன்போது தெரிவித்தனர். (ம-3)


## காணி விற்பனைக்கு

ஓமந்தை புகையிரத நிலையத்திற்கு அண்மையில் 2 வீட்டுடன் கிணறு உட்பட 7 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு.
(பண்ணை அல்லது விவசாயம் அல்லது சிறு கைத்தொழிலுக்கு உகந்தது) (7718)

**தொடர்புகளுக்கு : 0777310414**



## வேலையாட்கள் தேவை

சைவ உணவகம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. மூன்று நேர உணவு, தங்குமிட வசதி, கவர்ச்சியான சம்பளம்.

1. உணவு பரிமாறுபவர்கள் (ஆண்/பெண்)
2. இடியப்பம் போடுபவர்கள் (ஆண்/பெண்)
3. சுத்திகரிப்பாளர்கள்
4. குசினி வேலையாட்கள்
5. பார்சல் கட்டுபவர்கள்
6. பில் கிளார்க்
7. ஆட்டோ ஓட்டுபவர்

(வயது வந்தவர்கள், தங்கி நிற்பவர்கள்) (7734)

**தொடர்புகளுக்கு :**
**0777 917 753, 021 222 2373**



## புதியதோர் பயிற்சி நிறுவனம்

இலங்கையிலே முன்னணியில் திகழும் எமது நிறுவன மானது தனது பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பினை வழங்கவுள்ளது. உங்களுடைய தகைமைகளுக்கேற்ப வேலையினை பயிற்சியின் பின்னர் பெற்றுக்கொள்ள முடியும். கீழ்க்காணும் பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இன்றே எங்களுடன் இணையுங்கள்.

| | |
|---|---|
| உதவி முகாமையாளர் | - 02 |
| கணக்காளர் | - 02 |
| வரவேற்பாளர் | - 01 |
| விநியோகஸ்தர் | - 04 |
| மேற்பார்வையாளர் | - 03 |

(7720)

போன்ற பதவிகள் எம்மிடம் உள்ளது. உங்களின் தகைமைக்கேற்ப வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்ள முடியும்.

**மேலதிக தொடர்புகளுக்கு :**
**021 314 2828, 076 459 7960**



FALC FRENCH LANGUAGE CENTRE



## பிரெஞ்சு

(C-5631)

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.

40, பலாலி வீதி, அரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 05.03.2019, செவ்வாய் 2.15 மணி

181, பிரதான வீதி, நெல்லியடி.
0779 789 456 / 0762 669 614
ஆரம்பம் :06.03.2019, புதன் 3.30 மணி

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.






Star Rest
Grand Wedding Hall
& Luxury Apartment Rooms

# திருமண மண்டபம்

கிளிநொச்சி நகரில் பரந்தன் சந்திக்கு அருகாமையில் அதிநவீன நுட்பத்துடன் முற்றிலும் குளிரூட்டப்பட்ட திருமணமண்டபம்

**LUXURY APARTMENT ROOMS**
மற்றும் ரெஸ்ரோறன்ற்

- எழில் மிகு கிளிநொச்சியின் மாலைக்காட்சியை ரசிப்பதற்கான மேடைத்தளத்திலுள்ள BBQ Roof Top ரெஸ்ரோறன்ற்
- இந்தியன் வெஸ்டன் சைனிஸ் உணவுகளுடன் கூடிய திருமணம் மற்றும் சகல நிகழ்வுகளுக்கும் அலுவலக கலந்துரையாடல் சிறந்த முறையில் ஒழுங்கு செய்து தரப்படும்

- திருமண மண்டபம்
- Family ரெஸ்ரோறன்ற்
- சமைப்பதற்கான வசதிகள் கொண்ட Rooms
- இலவச Wifi வசதிகள் D/J Dmx தொழில்நுட்பம்
- விஸ்தரிக்கப்பட்ட வாகன தரிப்பிடம்
- மணமகள் அலங்காரம்

160th Mile Post
5th Canal Lane
A9 Road, Paranthan.

0212280555
0772315521
www.starresthotel.com
Star Rest Hotel

(7717)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆ[illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper in Srilanka

விலை : 30.00

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 207

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2050 | 03.03.2019 | தொலைபேசி : 021 222 3378



# ஊரை இழந்தோம் உடைமையை இழந்தோம் உறவை இழக்கலாமா?

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் எண்டு வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். எங்கள் மண்ணில வைத்திய நிபுணராக இருந்து அரும் பணியாற்றிய பேராசிரியர் சிவசூரியா அவர்களும் நோய்க்கூற்றியல் வைத்திய நிபுணர் பத்மநாதன் அவர்களும் அண்மையில் காலமாகி விட்டனர். அவர்களுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எண்டு கூற மீண்டும் அனைவரும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

ஆலடியில் சிறிதுநேரம் அமைதி நிலவியது. அந்த அமைதியைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:** என்ன இந்த முன்றயும் இலங்கை அரசுக்குக் கால அவகாசம் கொடுக்கக் கூட்டமைப்பு தயாராக இருக்கிறது எண்டு பரவலாகப் பேசப்படுகுது.

**கங்காணியார்:** யானை த்ன் தலையில தானே மண்ணை அள்ளிக் கொட்டுகிற விளையாட்டுத்தான் கால அவகாசம் கொடுப்பதை கூட்டமைப்பு ஆமோதிக்கிற விடயமாக இருக்கும்.

**மூப்பர்:** என்ன கங்காணியார் சொல்லுறியள்?

**கங்காணியார்:** ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில இந்த முறையும் இலங்கை காலஅவகாசம் கேட்கும். அவ்வாறு காலஅவகாசம் கேட்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது ஆதரவைத் தெரிவிக்குமெண்டு பரவலாகக் கதைபடுகுது.

இவ்வாறு காலஅவகாசம் கொடுப்பதற்கு கூட்டமைப்பு இணங்கினால் தமிழ் மக்கள் கூட்டமைப்புக்குத் தக்கபாடம் புகட்டுவினம்.

**வாத்தியார்:** எதற்கும் பொறுத்திருந்து பார்ப்பம். ஐ.நா.மனித உரிமைகள் கூட்டத் தொடரில கலந்து கொள்வதில்லை எண்டு இலங்கை அரசு தீர்மானித்திருக்கிற மாதிரியான தகவல்களும் உண்டு.

**சாத்திரியார்:** அப்ப அந்த நேரம் காலஅவகாசம் கொடுக்காமல் விட்டிருந்தால் ஏதோவொரு முடிவு கிடைச்சிருக்கும் தானே!

**பண்டிதர்:** எங்களிட்ட ஒற்றுமையில்லை. ஒன்றாக ஓரணியில் குரல் கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இல்லை எண்டால் ஏமாந்து போறதுதானே!

**கங்காணியார்:** அதுசரி திருகோணமலை கோணேசுவரர் கோயிலுக்கு அருகில வைத்த சிவலிங்கத்தை விசமிகள் உடைச்சுப் போட்டினமாம்.

**விதானையார்:** பௌத்தத்திற்கு முதலிடம் எண்டு எங்கட தமிழ் அரசியல் தலைமை ஏற்றுக் கொண்டால் அவையள் சிவலிங்கத்தை உடைப்பினம் தானே!

**பண்டிதர்:** என்ன செய்யிறது இலங்கைவேந்தன் இராவணனால் அமைக்கப்பட்ட திருக்கோணேசுவரத்தில கூட சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்ய முடியாமல் இருக்குது.

நீங்கள் சிவலிங்கத்தை வைத்தால் நாங்கள் புத்தர் சிலையை வைப்பம் எண்டு அவையள் சொல்லுகினமாம்.

எங்கட ஆட்கள் என்ன கண்டி தலதாமாளிகைக்குப் பக்கத்திலயோ சிவலிங்கத்தை வைச்சவியள். திருக்கோணேச்சரம் பாடல் பெற்ற சிவத்தலம். இலங்கையை தமிழர்கள் ஆண்ட வரலாற்றுடன் தொடர்புபட்ட திருக்கோணேச்சர ஆலயத்திற்கு அருகில் சிவலிங்கத்தை வைக்கிறது பிழை எண்டால் இனி இலங்கையில தமிழர்கள் வாழ முடியாது என்பது தானே பொருள்.

**வாத்தியார்:** இப்ப வட புலத்தில முக்கியமான இடங்களில சிவலிங்கத்தை நிறுவுகின்ற நடவடிக்கை நடக்குது. இதனை அனைவரும் ஆதரிக்க வேணும்.

இலங்கையை சிவபூமி எண்டு திருமூலர் போற்றியிருக்கிறார். எனவே இலங்கை முழுவதிலும் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்ய வேணும். இந்த முயற்சியில ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுப்பது கட்டாயமாகும்.

**பண்டிதர்:** இலங்கையில சிவ வழிபாடு நலிவுற்றதும் தான் எங்கட கஷ்டங்களுக்குக் காரணம். பஞ்ச ஈச்சரங்கள் கொண்ட இலங்கை மண்ணில சிவ வழிபாட்டிற்கு முன்னுரிமை கொடுக்க வேணும்.

**விதானையார்:** அதோட, எங்கட சமய கலாசாரங்களையும் நாங்கள் பின்பற்றுறது கட்டாயமாகும். நாகரிகம், புதிய நடைமுறை எண்ட எடுப்பில வாழ்க்கையின்ர அர்த்தங்களை இழந்து போறம்.

**கங்காணியார்:** என்ன விதானையார் சொல்லுறியள். நீங்கள் சொல்லுறதைக் கொஞ்சம் தெளிவாகச் சொல்லுங்களன்.

**விதானையார்:** முன் எல்லாம் வீடுகளிலும் கோயில்களிலும் தான் திருமணங்கள் நடந்தன. ஆனால் இப்ப திருமண மண்டபங்களிலதான் திருமணம் நடக்குது. ஆனால் திருமண மண்டபத்திற்குள்ள செருப் போட போகினம்.

அந்தணர் இருந்து அக்னி வளர்த்து, வேதம் ஓதி, மாங்கல்யதாரணம் நடந்த இடத்திலும் சப்பாத்தோடும் செருப்போடும் ஏறி நிற்கிறது எண்டால் எங்கட வாழ்க்கையின்ர அடிப்படைகளே அறுந்து போகுதல்லோ.

**சாத்திரியார்:** விதானையார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. அதிலும் சில திருமண மண்டபங்களில பிறந்த நாள் கொண்டாட்டம், வரவேற்பு உபசாரம் என்ற பெயரில இறைச்சி, மாமிசங்களும் சமைச்சுப் பரிமாறுகினம்.

இல்லற வாழ்க்கையில இணைகின்ற ஒரு உன்னதமான சடங்கு தான் திருமணம். அந்தத் திருமணம் நடக்கிற மண்டபம் ஆலயத்திற்குச் சமனாக இருக்க வேணும்.

ஆனால் இப்ப திருமண மண்டபங்களில மாமிசச் சாப்பாடுகள் சமைக்கினம் எண்டால் எங்கட வாழ்வியல் அடிப்படையை நாங்கள் தொலைத்துப் போட்டம் என்பதுதானே பொருள்.

**விதானையார்:** என்ன செய்யிறது. ஒருவர் திருமண மண்டபம் கட்டினால் அதைப் பார்த்து எல்லாரும் திருமண மண்டபம் கட்டுறது. பிறகென்னண்டு திருமண மண்டபங்கள் இயங்குகிறது. 8 கோடி, 9 கோடி ரூபாய் எண்டு செலவு செய்து கட்டின திருமண மண்டபங்கள் உழைப்பில்லாமல் இருக்க முடியாதென்பதால் இறைச்சிச் சாப்பாட்டுக் கொண்டாட்டங்களுக்கும் திருமண மண்டபங்கள் கொடுக்கப்படுகிற சூழ்நிலை ஏற்படுகுது.

**வாத்தியார்:** உண்மைதான். எங்கட வாழ்வியல் பண்பாடுகள் இப்ப வீழ்ந்து கொண்டு போகுது. ஒரு காலத்தில தமிழன் எண்டால் அவனுக்கெண்டொரு தனிப் பண்பாட்டுச் சிறப்பு இருந்தது. ஆனால் இப்ப...

**பண்டிதர்:** கடந்த ஒரு சில தினங்களுக்கு முன் காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தின்ர ஸ்தாபக நினைவு நாள் இடம்பெற்றது. அதில நடந்த பட்டி மண்டபத்திற்கு கம்பவாரிதி இ.ஜெயராஜ் நடுவராகக் கலந்து கொண்டிருந்தார். அவர் ஆற்றிய உரையில் இப்ப திருமணம் முடித்த புதுமணத் தம்பதிகள் தங்கட வீடுகளில முதலிரவைக் கழிக்காமல் வேறிடங்களுக்குப் போகினம். ஒழுக்கக் கேடுகள் நடந்த அறையில, கட்டிலில எங்கட வாழ்க்கையை ஆரம்பிப்பது எவ்வளவு மோசமான செயல். என் தந்தை, தந்தையின் தந்தை எண்டு எங்கட பரம்பரை வாழ்ந்த வீட்டில திருமணத் தம்பதிகள் தங்கியிருக்க வேணும். அதுதான் நல்ல வாழ்க்கையின் ஆரம்பமாக இருக்கும்.

இருந்தும் மேலைத்தேயக் கலாசாரத்தின் ஊடுருவலால எங்கட சந்ததி வாழ்ந்த வீடுகளில முதலிரவைக் கழிக்காமல் பலரும் வந்து போகிற ஹோட்டல்களில முதலிரவைக் கழிப்பது எவ்வளவு கேவலம். இதனை எங்கட பெரியவர்கள் கவனிக்க வேணும் எண்டு கம்பவாரிதி கூறினார். அதுமட்டுமல்ல திருமணச் சடங்குகளை எங்கட பெரியவர்கள் முன்னின்று நடத்த வேண்டும். ஆனால் இப்ப வீடியோக்காரர்கள் தான் திருமணத்தை நடத்துகினம். இதையெல்லாம் சகுனப் பிழை நடப்பதற்குக் காரணமாகிறது என்ற பொருள்பட கம்பவாரிதி இ.ஜெயராஜ் கூறியது உண்மை. இது விடயங்களில நாங்கள் கவனம் செலுத்தத்தான் வேணும்.

இப்படிப் பண்டிதர் கூற, அதன்ன ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



## ஈழநாடெங்கனும் சிவபூமி ஆகட்டும்

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. அமர்வில் காலஅவகாசம்;

## வரண்ட பாலைவனத்தில் நீர்வீழ்ச்சியை தேடுவதற்கு ஒப்பானது

இந்த வருடத்துக்கான இலங்கை இனப்படுகொலை சம்மந்தமான ஐ.நா அமர்வுகள் ஆரம்பிக்க இன்னும் சில நாட்களே இருக்கின்றன. அமர்வுகளில் பல தரப்புகள் இணைந்து தங்களுடைய பக்க நியாயங்களை புடம் போட்டு காட்டுகிற ஒரு வழமையான அரங்கேற்றம் ஐ.நா. முன்றலை அலங்கரிக்க இருக்கிறது.

முன்னைய தொடர்களிலேயே ஐ.நா. தீர்மானம் 30/1 என்ற தீர்மானத்தின்படி வரையறுக்கப்பட்ட பல விடயப் பரப்புகளை, சர்வதேசத்தினால் பரிந்துரைக்கப்பட்ட பல பரிந்துரைப்புக்களை இன்னும் பூர்த்தி செய்ய இலங்கை தவறிவிட்டது.

இருப்பினும் 2017 ஆம் ஆண்டு அமர்வுகளின் போது இலங்கைக்கான கால அவகாசம் நீடிப்பு தமிழர் பிரதிநிதிகளினால் வழங்கப்பட்டது யாவரும் ஊரே யாவரும் கேளீர் தான்.

அப்பொழுது காலஅவகாசம் வழங்கப்படுவதற்கு பல நியாயப்பாடுகளை பல வியாக்கியானங்களை தமிழர் தரப்புகளுக்கு முன்னிறுத்தி இருந்தது. அதாவது நல்லிணக்கத்தையும் பொறுப்புக் கூறலையும் ஏற்படுத்துவதற்கு இரண்டு வருடங்கள் அவர்களுக்கு கால அவகாசத்தை கொடுத்து பார்ப்போம்.

அதன் பின்னர் நடை பெறுவதை அவதானித்து நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்ற அடிப்படையில் இலங்கைக்கு காலஅவகாசம் எதிர்பாராத விதமாக வழங்கப்பட்டது.

2017 ஆம் ஆண்டு உருண்டோடி இரண்டு வருடங்கள் கடந்த பின்னும் கூட 30/1 தீர்மானத்தை முழுமையாக நிறைவேற்ற வக்கில்லாத வகையிலே இருக்கிற பொழுது மீண்டும் இரண்டு வருடங்கள் கால அவகாசத்தை பெற்று காலத்தை இழுத்தடிப்பு செய்து தமிழர்களுக்கான நீதியை நீர்த்துப் போகச் செய்கிற வகையில் நிகழ்ச்சிகள் ஆங்காங்கே எழுதப்பட்டுக் கொண்டிருக்கின்றனவா!! என்ற சந்தேகம் தமிழ் மக்கள் மத்தியிலே வலுக்க ஆரம்பித்திருக்கிறது.

**இந்த இரண்டு வருடங்களில் இலங்கை அரசு எந்த விடயங்களை சாதித்தது? 30/1 தீர்மானத்தின்படி நிறைவேற்றப்பட்டவை எவை?**

பொறுப்புக்கூறலில் இருந்து தப்பிக்கும் முகமாக பல ராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொண்டது தவிர தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வாக இன்னும் தானும் இந்த இலங்கைத் தீவிலே அவர்கள் மேற்கொண்டது என்ன? நல்லிணக்கத்தையும் சமாதானத்தையும் ஏற்படுத்த போவதாக கூறிக் கொண்டு இன்னும் தானும் ஒரு நல்லிணக்கத்தினையோ அல்லது பொறுப்புகூறலின் ஒரு படியை கூட எடுத்து வைக்க முடியாத ஒரு கையாலாகாத நிலையில் அரசு திகழ்ந்து கொண்டிருக்கிறது.

ஆக எந்த இலட்சணத்தில் இன்னும் இரண்டு வருட கால அவகாசத்தை அது தமிழர்களிடமிருந்தும், சர்வதேசத்திடமிருந்து கோரி நிற்கிறது என்கின்ற எண்ணத்தின் வெளிப்பாடுகள் புலப்படவில்லை.

அதற்கும் தமிழர் தரப்பில் கால அவகாசம் வழங்குவதற்கு ஏது நிலைகள் இருக்கிறதா இல்லையா என்ற சாதக பாதக நிலைகள் சம்பந்தமாக அரசல்புரசலாக கருத்துக்களும் வெளிவரத் தொடங்கியிருக்கிறது.

தமிழர் தரப்பாக தமிழர்களின் பிரதிநிதிகளாக இப்போது விளங்குகிற தமிழ் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் ஒருமுறை கால அவகாசத்தை வழ்ங்கி நீதி நெறிமுறைகளை இழுத்தடிக்க முண்டுகொடுத்து நிற்க போகிறதா?, அல்லது சர்வதேச பொறி முறை ஊடாக உகந்த நீதியை நிலை நிறுத்துவதற்கு முயலப் போகிறதா என்ற கேள்வி தொக்கி நிற்கிறது.

உண்மையிலேயே ஐ.நா.தீர்மானங்களுக்கு அமைவாக இன்னும் தானும் ஒரு படிநிலை வளர்ச்சியை காட்டாத இலங்கை அரசிடமிருந்து நாங்கள் மேலும் நீதியைப் பெறுவதற்காக மேலும் கால அவகாசத்தை வழங்குவதானது ஒரு வறண்ட பாலைவனத்தில் ஒரு பசுமையான நீர்வீழ்ச்சியை தேடிச் செல்வதற்கு ஒப்பானதாகும்.

இறுதி யுத்தம் முடிவடைந்து ஒரு தசாப்தம் முடிவடைய இருக்கின்ற பொழுது இன்னும் கால அவகாசம் வழங்கி இலங்கை அரசுக்கு பூட்டிய கடிவாள கயிறுகள் காலாவதியாகும் நிலைமையிலும், இனப்படுகொலையினுடைய சாட்சிகள் இல்லாது போகும் நிலையிலும், இன்னும் ஐ.நா தீர்மானங்களை நிறைவேற்றாத நிலையிலும் இலங்கை அரசு கால அவகாசத்தை கோரி நிற்கிறதென்றால் இதற்கு ஆழமான காரணங்கள் காணப்படுகிறது.

இதற்கு சர்வதேசமும் துணை போகிறதா என்ற கேள்விக்கப்பால் தமிழர் பிரதிநிதிகள் என்று கூறப்படுகிற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் துணை போகிறதா என்பது தமிழ் மக்களிடையே எழுந்து நிற்கிற மாபெரும் இமாலய கேள்வியாகும்.

இதற்கு இன்னும் சில உலக உருள்வுகள் உருப்படியான பதில்களை கூறி விட்டுச் செல்லும்.

மதுசூதன்



# நீதி கிடைக்குமா?

கடந்த வாரம் காணாமல் ஆக்கப்பட்ட பெற்றோர்களினால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் முகமாக திரண்ட மக்கள் பேரலை கிளிநொச்சி நகரமே மக்கள் வெள்ளத்தினாலும் அந்த மக்களின் கண்ணீர் வெள்ளத்தினாலும் கோஷங்களாலும் வானமும், மரங்களும் உட்பட உயர்திணை, அஃறிணை என அனைத்துமே அதிர்ந்து கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

தன்னார்வமாக ஒன்றுகூடிய மக்கள், மக்கள் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆர்வலர்கள், வர்த்தகர்கள் போன்ற பல தமிழ் உணர்வாளர்கள் ஒன்று சேர்ந்து இந்த ஆர்ப்பாட்டத்தை மிகவும் நேர்த்தியான முறையில் முன்னெடுத்திருந்திருந்தார்கள்.

ஆர்ப்பாட்டம் காலை 8 மணியளவில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்றலில் ஆரம்பித்து பல்வேறு கோஷங்களுடன் அதாவது சர்வதேச விசாரணைகளை வலியுறுத்தியும், சர்வதேச விசாரணையின் ஊடாக நீதிப் பொறிமுறையை சர்வதேசம் தமிழருக்கு தர வேண்டும் என்பதை வலியுறுத்தியும், இலங்கைக்கு இனியும் காலநீடிப்பு வழங்கக்கூடாது போன்ற பல கோஷங்கள் விண்ணதிர எழுப்பப்பட்டன.

ஐ.நாவிற்கும் சர்தேசத்திற்கும் அதாவது இலங்கை அரசுக்கு அவர்கள் கோரிக்கை விடுப்பதை தவிர்த்து சர்வதேசத்திடமே கோரிக்கைகளை முன்வைத்தார்கள்.

ஜெனீவா அமர்வுகளில் ஆரம்பமாக இருக்கும் தருவாயில் சர்வதேசத்தின் செவிகளுக்குள் அவர்கள் ஓங்கி கத்தியிருக்கிறார்கள்.

இவர்கள் சர்வதேசத்தின் நீதிக் கண்கள் பார்க்கும் முகமாகவும் அவர்களுடைய செவிகளுக்குள் சென்று நீதியை நிலைநாட்ட வலியுறுத்தியும் சர்வதேச குரல்வளையை கொஞ்சம் வலிமையாய் கிள்ளியே விட்டிருக்கிறார்கள்.

ஆக மொத்தத்தில் உலகம் முழுவதிலும் இலங்கை இனப்படுகொலை சம்மந்தமான ஐ.நா மனித உரிமை சபை அமர்வுகள் தொடங்குகிற காலகட்டத்தில் இந்த வடக்கு-கிழக்கு முற்றாக முடங்கியதும், மக்கள் பேரலை ஒரு மையப் புள்ளியில் ஒன்றுதிரண்டு தங்களுக்கான நீதியை அதாவது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் நீதிக் கோரிக்கைக்கும் அப்பால் சென்று இலங்கை இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை ஒன்று கட்டாயம் தேவை எனவும், இலங்கைக்கு கால நீட்டிப்பு வழங்கக்கூடாது என்பது போன்ற கோஷங்களை முன்வைத்து இன்று சர்வதேசத்தின் உடைய மனச்சாட்சியை மெல்ல கிள்ளி விட்டிருக்கிறார்கள்.

இன்றைய போராட்டமானது கிளிநொச்சி மாநகரின் மத்தியில் ஊடாக சுமார் ஐந்து கிலோ மீற்றர் தூரம் வரை நடந்து சென்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், காணாமல் ஆக்கப்பட்டோரின் வயது முதிர்ந்த தாய் மார்கள், அவர்களுடைய பிள்ளைகள் தணியாத கொளுத்தும் வெயிலில் சற்றும் தணியாத மன ஓர்மத்தோடு தண்ணீர் விடாயோடும், பசியோடும் விழியில் நீர் கசிந்து வழி எங்கும் நிரம்பி கோஷமிட்டு ஐநா பிரதிநிதி களுடைய அலுவலகத்திலே தங்களுடைய கோரிக்கை களை சமர்ப்பித்து இருக்கிறார்கள்.

இந்த நிகழ்வு சர்வதேசத்தை ஒருகணம் திரும்பி திரும்பி பார்க்க வைத்திருக்கும் என்பதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

தமிழ் மக்கள் மறப்போம் என்கின்ற எந்தவொரு நிலைப்பாட்டிலும் இல்லை என்பதையும் சேர்த்தே உலகத்துக்கும் இலங்கை அரசு அரசிற்கும் இன்று உணர்த்தியிருக்கிறார்கள்.

இனியும் சர்வதேசத்தின் செவிப்பறைகளுக்கு இவர்களின் மொழி புரியுமா?

நீதி கிடைக்குமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டியையும் அரசனாக்கும் ராகு



களஸ்திர தோஷம் என்றால் அனைவரும் கலங்குகிறார்கள். மாங்கல்ய தோஷம் என்றால் மிக வேதனையடைகிறார்கள். இராகு ஆண்களுக்குக் களஸ்திரஸ் தானத்திலும் பெண்களுக்கு மாங்கல்ய ஸ்தானத்திலும் இராகு கிரகம் ஜெனன காலத்தில் அமைந்திருப்பதையே கடுமையான தோஷமாக ஜோதிடம் கூறுகின்றது.

இந்த இராகு யார்? இவருக்கு இத்தகைய கொடிய மனோபாவமும் பலமும் எவ்விதம் வந்தது?

இறவாத தன்மையை தந்திடும் அமுதத்தை பெறுவதற்காக தேவர்களும் அசுரர்களும் மந்திர மலையை மத்தாகவும் வாசுகி சர்ப்பத்தை கயிறாகவும் கொண்டு பாற்கடலை கடைந்த கதை ஏற்கனவே எம்மவர்க்கு தெரியும். அமுதம் கிடைத்தது. அது தமக்கு மட்டுமே வேண்டும் என தேவர்களும் அரக்கர்களும் சண்டையிட்டுக் கொண்டனர்.

எப்பொழுதும் தர்மத்தை காக்கும் ஸ்ரீமத் நாராயணன் கண்டவர் காமுறும் மோகினி வடிவம் எடுத்து இரு பகுதிக்கும் நியாயமாக பரிமாறுவதாகக் கூறி, தேவர்கள் ஒரு பக்கமாகவும் அசுரர்கள் மற்றொரு பக்கமுமாக வரிசையாக வீற்றிருந்து அமுதத்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என இரு தரப்பும் ஒப்புக்கொண் டனர்.

ஆனால் மோகினி வடிவெடுத்த பெருமாள் முதலிலே தேவர்களுக்கு அமுதத்தைப் பரிமாறினார். அப்போது அசுரர்கள் வரிசையில் இருந்த சுவர்ணபானு என்ற அரக்கன் மகாவிஷ்ணுவிடம் சந்தேகம் கொண்டு தானும் ஒரு தேவனாக உருக்கொண்டு சூரியனுக்கும் சந்திரனுக்கும் மத்தியில் அமர்ந்து கொண்டார்.

சுவர்ணபானுவின் வஞ்சகத்தைக் கவனித்த சூரியனும் சந்திரனும் மோகினி வடிவெடுத்த மகாவிஷ்ணுவிடம் குறிப்பின் மூலம் தெரிவித்தார்கள். அதற்குள் அமுதத்தின் ஒரு துளியை அவசரமாகச் சுவர்ணபாகு விழுங்கிவிட்டார். அமுதம் தொண்டையில் இறங்கும் முன்னர் மோகினி கையில் உள்ள கரண்டியால் தலையைக் கொய்துவிட்டார்.

தலைப்பக்கம் இரர்குவாகவும் கழுத்திற்குக் கீழ் உள்ள உடல் பகுதி கேதுவாகவும் மாறின.

இறைவனைக் குறித்து தவம் செய்து கிரக மண்டலத்தில் இராகுவும் கேதுவும் கிரகங்களாக விளங்கும் பேறு பெற்றனர்.

இராசி மண்டலத்தை பிரதட்சிணமாகச் சுற்றிவரும் இராகு அளவற்ற பலம் பெற்றவர். ஜாதகத்தில் இராகு தப பலம் பெற்று இருந்தால் ஆண்டியும் ஓர் இரவிலேயே அரசனாவான். ஆனால் நன்மை செய்யும் போது நேர்வழியில் நியாயமான முறையில் அந்த நன்மைகளை அளிக்கமாட்டார் இராகு. பெரும்பாலும் தவறான வழிகளிலேயே உயர்வைத் தருபவர். புதன், சுக்கிரன், சனி கிரகங்களை நண்பர்களாகக் கொண்ட இராகுவிற்கு குரு, சூரியன், சந்திரன் ஆகிய கிரகங்கள் பகைவராவார்.

மகாவிஷ்ணுவிடம் அமிர்தம் பகிர்ந்த காலத்தில் சூரியனும் சந்திரனும் தன்னைக் காட்டிக் கொடுத்ததால் சில கிரக நிலைகள் ஏற்படும் போது அவர்களைப் பிடிக்கும் அனுமதியையும் இறைவனிடத்தில் வரமாகப் பெற்றவர் இராகு. அவ்விதம் சூரிய, சந்திரர்கள் தற்காலிகமாக பீடிக்கப்பட்டு ஒளி குன்றும் காலகட்டமே 'கிரகண காலம்' எனப்படுகின்றது.

ஜெனன காலத்தில் இராகு தோஷம் ஏற்பட்டுள்ளவர்கள் கீழே கூறிய மந்திரத்தை தினமும் இராகுகாலத்தில் கூறி இராகுவை வழிபடுவது அளவற்ற நற்பலன்களை அளிப்பதோடு தோஷமும் விலகும்.

'அர்த்த காயம் மகா வீரியம் சந்திராதித்ய விமர்தனம் ஸிம்ஹிகா கர்ப்ப ஸம்பூதம் தம் இராகும் ப்ரணமாம்யகம்'

**- சிவனடியான்**




# கால்பந்து விளையாட்டு



காற்று நிறைந்த பந்து, கட்டம் போட்ட பந்து
அங்கும் இங்கும் உருளுது பார்,
கால்கள் நடுவே நகருது பார்,
பல பல உதைகள் படுகுது பார்,

மனிதனுக்கு இணையாய் ஓடுது பார்,
வலையை நோக்கி ஓடுது பார்,
மக்கள் மனம் துடிக்குது பார்,
கோல் விழப்போகுமுன்னு நினைக்குது பார்,
அடடா ஹோலி தடுத்துவிட்டார்!

மீண்டும் அதனை உதைத்து விட்டார்
எதிர்ப்பக்க வலையை நோக்கி ஓடுது பார்
இங்கும் மக்கள் பதற்றம் பார்,
கோல் விழபோகுமுன்னு நினைக்குது பார்,

இங்கும் ஹோலி தடுத்து விட்டார்.
உலகம் இதனை விரும்புது பார்,
உற்சாகம் கொள்ளுது பார்,
எதிரெதிர் அணியாய் இருந்தாலும்,
முடிவில் அனைவரும் நண்பர்கள்தான்..

# வழிகாட்டுங்கள்



"ஏன் சோகமா இருக்கே?"

"நான் செல்லமா வளர்த்த நாய் காணாமப் போயிடுச்சி"

"பேப்பர்ல விளம்பரம் குடுக்க வேண்டியதுதானே?"

"குடுக்கலாம்... ஆனா என் நாய்க்கு எழுதப்படிக்கத் தெரியாதே!!"




செல்போனுக்கும் மனிதனுக்கும் என்ன வித்தியாசம்? மனிதனுக்கு கால் இல்லைன்னா பேலன்ஸ் பண்ண முடியாது. செல்போனில் பேலன்ஸ் இல்லைன்னா கால் பண்ண முடியாது.

# பொது அறிவு துணுக்குகள்

- உலகில் முதன் முதலாக அஞ்சல்தலை வெளியிட்ட நாடு இங்கிலாந்து.
- உலகை முதன் முதலில் சுற்றி வந்த கப்பல் விக்டோரியா.
- உலகில் முதன் முதலாக பத்திரிகைகளில் கார்ட்டூன் படங்களை வெளியிட்ட நாடு இத்தாலி.
- உலகில் முதல் கண் வங்கியைத் தொடங்கிய நாடு அமெரிக்கா.
- உலகின் முதல் கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டையை 1848 இல் தந்தை செர்ஹென்றிகோலி என்பவரால் உருவாக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## விடுதலைப் புலிகளின் போராட்டத்தை பாகிஸ்தான பிரதமர் ஏற்றுக் கொண்டுள்ளாரா?

## சர்வதேசத்தை நம்பியிருக்கும் தமிழருக்கு பயன் கிடைக்குமா?

## காணாமல் போன உறவுகளின் பேரணியில் கலந்துகொள்ளாத அரசியல்வாதிகள் பற்றி?

**நேதாஜி — வதிரி**

காணாமல்போன உறவுகளின் பேரணியில் கலந்து கொள்ளாத அரசியல்வாதிகள் பற்றி?

சத்தியமாக அவர்களைப் பற்றி நான் பேச விரும்பவில்லை. எமக்காக, எம் மக்களுக்காக ஒரு போராட்டத்தில் கலந்து கொள்ள நேரம் இல்லாதவர்களை இன்றும் எம் மக்கள் தலைவர்களாக எண்ணிக் கொண்டிருக்கின்றோம் என்றால் தமிழ் மக்களைப் போல முட்டாள்கள் வேறு யாருமாக இருக்க முடியாது.

எதையும் பெற்றுத் தராத இவர்கள் அந்தரிக்கும் உறவுகளின் மன ஆறுதலுக்காகவேனும் வர நினைக்கவில்லை எனின் இவர்கள் யாரைத் திருப்திப்படுத்த நினைக்கின்றார்கள் என்பதைப் புரிந்து கொண்டால் சரி.

**அனிதா — மானிப்பாய்**

இந்தியா-பாகிஸ்தான் முறுகுகின்றதே?

இந்தியா- பாகிஸ்தான் மட்டுமல்ல இப்பொழுது உலகம் இருக்கும் நிலையில் இனி எந்த இரு நாடுகள் போர் புரிந்தாலும் அது உலகப் போருக்கு வழிவகுக்கும் என்பதே உண்மை. போர் என்று வந்துவிட்டால் போர் வீரர்கள், தளபாடங்கள், ஆயுதங்கள் என்பதற்கப்பால் அந்தப் போர் அணுகுண்டு போராகத் தான் இருக்கும். இரண்டாம் உலகப் போரில் கிரோசிமா, நாகசாகியில் போட்ட அணுகுண்டின் வடுக்கள் இன்னும் மறையவில்லை எனின் இப்போதைய நிலைக்கேற்ப நாம் சிந்தித்து பார்க்க வேண்டும்.

**திகழன் — யாக்கரு**

விடுதலைப் புலிகளின் போராட்டத்தை பாகிஸ்தான் பிரதமர் ஏற்றுக் கொண்டுள்ளாரா?

அடக்குமுறைகள் அதிகரித்ததாலேயே விடுதலைப் புலிகள் தற்கொலைத் தாக்குதலுக்கு முனைந்தார்கள் என்று ஒரு நாட்டின் பிரதமர் கூறியிருக்கின்றார் எனின் அது சாதாரண விடயம் அல்ல. விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என்று உலக நாடுகள் முத்திரை குத்தி வைத்திருக்கும் இந்த வேளையில் பாகிஸ்தான் பிரதமரின் பேச்சு உலக நாடுகளை சிந்திக்க வைக்கும் என்பது உண்மை.

**சிந்து — சுழிபுரம்**

இன்றைய மாணவர்கள் பெற்றோரின் பெயரை எடுப்பார்களா? கெடுப்பார்களா?

ஒரு மாணவன் தனது பெற்றோரின் பெயரை ஒரு சீட்டில் எழுதி அதை பிரிட்ஜில் வைத்திருந்தான். அதைக் கண்ட ஒருவர் ஏன் எனக் கேட்க அவன் சொன்னான் அப்பாவும் அம்மாவும் கூறினார்கள் எங்களது பெயரை எந்தக் காலத்திலும் கெட்டுப் போகாமல் பார்த்துக்கொள் என்று.

**இளங்கோ — மானிப்பாய்**

இனவாதம் தலைதூக்கிவிட்டதே?

என்ன செய்ய, நூற்றாண்டுகளுக்கு முன் ஆபிரிக்கர்களை அடிமைச் சந்தையில் விற்ற வெள்ளையர்கள்கூட அந்த இனத்தவனை தங்கள் தலைவன் ஆக்கி அழகு பார்க்கின்றார்கள். ஆனால் எமது நிலைமை அப்படியா. இன்னும் இன்னும் எம்மவர்களை வைத்தே எம்மை அடிமைப்படுத்துகின்றார்கள் என்று எண்ணும் போது நெஞ்சு அடைத்துக் கொள்கின்றது.

**சித்திரா — வட்டுக்கோட்டை**

தன்மானம் உள்ளவர்களுக்கும் அது இல்லாதவர்களுக்கும் உள்ள வித்தியாசம்?

தனது இனம் நிம்மதியாக வாழ்வதற்கு தன்னுயிரை துச்சமென எண்ணி தன்னுயிரை இன்னுயிர் ஆக்கியவன் தன்மானம் உள்ளவன். தன் இனத்தின் புள்ளடிகளில் பாராளுமன்றம் சென்று தமிழர் தலைகளை அடகு வைத்து தங்கள் பொக்கற்றுக்களை நிறைப்பவர்கள், நிறைத்துக் கொண்டிருப்பவர்கள் தன்மானம் இல்லாதவர்கள்.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள் 021 567 1532 என்ற இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

**சங்கரசிவன் — வதிரி**

இம்ரான் கானின் வேகப்பந்து இந்தியாவைத் தாக்குமா?

விளையாட்டு ஒரு மனிதனின் ஆளுமைப் பண்பில் எவ்வளவு தாக்கத்தைச் செலுத்தும் என்பதற்கு இம்ரான் கான் ஒரு நல்ல உதாரணம். விட்டுக் கொடுப்பு, புரிந்துணர்வு, குழுவாக முடிவெடுத்தல், குழுவாகச் செயற்படல் போன்ற நல்ல பண்புகளை, விளையாட்டினூடே பெற்ற அனுபவத்தை தனது அரசியல் வாழ்க்கைக்கு பயன்படுத்துகின்றார். இவரின் இடத்தில் பாகிஸ்தான் பிரதமராக வேறு யாராவது இருந்திருந்தாலும் இந்தியாவுடன் போர் தொடுக்கப்பட்டிருக்கும். இந்திய விமானியை விடுதலை செய்துவிட்டு இந்தியா-பாகிஸ்தான் இடையே போர் ஏற்பட்டால் யாருக்கும் வெற்றி ஏற்பட்டு விடாது என்று கூறுவது ஒரு சாதாரண விடயம் இல்லை.

**கௌதம் — அல்வாய்**

இலங்கைக்கு ஒருவிரல் புரட்சி தேவை போலும்?

அது உணர்ச்சி இருப்பவர்களுக்குத் தான் பொருந்தும். நாங்கள் தான் சுரணை கெட்ட தமிழர் ஆச்சே. விளக்குமாற்றை நிப்பாட்டினாலும் அந்த நாசத்திற்குத் தான் புள்ளடி போடுவம் எண்டு இருந்தால் ஒருவிரல் புரட்சி இல்லை ஒன்பது விரல் புரட்சி வந்தாலும் முடியாது.

**சுதன் — கரவெட்டி**

சர்வதேசத்தை நம்பியிருக்கும் தமிழருக்கு பலன் கிடைக்குமா?

மேற்காலை வெளிக்குமென்று தலையை சொறிந்து கொண்டு இருங்கோடா.. இது நாடக நெறியாளன் குழந்தை சண்முகலிங்கத்தின் நாடகம் ஒன்றின் வசனம். இப்பொழுது இது தமிழருக்கு நன்றாகப் பொருந்துகின்றது.

**தர்சன்- தொல்புரம் — சிறிராம்- பருத்தித்துறை**

முழு அடைப்புப் போராட்டத்தினால் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்குமா?

விடிவு கிடைக்கும் என்று நாம் இழந்த இழப்புகள் கொஞ்ச நஞ்சமல்ல இறுதியில் துரோகமே வென்றது.

இது நான் எழுதிய கவிதையின் ஒரு பகுதி. அடைப்பால் எதையும் அடைந்து விட முடியாது தான். ஆனால் எம் ஒற்றுமை அதனூடே நாம் எதைச் சொல்கிறோம் என்பதை ஆணித்தரமாக சர்வதேசத்திடம் சொல்லி விட்டோம்.

**சுதன் — குப்பிளான்**

மக்கள் கண்ணீர்வடிக்க கூட்டமைப்பு அடாவடி செய்கின்றதே?

உஸ்... சத்தம் போடாதயடா சுதன்..
பிறகு, போடா அங்க போய் படம் எடுடா. இங்கை வந்து எதுக்குடா படம் எடுக்கின்றாய் என்று நாலு கறுப்புச் சட்டைப் பெடியன்கள் வந்து நிற்பான்கள். எனக்கும் வயது போச்சுது குஸ்தி எல்லாம் இப்ப வராது. கவனம்.... கதை கவனம்... அளவானவர்கள் போடுங்கோ. தொப்பியைச் சொன்னன்ரா தம்பி சுதன்.

**ஜீபா — கரவெட்டி**

பொறுப்பில்லாமல் நடக்கும் இலங்கை எவ்வாறு பொறுப்புக் கூறவைப்பது?

ஒரு வீட்டில் இரண்டு பிள்ளைகள் இருக்கின்றார்கள். அந்த இருவரின் பெற்றோர்களும் ஒன்று. வளர்ப்பு முறை ஒன்று. அவர்கள் உண்ணும் உணவு ஒன்று. ஆனால் அந்த இருவரும் ஒரே மாதிரி இருப்பதில்லையே பொறுப்புஎன்பதுபிறப்பில் இருந்து வருவது. அது போல் தான் இதுவும்.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 / 076 636 3378 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் திருநாட்டில் எமக்கென்ன மிச்சமுண்டு

இந்து சமுத்திரத்தின் முத்துக்குச் சுதந்திரம் கிடைத்ததென
பயன் பெறுபவர்கள் பட்டாசு கொளுத்துகிறார்கள்
பாதி சுகம் பெறுவோர் குடை பிடித்துச் செல்கின்றார்கள்
பின்வந்த குடிகளுக்குக் கிடைத்த சுதந்திரம்
எள்ளளவேனும் எமக்குக் கிடைக்கவில்லை
கறையான் புத்தெடுக்கப் பாம்பு குடிகொண்ட
கதையாகிவிட்டதே தமிழர் நிலைமையும்

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு- முன்
தோன்றியவன் தமிழன் என்றால்
அவன் வாழ்ந்த இடம் எங்கே?
அவன் நடந்த நிலம் எங்கே?
சத்தியாக்கிரகமும் சாலையில் வழி மறிப்பும்
செய்த எம் முன்னோர்கள்

துணிந்து போராடி எம் உரிமைகளைப் பெற்றிருந்தால்
நாங்களும் எம்நாட்டில் நிம்மதியாய் வாழ்ந்திருப்போம்
காலமும் கடந்து போச்சு வீரமும் அழிஞ்சு போச்சு
எங்கள் தலை எழுத்து எல்லாமே மாறிப்போச்சு
சொந்தம் என்று நாம் உரிமை கொண்டாட
எங்கள் திருநாட்டில் எமக்கென்ன மிச்சமுண்டு?
அக்கிரமக்காரர்கள் ஆடிய ஆட்டத்தில்
எத்தனையைத் தான் நாம் இழந்து நிற்கின்றோம்

மானத்தைப் பறித்தார்கள் மலரும் வாழ்வுதனைக் கெடுத்தார்கள்
உடைமைகளை அழித்தார்கள் எம் உயிரையும் எடுத்தார்கள்
இத்தனை செய்தும் அவர்கள் ஆசை வெறி அடங்காமல்
எங்கள் காணி நிலத்தையும் அபகரித்துக் கொண்டார்கள்

பாட்டன் பாட்டி பரம்பரை நிலத்தை
மூட்டைப் பூச்சிகள் தம்வசமாக்கிக் கொள்வதா?
பூட்டன் பூட்டி வாழ்ந்திருந்த மாளிகையில்
கோடரிக்காம்புகளைக் குடியிருக்க விடுவதா?

எங்கள் சொத்து எம்மை விட்டுப் போனதும்
அடிமைகளாக அல்லற்படுவதும்
அகதிகளாக ஓடித்திரிவதும்
எங்கள் செல்வங்கள் மடிந்து போனதும்
எல்லாமே! மேடைப்பேச்சோடு வீரம் பேசிய
எங்கள் முன்னோர்களால் தான்

**செல்வி. தேவி அருணாசலம், திருகோணமலை.**

## போதுமடா

வேரறுந்த உறவுகளின்
பிரிவால் விம்மலும்
விழிநீருமாய் வேதனையில்
அழிந்துபோவது போதாதென்று
தாய் பிள்ளை உறவைக்கூட
அறுத்துப்போடும் அநியாயம்
வேறெங்கு நடக்கும்

**நல்லூர் தேன்நிலா**






## மழைநாள்

அழகு மாலைப்பொழுதுதனில்
புற்கள் எல்லாம் மெய்சிலிர்க்க
காற்றுத்தேவதை மெதுவாய்
கண் அசைக்க
எறும்புக்கூட்டங்கள் அழகாய்
தம் இருப்பிடம் வந்து சேர
கருமுகில் புடைசூழ்ந்து
நீலவானை எதிர்த்து
கருவானம் ஆகி
இடிமுழக்கத்துடன்
கொட்டி முழக்கின்றது
அடைமழை

**முல்லைக்கவிஞன் சாரு**



## கண்ணாமூச்சி

இன்னும்
எத்தனை காலம் அப்பா
இந்த விளையாட்டு
என் ஜீவன்
மொத்தமாய் போகுமுன்
ஒருதரம் வந்து
உன் முகங்காட்டு

உனை எங்கெல்லாம்
தேடினேன்
தெரியுமோ அப்பா?
வன்னி மண்ணிலே
பிறந்தது
நான் செய்த தப்பா...?

பத்து வருசங்கள் போனது
வெறும் கனவாக இன்று
புகைப்படம் ஒன்றுதான்
உன் நினைவாக...

முகாமிலும் தேடினேன் முள்ளு
வேலிக்குள் தேடினேன்
உந்தன் முத்தங்கள்
வேண்டியே தினம்
செத்து நான் வாடினேன்

கண்ணாமூச்சி வேண்டாம் அப்பா
கண்ணிரண்டும் நோகுதப்பா
சொன்னால் துயர்
தீராதப்பா இனி
என்று உனை காண்பேன் அப்பா

இன்னும்
எத்தனை காலம் அப்பா
இந்த விளையாட்டு
என் ஜீவன்
மொத்தமாய் போகுமுன்
ஒருதரம் வந்து
உன் முகங்காட்டு

**கரவையூர் கானல்.**

## அழுகையை நிறுத்திடாதே தாயே

ஓ...
அழுகிறாயோ என்தாயே!
அழு அழு அழுதுகொண்டே இரு
உன் அழுகை ஐ.நாவல்ல
இந்த அண்டத்தையே
இரண்டாய் உடைக்கும்
அதுவரை உன் அழுகையை
நிறுத்திவிடாதே தாயே!

உண்ட மிச்சத்தை
தின்ற நரிகளும்
உண்ட பாதியில்
தட்டிப் பறித்த ஓநாய்களும்
எலும்புகளைக் கடித்துக் கடித்து
ருசி கண்ட நாய்களும்
கண்ட மிச்சமென்ன?
காட்டிக்கொடுப்பு மட்டுமே!

தாயே!
உன் அழுகை குறைகிறது
அழு அழு
ஓலமிட்டு ஒப்பாரி வைத்து அழு

காணாமல்போன உன் பிள்ளை
கிடைப்பான் என்ற நம்பிக்கை
எள்ளளவும் குறையாமல்
போராடுகிறாயே- இப்போது
ஏன் புலம்புகிறாய்

நீ புள்ளடியிட்டது
எட்டப்பருக்குத்தான்
எட்டி உதை அவர்களை
தட்டிக்கேள்
தா என் பிள்ளையை என

தேர்தலொன்று வரும்- அப்போ
பட்டிதொட்டியெங்கும்
பளபளக்கும் வேட்டிகட்டி
புலிச்சாயம் பூசிவரும்
நரிகளுக்கு புலப்படுத்து
புள்ளடிகளால் புலப்படுத்து

அடிக்கும் அடி
வலிக்க வேண்டும்
வாழ்நாள் முழுவதும் என்பதை
மறந்துவிடாதே தாயே
அழு அழு அகோரம் கொண்டு அழு
உன் பிள்ளைக்கு நீதி கிடைக்கும்
கிடைக்கும் வரை அழுது கொண்டே இரு

**மாவை. நா.கஜேந்திரன்**

# மௌனத்தின் தேடல்- 437



## விதிதான் எமக்கு கதியா?

தினம் தினம் ஏங்கித் தவிக்கும்
உள்ளங்கள் மனம் வருந்தி
மானம் காத்து
உயிர் பிடித்திருக்கின்றோம்
உம் வரவை எதிர்பார்த்து
பச்சிளம் குழந்தையின் பசிக்குப்
பாலூட்ட பால்
வற்றிப் போய்ச்சுதா
எங்கள் உதிரமெலாம்
கண்ணீராக் கரைந்தால்
புட்டிப் பாலோடு முட்டி
மோதுகின்றான் உன் பாலன்
எட்டி நின்று வேடிக்கை
பார்க்கின்றது- ஐ.நா.
மனித உரிமைகளும்
மௌனித்துப் போயுள்ளது
நீதி கூறுவார் யாருமில்லையா?
விதிதான் எமக்கு கதியா?

**செ.கதிர்**
**முள்ளியவளை**

## ஒண்ணும் இல்லை

புட்டிக்குள்ளே
பாலும் இல்லை
பால் கொடுக்க
வழியும் இல்லை
எட்டிவைக்க
இடமும் இல்லை
இரும்புக் கரமும்
இளகவில்லை
உண்ண ஏதும்
கொடுக்கவில்லை
ஊறத்தானும்
விடுவதில்லை
கண்புணர்தல்
களைக்கவில்லை
காட்சிப்பொருள்
தானுமில்லை
ஐ.நாவுக்கு
வெளிக்காட்டவில்லை
அகதிமுகாம்
பெருந்தெருவிலில்லை
கையூட்டமோ
வைரம் குறையவில்லை
கண்ணின் பார்வை
பகலில் இல்லை

**வைகதன், கொக்குவில்**

## துணைக்கரம்

வாழ்க்கை எமக்குப்
பாரமானது
இளமையின்பம்
என்றும் தூரமானது
ஆதரிப்பார் யாருமின்றி
உறவிழந்து உரிமையிழந்து
போர் தந்த கொடுமையால்
நாமிங்கு நலமிழந்து
ஊருராய் அலைந்து திரிகிறோம்
ஆறுதல் கூற ஆளின்றி
தேம்பிக் கிடக்கும் எம்
மனவேதனையை
தேற்றுவார் யார்?
துணைக்கரம் நீட்டி
துயர் துடைப்பார் யார்?

*சி.திவ்வியா*
*யா/ ப.மெ.ம.வி*

## புட்டிப்பிள்ளை

வரிசைக்கு நின்று நாம்
வயதைத் தொலைத்தவர்கள்
வறுமைக்கும் பீதிக்கும்
வாழ்க்கைப்பட்டவர்கள்
தாய்ப்பால் வரமிழந்த
புட்டிப்பிள்ளைக்கு
கட்டி அணைத்து
கசிந்துருகி மடியிட்டு
அதையேனும் கொடுப்பதற்கு
இதயம் அறுந்தவர்கள்
இருக்கையிலே எப்படி?

**செல்வா செல்வமணன்**

# மௌனத்தின் தேடல் -438



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## இறைஞ்சுகின்றோம்

காணாமல் போன
எம் உறவுகளைக் காணாது
எம் உறவுகள் துடிப்பதை
சர்வாதிகார கூட்டமே
அறிவாயா?
நீ அறிந்திருந்தால்
உனக்கு மனச்சாட்சி
இருந்திருந்தால்
தாயைப் பிரிந்த மகனும்
கணவனைப் பிரிந்த
மனைவியும்
தந்தையைப் பிரிந்த
பிள்ளைகளும்
எம் தாயகத்திலே துடிப்பதை
நீ புரிந்துகொண்டு
அவர்களை எங்களிடம்
ஒப்படைப்பாயா

**க.மலர்**
**இடைக்காடு**

## திருப்தி

வக்கிரமான பூமியிலே
உக்கிரமான போரதனால்
பரிதவித்த நெஞ்சமே
பிள்ளையின் பசி தீர்த்த
திருப்தி கண்டு
தன் பசியை மறந்து
நிற்கும் தாய்மையே
ஆயிரம் இறைவன்
முன் வந்தாலும்
போற்றித் தொழவேண்டும்
உன்னை அம்மா

**த.ஜானிகா, யோகபுரம்**

## அகதிகள் வரிசை

நிவாரணம் பெற வேண்டி நிற்கும்
வரிசையா? இல்லை உறவுகளைத்
தேடிச்செல்லும் வரிசையா? கொடும்
வெயில் என்ன கொட்டுமழையென்ன
எம்மினப் பெண்கள்
சளைத்துவிடமாட்டார்கள்
அகதி வாழ்வு நிரந்தரமாகாது
துணிவுடன் முன் செல்லுங்கள்

**அபி குலமாலிகா, சங்கானை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்கள் இருட்டிக் கொண்டு வந்தது. வயிறு நெருப்பாய் எரிகிறது. அண்மைய நாட்களில் அனுபவித்த பசிக் கொடுமை தான். இனியும் தாங்கமுடியாதென வயிறு கெஞ்சுகிறது. என்னதான் திடமான மனதும் உடலமைப்பும் கொண்டிருந்தாலும் பசி எல்லோருக்கும் கொடுமைதான். ஆற்றைக் கடந்து வந்து அவர்களிடம் சரணடைந்ததும் அவர்கள் தந்த குளிர் பானமும் பணிஸ்ம் தான். நேற்றிலிருந்து ஒரு கவனிப்பும் இல்லை. முள்ளுக் கம்பி வேலிகளுக்குள் மந்தைகளாய் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறோம். வீட்டில் வாழ்ந்த காலங்களில் நாங்களும் மந்தை வளர்த்தனாங்கள்தான். அவற்றுக்கு எப்போதும் உணவும் தண்ணீரும் தாராளமாகவே வழங்கி வந்தோம். தகரக் கொட்டில் வெக்கையுடன் நெருக்குண்டிருக்கும் சனங்களின் வெக்கையும் தாங்க முடியாமல் இந்த மரத்தடியில் வந்து நிற்கின்றேன். மரங்கள் எப்போதும் மனிதருக்கும் ஆறுதல்தான். தலை சுற்றிக்கொண்டு வருகின்றது. இனியும் நிற்க முடியாது. விழுந்து விடுவேனோ என அஞ்சி மரத்தைப்பிடித்துக் கொண்டு மெல்ல மெல்ல அதன் வேரில் இருந்து விட்டேன். பசி மயக்கம், நாவரண்டு ஒரு மிடறு தண்ணீருக்காக ஏங்குகின்றது.

சொந்த பந்தங்களைப் பிரிந்து அல்லது சாவுக்குக் காவு கொடுத்துவிட்டு புதைக்கவும் எரிக்கவுமில்லாமல் அழுதபடி ஓடிவந்தவர்களையும் கண்டுள்ளேன். எனது மனைவி, பிள்ளைகளும்கூட இவ்வாறுதான் உருத்தெரியாமல் சிதைந்து போனார்கள். கந்தகக் காற்றால் மூச்சுத்திணறி இறந்தவர்கள் பலர். கைகால் இழந்தவர்கள் அநேகர். யுத்தம் கொடியது தான். ஏன் இந்த யுத்தம் ஏற்பட்டது? வலிய நாடுகள் தங்கள் ஆயுதங்களை விற்பனை செய்யவும் பரீட்சித்துப் பார்ப்பதற்குமாய் சகோதரர்கள் போல அன்பாயும் ஒற்றுமையாகவும் வாழ்ந்த மக்களிடையே இன வேற்றுமையை வளர்த்துவிட, அரச தலைவர்கள் தங்கள் தங்கள் தலைமைத்துவத்தைத் தக்க வைப்பதற்காக இனக் குரோதங்களையும் வளர்த்துவிட்டதாலும் ஏற்பட்டது.

நாட்டின் பொருளாதாரம் அழிந்தாலும் பரவாயில்லை. எமது நாட்டை அந்நியர்கள் கூறு போட்டு ஆக்கிரமித்து வைத்திருந்தாலும் பரவாயில்லை எனது தலைமைப் பதவியை விட்டு விட விரும்பேன் என்ற மமதையும் எனது சிந்தனைகளும் கோட்பாடுகளும் தான் சிறந்தவை என்கின்ற அகந்தையும் தான் மக்களை மந்தைகளாக்கிவிட்டது. இவ்வளவு அழிவுகளுக்குப் பின்னரும் மக்கள் இன,மதவேறுபாடின்றி ஐக்கிய மாய் வாழ்கின்றனர்தானே. அப்போ இந்த யுத்தம் ஏன் ஏற்பட்டது?

நாவரட்சி தாங்க முடியவில்லை. மூச்சுத்திணறல் வேறு வருத்துகிறது. நான் இறந்து கொண்டிருக்கின்றேனா? கண்கள் திறக்க முடியவில்லை. தண்ணீர், தண்ணீர் என அரற்றுகின்றேன். யாரும் உதவ முன்வரவில்லை. அவனவன்தனது வயிற்றுக்கொடுமைக்காக ஓடிக் கொண்டிருக்கிறான். தூரத்தில் லொறி ஒன்றில் உணவு கொண்டு வந்து கொடுக்கிறார்கள் போல. சனங்கள் முண்டியடிக்கும் சத்தம் கேட்கிறது. என்னால் எழுந்து சென்று வரிசையில் நின்று நெருக்குண்டு உணவுப்பொதி வாங்க முடியாதென எண்ணிக் கொண்டிருந்த வேளை ஐயா ஏதாவது சாப்பிட்டீர்களா? என ஒரு இளைஞன் கிட்டே வந்தான். அன்பும் ஆதரவும் அவனது குரலில் தெரிந்தது.

இல் லை த்தம்பி நெடு நேரமாய் தண்ணீர் விடாயில் வருந்திக் கொண்டிருக்கின்றேன். தண்ணீர் தரமுடியுமென்றால் அதே பெரும் புண்ணியம்.

வல்லமை உள்ளவன் போல் தெரிகின்றது. சற்று நேரத்தில் உணவுப் பொதியுடன் தண்ணீர்போத்தலும் கொண்டு வந்து தந்தான். பசிக்கொடுமையால் நாய் விழுங்குவதுபோல கவளம் கவளமாய் விழுங்க விக்கல் எடுத்தது. தண்ணீரைக் குடித்து விட்டு மிகுதி உணவையும் உண்ணும்வரை காத்திருந்தான். ஐயா என்னைத் தெரிகிறதா?

உடனே நினைவுக்கு வருகுதில்லை. கண்பார்வையுடன் ஞாபக சக்தியும் குறைந்து கொண்டு போகின்றது. நன்றாக நினைவுக்கு வருகுதில்லைத்தம்பி. நீங்கள் யார்?, எந்த ஊர்?

நானும் உங்கள் ஊர்தான் ஐயா. நாவற்குழி கந்தசாமியின் மகன்.




உங்கடை மகன் ராசனோடை படித்தனான். உங்கட புது வீடு குடி புகுதலுக் கும் வந்திருந்தேன்.

ஐயோ தம்பி சுகந்தனா நீ? எவ்வளவு காலமாய்ப் போய்விட்டது. ஆம் ஐயா, அன்று எனக்கேற்பட்ட அவமரியாதையை நீக்க உங்கள் உறவுகளுடன் பகைத்துக் கொண்டீர்களே! ராஜன் இப்போ எங்கே உள் ளார்? நீங்கள் ஏன் இங்கு தனியே...?

# மனிதம் வெல்லும்

ராஜன் எங்கே என்றுதான் நானும் தேடுகின்றேன். பெடியங்களுக்கு உதவி செய்ததாகக்கூறி பிடித்துக்கொண்டு போனாங்கள். விசாரித்துவிட்டு விடுகிறோம் என்றார்கள். இன்னமும் விசாரணை முடியவில்லை போலும். இப்ப பத்து வருடங்களாகின்றன. ஒரு தகவலும் இல்லை.

ஆசிரியராகவல்லோ வேலை செய்வதாக அறிந்து கொண்டேன்.

ஆம் தம்பி, நாவற்குழி மகா வித்தியாலயத்தில் படிப்பித்தவன். நல்லாசிரியர் என்று மாணவர்களாலும் பெற்றோர்களாலும் பாராட்டப்பட்டுமிருந்தவன்தான். அவனுக்கே இந்த நிலையென்றால் பாரேன் தம்பி.

அப்ப, அம்மா, தங்கைச்சி, தம்பியெல்லாம்...?

என்ரை கவலைகளைக் கிளறாதை. நாங்கள் புதுசாக் கட்டிய வீட்டில் குண்டு போட்டு அனைவரையும் காவு கொண்டுட்டாங்கள். வெளி அலுவலாகப் போயிருந்தபடியா நான் மட்டும் தப்பிவிட்டன். என்னையும் கொண்டிருக்கலாம் தம்பி. தினம் தினம் இவ்வாறு சாவதைவிட அது மேல் என அழுதார்.

சற்றுநேரத்தின் பின் தம்பி எனது கவலைகளைக்கூறி உனது மனதில் சுமையை ஏற்றி விட்டுட்டன். நீங்கள் எவ்வாறு தம்பி? கந்தசாமி, அம்மா பிள்ளைகள் எல்லோரும் சுகமா தம்பி? அவர்க ளும் இங்குதான் உள்ளார்களா? அவர்களுக்கு உணவு, தண்ணீர் வாங்கிக் கொடுத்து விட்டீரோ?

ஐயா, நானும் இப்ப தனியன்தான். எல்லோரையும் எல்லாவற்றையும் இழந்து விட்டம். இனி இழப்பதற்கு ஒன்றும் இல்லை. அன்று உங்கள் புதுவீட்டு குடி புகுதல் நிகழ்வில் நடந்த அவ மரியாதையால அப்பா மிகவும் மனமுடைந்த போனார். இனி ஊரில் வசிப்பதில்லை என

**எங்களுக்கு அடிமை வேலை செய்பவன் எங்கள் சபையில சமனாக இருந்து... எங்கத்தை வழக்கமிது, என்ன துணிச்சல் இது ?**

எண்ணி அடுத்தடுத்த கிழமைகளில் நாங்கள் அனைவரும் புதுக்குடியிருப்புக்கு வந்து மாமாவின் உதவியுடன் காணி வாங்கி, வீடு கட்டிச் சந்தோசமாக வாழ்ந்து வந்தம். இனிச் சலவைத் தொழில் செய்வதில்லை என்று பிடிவாத மாக அப்பா பயிர் வளர்த்து வந்தார். வளமான மண் அவருக்கு வாய்ப்பாக அமைந்தது. வசதி வாய்ப்புக்களுடன் வாழ்ந்து வந்தம்.

தங்கச்சியின் திருமண நாளன்று வீடு, பந்தல் எல்லாம் மின் விளக்குகளால் அலங்காரம் செய்து கொண்டோம். அதைக் குறிவைத்து விமானம் குண்டு போட்டு எல்லா வற்றையும் அழித்துவிட டார்கள்.

மணமக்கள் உட்பட பன்னிருவர் அந்த இடத்திலேயே சிதறிப்போக, மேலும் பதினாறு பேர் காயமுற்றனர். எனது காயங்கள் ஆறியதும் என்ன செய்வதென்று தெரியாதிருந்தவேளை யுத்தம் எமது பிரதேசத்துக்கும் வந்தது.

உயிர்களும் உடைமைகளும் அழிந்து எல்லாம் வெறுமையாகிவிட உயிருக்குப் பயந்து வாழ்ந்துகொண்டிருந்த வேளை இனியும் தாக்குப்பிடிக்க முடியாதெனக் கருதி, சரணடைய விரும்பும் மக்களைச் செல்ல அனுமதித்தனர். கூட்டத்தோடு கூட்டமாக நானும் இங்கு வந்துவிட்டேன்.

சுகந்தனும் ராசனும் நல்ல நண்பர்கள். ஒன்றாகப் படித்து வந்தார்கள். நாம் ஆசையாகக் கட்டிய புது வீட்டின் குடிபுகுதல் நிகழ்வுக்கு ராசன் சுகந்தனையும் அழைத்திருந்தான். எல்லாம் நல்லபடியாக நடந்தது. களங்கமில்லாப் பிள்ளைகள் இருவரும் மகிழ்வாகக் கொண்டாடினர். உணவு பரிமாறும் வேளை ராசன் சுகந்தனைத் தன் அருகில் இருத்தி உபசரித்தான். பந்தி சிறப்பாக நடந்து கொண்டிருந்த வேளை அங்குவந்த எனது மூத்த மருமகன் சுகந்தனின் கையைப் பிடித்து இழுத்துச் சென்று வெளியில் விட்டு விட்டுக் கண்டபடி ஏசினார். ராசன் செய்வதறியாது நின்றான். பாவமாக இருந்தது. சுகந்தன் உணர்ச்சி வசப்பட்டிருந்தான்.

"தம்பி சாப்பிட்டுக் கொண்டிருக்கிற பிள்ளையை ஏன் குழப்புகிறீர் என்றேன். எங்களுக்கு அடிமை வேலை செய்பவன் எங்கள் சபையில சமனாக இருந்து... எங்கத்தை வழக்கமிது? என்ன துணிச்சல் இது?என்று ஏசினார்.

தம்பி அவையள் ஒன்றாய்ப் படிக்கிறவியள். நண்பர்களாயுமிருக்கிறார்கள். பேசாமல் விட்டிடும். ராசன் சுகந்தனைக் கூட்டிச்சென்று சாப்பிட வை என்றேன்.

படிச்சிட்டால் எல்லாம் சரியோ? இண்டைக்குப் பந்தியில இருப்பாங்கள். நாளை பெண் கேட்டும் வருவாங்கள்.

சின்ன விடயம் தம்பி.பெரிசுபடுத்தாமல் விட்டுட்டு வேற வேலைகளைக் கவனியும் என்றேன்.

எது சின்னவிடயம்? ஓ அது சரிதான். வருடம், தீபாவளி எனப் பண்டிகை நாட்களில் இவன்ரை தகப்பன் கந்தசாமி இஞ்சை வாறதும் சேர்ந்து தண்ணியடிக்கிறதும், சாப்பிடுவதும் மாமி அருகிருந்து பரிமாறுவதும் நிறைவெறியில் திரும்பிப் போக முடியாமல் படுத்துச் செல்வதும் எல்லாம் நானும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறன்.

எனக்கிது சின்ன விடயமாகத் தெரியவில்லை. இன்று பந்தியில் இருப்பான். நாளை சம்பந்தியாகவும் முயல்வான். அவ் வேளையில் உங்கள் சின்ன மகளை இவனுக்குக் கட்டிக் கொடுப்பீர்களா? என்றார்.

ஆம், அப்படித்தான். அதிலொன்றும் தவறுமில்லை. நீங்கள் அமைதியாயிருந்து ஆகவேண்டிய விடயங்களைக் கவனியுங்கள் என்றேன்.

இவ்வளவு நடந்த பின்பும் என்னால் இங்கு இருக்க முடியாதென்று கூறிப் பிள்ளைகளையும் மனைவியை யும் கூட்டிக்கொண்டு போனவர்தான். போகும்வேளை கேற்றை அடித்துச் சாத்தி விட்டுப் போனவர். எனக்கு இவ்வளவு இடர்பாடுகள், துயரங்கள் வந்தபோதும் எட்டிப்பார்க்கவில்லை.

எனது மகளையும் பேரப்பிள்ளைகளையும் ஒரு தடவையாயினும் பார்க்க வேண்டும் போல இருக்கு. இப்பவும்கூட யாரோ ஒருவர்தான் சாப்பாடும் தண்ணீரும் தருகிறான் என எண்ணிக்கொண்டேன்.

என்ன ஐயா கடுமையாக யோசிக்கிறியள்? நாளைக்கு எனக்கொரு தனிக்கொட்டில் தருவதாகப் பதிந்துள்ளனர். நீங்கள் தனிய இருக்கவேண்டாம். என்னுடன் வந்து இருங்கள். ராசன் இருந்து உங்களைப் பராமரிக்கும் அளவுக்கில்லா விட்டாலும் நான் உங்களைப் பார்ப்பேன். பேரக் குழந்தைகளையும் தேடிக்கண்டு பிடித்து உங்களுக்குக் காட்டுவேன் எனக்கூறி கைகளை நீட்டினான். மிகச் சிரமப்பட்டு கைகளைத் தூக்கி அவனது கைகளை இறுகப் பற்றிக் கொண்டேன்.

**மயூரதன்**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தமும் ரத்தமும் வேண்டாம்... சமாதானக் கதவு திறக்கட்டும்!

உலகின் கொந்தளிப்பான எல்லைக் கோடுகளில் ஒன்று மீண்டும் ஒருமுறை பதற்றத்தில் பற்றி எரிகிறது. இந்தியா - பாகிஸ்தான் விவகாரத்தில் தேசப் பிரிவினை தொடங்கி கார்கில்வரை நான்கு யுத்தங்கள் நடத்தியும், ஒரு பிரச்சினைக்குக்கூடத் தீர்வுகாண முடியவில்லை. அதுவே நிரந்தர உண்மையும்கூட. யுத்தங்களால் ஒருபோதும் தீர்வுகள் கிடைக்காது. இப்போது மறுபடியும் நம்மைச் சூழ்ந்திருக்கின்றன போர் மேகங்கள். போரைத் தீர்மானிக்கும் இருவேறு சக்திகளாக மோடியும் இம்ரான் கானும் எதிரெதிர் துருவங்களில் நிற்கிறார்கள். இரு நாடுகளிலும் வாழும் 155 கோடி மக்களின் எதிர்காலம் இவர்கள் இருவரின் கைகளில் சிக்கியிருக்கிறது!

புல்வாமா தாக்குதலில் 40 சி.ஆர்.பி.எப் பலரும் திங்கட்கிழமை இரவு இங்கு வந்தனர். இதைத் தெரிந்துகொண்டுதான் செவ்வாய்க்கிழமை அதிகாலை தாக்குதல் நடத்தினோம்' என்பது இந்தியா தரப்பில் சொல்லப்படும் விளக்கம். ஆனால், வானிலிருந்து தாக்குதல் நடத்திய இந்திய விமானப் படைக்கு, கீழே இறந்தவர்கள் எத்தனை பேர் என்பது தெரிய வாய்ப்பில்லை. அந்த முகாம் அருகே போக உள்ளூர் மக்களை பாகிஸ்தான் இராணுவம் அனுமதிப்பதில்லை. எனவே, முகாம் மீது குண்டு விழுந்ததா, தாக்குதலில் தீவிரவாதிகள் இறந்தார்களா? என்பதெல்லாம் நீண்ட காலம் ரகசியமாகவே இருந்துவிடும்.

இன்னொரு நாட்டின்மீது இந்தியா நிகழ்த்திய தாக்குதலை இஸ்லாமியக் கூட்டுறவு அமைப்பு தவிர பாகிஸ்தானின் றார்கள். இந்தச் சூழலில் சீனா உட்பட உலகமே இந்தியாவின் பக்கம் நிற்கிறது. நிற்க...

இந்தியா தாக்குதல் நிகழ்த்திய மறுநாளே, பாகிஸ்தான் விமானங்கள் எல்லை தாண்டி நம் காஷ்மீருக்குள் நுழைந்து குண்டுவீசியுள்ளன. "எங்களாலும் முடியும் என்பதைக் காட்டவே தாக்குதலை நடத்தினோம். ஆளில்லாத இடங்களில்தான் குண்டு வீசினோம்" என்கிறது பாகிஸ்தான். ஊடுருவிய விமானங்களைத் துரத்திச்சென்ற போது இந்தியாவின் 'மிக்' விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டு, தமிழகத்தைச் சேர்ந்த விமானி அபிநந்தன் சிறை பிடிக்கப்பட்டுள்ளார். பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், இந்தியாவைச் சமாதானப் பேச்சுக்கு அழைத்திருக்கிறார். இந்தச் சூழலில் 'இந்தியா பாகிஸ்தான்மீது போர் தொடுக்க அதே தலிபன்களுடன் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறது. இப்படி நிறைய உதாரணங்களைச் சொல்லலாம். உலகெங்கும் இதே நிலைதான்!

ஓர் அதிரடித் தாக்குதலை நடத்தி சில நாட்களில் வீழ்த்திவிடும் அளவுக்கு பாகிஸ்தான் சிறிய தேசம் அல்ல. இரண்டு நாடுகளுக்கு இடையிலான எல்லையும் சிக்கலானது. பனிமலைகளும் அடர்காடுகளும் கொண்ட இந்த எல்லையில் நடக்கும் சண்டை பல மாதங்கள்கூட நீடிக்கலாம். அது மீளமுடியாத பொருளாதாரச் சுமையை ஏற்படுத்திவிடும். ஒரு வெள்ளம் வந்தாலே பால் பக்கெற்றும் மெழுகுவர்த்தியும்கூட கிடைக்கப்பெறாத ஆட்சியாளர்கள் இருக்கும் நாட்டில் வாழ்ந்து கொண்டு 'போர்... போர்' என்று சிலிர்ப்பது எல்லாம் சிறுபிள்ளைத்தனம்.

வீரர்கள் கொல்லப்பட்டதற்குப் பழிதீர்க்கும் தாக்குதலை 12 நாட்களில் தொடுத்தது இந்தியா. 'சர்ஜிகல் ஸ்ட்ரைக்-2' என்று வர்ணிக்கப்படும் இதை மேற்கொண்டது இந்திய விமானப் படை. பெப்ரவரி 26 ஆம் திகதி அதிகாலை இந்திய விமானப் படை ஒருங்கிணைந்து நிகழ்த்திய இந்தத் தாக்குதல் பல விதங்களில் முக்கியத்துவம் பெறுகிறது. எப்படி என்று ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

1971 ஆம் ஆண்டு இந்தியா - பாகிஸ்தான் போருக்குப் பிறகு இந்திய விமானப் படை விமானம், எல்லை தாண்டி பாகிஸ்தானுக்குள் சென்று நடத்தும் முதல் தாக்குதல் இது. கார்கில் போர் உச்சத்தில் இருந்த போதும் சரி, இந்திய வீரர்கள் சிலரைச் சிறைபிடித்துச் சித்திரவதை செய்து பாகிஸ்தான் படையினர் கொன்றபோதும் சரி, அப்போதைய பிரதமர் வாஜ்பாய் இந்திய விமானப் படையை எல்லை தாண்டிச் செல்ல அனுமதிக்கவில்லை.

உரிய தாக்குதலுக்குப் பிறகு 2016 ஆம் ஆண்டில், தனது முதல் சர்ஜிகல் ஸ்ட்ரைக்கை மேற்கொண்டது இந்திய ராணுவம். அப்போதுகூட பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள காஷ்மீர் பகுதிக்குள் சென்றுதான் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. ஆனால், இந்த முறை பாகிஸ்தான் நாட்டு எல்லைக்குள் 65 கி.மீ.வரை பறந்துசென்று தாக்குதல் நிகழ்த்தின இந்திய விமானங்கள்.

தாக்குதலுக்குப் பிறகு இந்தியா வெளியிட்ட அறிக்கை சாதுர்யம் மிகுந்தது. 'பாகிஸ்தானின் ராணுவ நிலைகளை நாங்கள் தாக்கவில்லை. பொதுமக்களுக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் நோக்கமும் இல்லை. தீவிரவாத முகாம்களை அழிப்பது மட்டுமே நோக்கம். இந்தியாமீது அடுத்த தாக்குதலை நடத்துவதற்காக ஜெய்ஷ்-இ-முகமது அமைப்பினர், கூடித் திட்டம் தீட்டுவதாக உளவுத் தகவல் கிடைத்தது. எனவே, அவர்களின் திட்டத்தை முறியடிக்கவே இந்தத் தாக்குதலை நடத்தினோம்' என்று அந்த அறிக்கை குறிப்பிட்டிருந்தது.

தாக்குதல் தொடர்பாக இந்தியாவும் பாகிஸ்தானும் முரண்பட்ட தகவல்களை வெளியிட்டாலும், சில உண்மைகளை யாருமே புறக்கணிக்க முடியாது. இந்தியா, பாகிஸ்தானுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தியது உண்மை. தாக்குதல் நிகழ்ந்த பாலகோட் நகரத்தை ஒட்டிய மலைப்பகுதியில் ஜெய்ஷ்-இ-முகமது அமைப்பின் பயிற்சி முகாம் இருப்பது உண்மை. அந்த அமைப்பின் தலைவரான மவுலானா மசூத் அசாரின் மைத்துனர் யூசுப் அசார், இந்த முகாமை நிர்வகிப்பது உண்மை. முன்னாள் பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் இங்கு தீவிரவாதிகளுக்குப் பயிற்சி தருவது உண்மை. 'புல்வாமா தாக்குதலுக்குப் பிறகு இந்திய எல்லையை ஒட்டிய முகாம்களில் இருந்த தீவிரவாதிகள் பலரையும் இந்த முகாமுக்கு பாகிஸ்தான் ராணுவம் அனுப்பியிருந்தது. புல்வாமா தாக்குதலின் வெற்றியைக் கொண்டாட இந்த அமைப்பின் முக்கிய தலைவர்கள்





நெருங்கிய நட்பு நாடான சீனாகூட கண்டிக்கவில்லை. 'தீவிரவாதிகள் மீதான தாக்குதல் வரவேற்கப்பட வேண்டியதே' என்றுதான் சீனாவும் சொல்லியிருக்கிறது. இது இந்தியாவுக்குச் சாதகம். தீவிரவாதம் குறித்தான உலகின் கருத்து இப்போது மாறியிருக்கிறது. கார்கில் போர் சமயத்தில் வாஜ்பாய் இதைச் செய்திருந்தாலோ, மும்பை தாக்குதல் நேரத்தில் மன்மோகன் சிங் இதைச் செய்திருந்தாலோ, இந்தியா உலகின் கண்டனத்துக்கு ஆளாகியிருக்கும். ஆனால், அநேகமாக உலகின் எல்லா நாடுகளும் தீவிரவாதத்தின் பாதிப்புக்கு ஆளாகியுள்ள இன்றைய சூழல் இந்தியாவுக்கு ஆதரவாக மாறியிருக்கிறது. பாகிஸ்தான் கிட்டத்தட்ட தீவிரவாதத்தின் ஊற்றுக்கண்ணாக இருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. தனக்கு நிதியுதவி செய்து, தன் அடாவடிகள் எல்லாவற்றுக்கும் உதவியாக இருக்கும் சீனாவுக்கே, பாகிஸ்தான் தீவிரவாதத்தை ஏற்றுமதி செய்கிறது. சீனாவின் உய்குர் பகுதியில் தாக்குதல் நடத்தும் தீவிரவாதிகள் பலரும் பாகிஸ்தானில்தான் பயிற்சி பெறுகி

வேண்டும்' என்ற தேசபக்திக் குரல்கள் எழுகின்றன. இந்தியா போர் தொடுக்க வேண்டுமா? அதனால் சாதகங்கள் என்ன, பாதகங்கள் என்ன என்று அலசினால், பாதகங்கள்தான் அதிகம். அவை என்னவென்று ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

ஒரு போரால் தீவிரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவந்துவிட முடியும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. சொல்லப்போனால், பாகிஸ்தானுடனான ஒவ்வொரு போருக்குப் பிறகும் நாம் எதிர்கொள்ளும் தீவிரவாதத் தாக்குதல்கள் அதிகரிக்கத்தான் செய்தன. 'போர் ஒரு பிரச்சினையைத் தீர்க்காது; மாறாக பல புதிய பிரச்சினைகளை உருவாக்கிவிடும்' என்பதுதான் உலக நாடுகள் கண்டறிந்த உண்மை. 'தீவிரவாதத்தை அழிப்போம்' என்று சொல்லிக்கொண்டு ஆப்கானிஸ்தான் நாட்டில் தலிபன்கள் மீது போர் தொடுத்தது அமெரிக்கா. 17 ஆண்டுகள் தாண்டிவிட்டன. மூன்று அமெரிக்க ஜனாதிபதிகள் மாறிவிட்டார்கள். உலகின் மிகச்சிறந்த ராணுவத்தைக்கொண்ட அமெரிக்கா இப்போது களைத்துப்போய்,

அணு ஆயுதங்களை வைத்திருக்கும் இரண்டு தேசங்களுக்கு இடையே நேரடிப் போர் இதுவரை ஏற்பட்டதில்லை. அப்படி ஒரு போர் நடந்தால், அது ஆயுத வியாபாரிகளின் மோதலாகவே உருவெடுக்கும். அமெரிக்காவின் எஃப் 16 விமானங்கள், சீனாவின் புதிய தயாரிப்புகள், பிரான்ஸின் டஸோ நிறுவனத் தயாரிப்புகள், ரஷ்யாவின் சுகோய் விமானங்கள் ஆகியவற்றில் எது சிறந்தது என்ற விவாதம் நீண்ட காலமாக நிலவுகிறது. இதற்கான பரிசோதனைக் களமாக நம் மண்ணை மாற்றிவிடக் கூடாது. 'போர் தொடங்கினால், அதை நிறுத்துவது என் கட்டுப்பாட்டிலோ, மோடியின் கட்டுப்பாட்டிலோ இருக்காது' என்று இம்ரான் கான் சொன்ன வார்த்தைகள் மிகுந்த அர்த்தமுள்ளவை.

இப்போது பாகிஸ்தானில் நுழைந்து தாக்கியதன் மூலம், 'இனி எப்போது இந்தியாவில் தீவிரவாதத் தாக்குதல் நடந்தாலும், அந்தத் தீவிரவாதிகளை முறியடிக்க பாகிஸ்தானுக்குள் இந்தியா நுழைந்து தாக்கும்' என்ற உரிமையைச் சர்வதேச லைசென்ஸ் போல பெற்றிருக்கிறது இந்தியா. போரில் இறங்கினால், இந்த உரிமை நம்மிடமிருந்து பறிபோய்விடும்.

பின்லேடனுக்கு அடைக்கலம் கொடுத்த நாடு என்பதற்காக பாகிஸ்தான்மீது போர் தொடுக்கவில்லை அமெரிக்கா. அவ்வப்போது பாகிஸ்தானுக்குள் நுழைந்து தீவிரவாத முகாம்களை அழிக்கும் உரிமையை அது எப்போதும் பெற்றிருக்கிறது. இந்தியாவும் அப்படி இருப்பதே எதிர்காலத்துக்கு நல்லது.

உலகின் 57 இஸ்லாமிய நாடுகள் இணைந்து 'இஸ்லாமியக் கூட்டுறவு அமைப்பு' என்று ஒன்றை வைத்துள்ளன. பாகிஸ்தான் எதைச் செய்தாலும் இது கண்ணை மூடிக்கொண்டு ஆதரிக்கும். இந்த அமைப்பு, தன் வரலாற்றில் முதல்முறையாக இப்போதுதான் இந்தியாவைத் தன் கூட்டத்துக்கு அழைத்துள்ளது. இந்தக் கூட்டமைப்பில் ஆதரவு திரட்டி, பாகிஸ்தானைத் தனிமைப்படுத்த சரியான சந்தர்ப்பம் வாய்த்துள்ளது. போரில் இறங்கினால் இது சாத்தியப்படாது.

பாகிஸ்தானின் தீவிரவாத முகத்தைச் சர்வதேச அளவில் அம்பலப்படுத்தி, அந்த நாட்டைத் தனிமைப்படுத்துவதே போரை விட சிறந்த வழி. கூடவே, நம் உளவு அமைப்பையும், தீவிரவாதத்துக்கு எதிரான தற்காப்பு நடவடிக்கைகளையும் பலப்படுத்த வேண்டும். 'ஒற்றை மரணம் துயரமானது. ஆனால், பத்து இலட்சம் பேர் மரணம் என்பது வெறும் புள்ளிவிபரம்' என்று போர் பற்றி ரஷ்யாவில் ஸ்டாலின் சொன்ன புகழ்மிக்க வாசகம் நினைவுக்கு வருகிறது. பாலஸ்தீனம், ஈராக், சிரியா, சூடான் என்று தினம் தினம் செய்திகளில் 'புள்ளிவிபரங்களைக் கடந்து போய்க்கொண்டிருக்கிறோம். அந்தப் 'புள்ளிவிபரங்களாக நாமும் மாறிவிடக்கூடாது.

ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் மற்றும் இளைஞர், யுவதிகளுக்கான உயர் கல்வி, தொழிற்கல்வி தகவல்கள் அடங்கிய கையேடு-நூல் பற்றிய கண்ணோட்டம்



நூலின் பெயர் : மாணவர் மற்றும் இளைஞர் யுவதிகளுக்கான உயர் கல்வி.தொழிற்கல்வித் தகவல்கள் அடங்கிய கையேடு

வெளியீடு: கல்வி,பண்பாட்டு அலுவல்கள்,விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம்.

பக்கங்கள் : 105

அளவு : A5

முதல் வெளியீடு :28.02.2019

எதிர்காலம் பற்றிய சிந்தனைக்கான நல்லதோர் அட்டைப்படத்துடன் வெளிவந்துள்ள இந்நூல் வாழ்த்துச் செய்திகளுடன் தனது பயணத்தை ஆரம்பிக்கின்றது. வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனின் "கல்வி எங்களின் மூலதனம்.எமது பிள்ளைகள் விலை மதிக்க முடியாத அரும்பெரும் சொத்துக்கள்" என்ற கருத்தினை வெளிக்காட்டி நிற்க முன்னாள் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயின் வாழ்த்துச் செய்தியில் இந்த நூலானது கல்விசார் உத்தியோகஸ்தர்கள், ஆசிரியர்கள், வழிகாட்டலாளர்கள், பெற்றோர்கள் மற்றும் தொழில் வழிகாட்டலுக்கும் எதிர்காலத்திட்டமிடலுக்கும் முகாமைத்துவத்திற்கும் "பயன்மிக்கது என்ற அடிப்படையில் விரிந்து செல்கின்றது. தொடர்ந்து இந்நூல் வெளியீட்டை ஆக்கபூர்வமாகவும் பயனுள்ள விதத்திலும் அமைவதற்கு வழிசமைத்த கல்வி, பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணச் செயலாளர் சி.சத்தியசீலனின் வாழ்த்துச் செய்தி இக் கையேட்டின் முக்கியத்துவத்தினை மிகவும் துல்லியமாக எடுத்துரைத்து நிற்க, தொடர்ந்து வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரின் வாழ்த்துச் செய்தியும் இக் கையேட்டை அலங்கரித்து நிற்க கையேடு விரிகிறது...

முதலாவது கட்டுரையாக வடக்கு மாகாணக் கல்வித் திணைக்கள தொழில்நுட்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் து.லெனின் அறிவழகனின் 13 வருட உத்தரவாதக் கல்வித் திட்டம் தொழிற்றுறைப் பிரிவு **(Vocational Stream)** என்னும் எளிய உரை நடையிலான பயன்மிகு கட்டுரையும் தொடர்ந்து யாழ்ப்பாண தொழில் நுட்பவியல் கல்லூரி தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர் வே.சபேசனின் யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியின் உயர்கல்வி வாய்ப்புக்களும் தொழில் வாய்ப்புக்களும் என்னும் எதிர்கால தேவைக்கேற்ற நல்லதொரு கட்டுரை மிகவும் தெளிவாக மாணவர்கள்.ஆசிரியர்கள், பெற்றோர்களுக்கும் தொழில் வழிகாட்டுநருக்கும் உதவக் கூடிய வகையில் துறைசார் ரீதியாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இக் கையேட்டில் தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை (NAITA) தொடர்பான விளக்கமும் தேசிய தொழிற்றகைமை சான்றிதழ் வழங்குதல் (NVQ)-RPL தொடர்பான விளக்கமும், 2ஆம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம் தொடர்பான அறிமுகமும் அங்கு பயன் பெறக்கூடிய கற்கைநெறி தொடர்பான விளக்கங்களும் உள்ளன. தொடர்ந்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற அரச பல்கலைக்கழகங்களில் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கான அனுமதியைப் பெறுவதற்கான முன்னேற்பாடுகள் தொடர்பான தகவல்கள் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் தொடர்பான தகவல்களும், Ministry of Education, Cultural affairs, Sports & Youth affairs கீழ் செயற்படுத்தப்படும் STEPS Institute பற்றிய தகவல்களும் அவற்றின் கற்கை நெறி தொடர்பான விபரமும் என பரந்து விரிய தொடர்ந்து Trilingual Learning Centre Ministry of Education Northern Province பற்றிய தகவல்களும் University Colleges தொடர்பான தகவல்களும் **Ministry of Higher Education and Highways Sri Lanka Institute of Advanced Technological Education (SLIATE)** தொடர்பான விடயங்கள் அங்கு பெற்றுக் கொள்ளக் கூடிய கற்கை நெறிகள் தொடர்பான விடயங்கள் என பல பயன்தரு விடயங்களை உள்ளடக்கி இக் கையேடு வெளிவந்துள்ளது.

"விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி"

மழை பெய்யாது போனால் இந்த உலகைச் சுற்றிலும் கடல்நீர் இருந்தும் மக்கள் பசியால் துன்பப்படுவார்கள் என்னும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்குப் போல மாணவர்களுக்கு எத்தகைய கற்கைநெறிகள் காணப்படினும் அதனை அவர்கள் தெரிந்து கொள்ளாத பட்சத்தில் அது நாடப்பெறாப் பண்டமாகவே போய்விடும். அந்தக் குறையினைப் போக்குவதற்கு மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் தொழில் வழிகாட்டுநர்களுக்கும் தேவையாக மிக முக்கியமான விடயங்களை வெளியீடு செய்துள்ள கல்வி, பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணத்தின் பெருமுயற்சி எமது வடக்கு மாகாணத்திற்குப் பெரும் உந்து சக்தியாக அமைந்திருப்பதுடன் மிகவும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. எனவே இதற்காகப் பாடுபட்ட அனைவரும் பாராட்டப்பட வேண்டிய வர்கள். இதன் முழுவெற்றி இந்த நூலை அனைவரும் வாசிப்பதிலேயே தங்கியுள்ளது. குறிப்பாக தரம் 9.10.11 இல் கல்வி கற்கும் மாணவர்களும் அவர்களின் பெற்றோரும் க.பொ.த சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சை எழுதும், எழுதிய மாணவர்களும் கட்டாயம் வாசிக்க வேண்டும். மொத்தத்தில் மாணவர் மற்றும் இளைஞர், யுவதிகளுக்கான உயர்கல்வி ,தொழிற்கல்வித் தகவல்கள் அடங்கிய கையேடு சகலருக்கும் பயன் மிகு ஒரு சொத்தாகும்.

இந்நூல் கல்வி.பண்பாட்டு அலுவல்கள்,விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,வடக்கு மாகாணத்தின் இணையத்தளத்தில் பார்வையிடக் கூடியதாக உள்ளது.

http://www.edumin. np. gov.lk/informations/publications.html

அரியாலையூர்
குணரத்தி[illegible]

## இது நம்ம கதைகள்... 40

# அவசரம்

நேற்று முன்தினம் நெடுஞ்சாலையொன்றில் பயணித்துக் கொண்டிருந்தேன். எதிரே பாரிய பாரவூர்தியொன்று வந்து கொண்டிருந்தது. திடீரென தவறான பக்கத்தால் என்னை முந்திக் கொண்டு சிட்டெனப் பறந்தது ஸ்கூட்டி ஒன்று. ஒரு கணம் நிலைகுலைந்து பின் நிதானித்துப் பார்த்தேன். அதை நடுத்தர வயது அம்மணி ஒருவர் செலுத்திச் சென்றார். அவர் முன்னேயும் பின்னேயும் இரு சிறிய பிள்ளைகள் பள்ளிச்சீருடையில். அலுவலகம் செல்லும் வழியில் தன் பிள்ளைகளைப் பள்ளியில் இறக்கிச் செல்லும் தாயென அனுமானித்துக் கொண்டேன். பள்ளிக்குத் தாமதித்துவிட்டதால் தான் இந்த வேகமும், விதிமீறிய சாரதித்துவமும் எனப் புரிந்தது.ஆயினும் இந்த அவசர வேகத்தில் விபரீதமேதும் நிகழ்ந்திருந்தால் அவர் மட்டுமல்ல, அவர் குழந்தைகளும் ஆபத்திற்குள்ளாகியிருப்பார்கள். அவர்கள் வீட்டிலிருந்து புறப்பட்ட நேரத்தைவிட பத்து நிமிடங்கள் முந்திப் புறப்பட்டிருந்தால் தாமதம் பற்றிய பதற்றமும் தோன்றியிருக்காது, அவசரமும் இருந்திருக்காது, வேகமும் விளைந்திருக்காது.

கடந்த வாரம் பஸ் பயணமொன்று. முதல் 20 நிமிடங்கள் வரை நத்தையை விட மெதுவாக ஊர்ந்தது அந்த பஸ். பின்னர் குறித்த இடத்தை குறித்த நேரத்திற்குள் அடையாவிட்டால் நேரங்கணிப்பாளருக்கு தண்டம் செலுத்த வேண்டுமென்பது சாரதிக்கு ஞாபகம் வர அசுர வேகத்தில் பறந்தது. உயிரைக் கையில் பிடித்தவாறு விழி பிதுங்கித் தவித்தனர் பயணிகள். முன்னரே திட்டமிட்டு ஆரம்பம்முதலே சராசரி வேகத்தில் பயணித்திருந்தால் எல்லோருக்கும் பயணம் சௌகரியமாகவிருந்திருக்கும்.

இன்று உலகில், அதுவும் நம்ம யாழ்.குடாநாட்டில் எல்லாமே அவசரக் கோலமாகிவிட்டது. பணிக்காக அலுவலகம் செல்வது தவிர மிகுதி எல்லாவற்றிலும் நம்மவரின் அவசரத்தைக் காணமுடிகிறது.

கடைக்குப் போனால் தனக்கே முதலில் சாமான் தரவேண்டுமென்பதிலிருந்து, கொண்டாட்டப் பந்திகளில் முதலில் தனது தட்டிலேயே உணவை நிறைப்பது வரை எல்லாமே அவசரமாகிவிட்டது. எல்லாவற்றையும் தானே முதலில் பெறவேண்டும் - செய்யவேண்டும் என்ற சுயநலவாஞ்சையும் நம்மவரின் அவசரத்திற்கு ஒரு காரணமாகும்.



எதையும் நிதானமாகத் திட்டமிட்டு, போதிய கால அவகாசத்தில் செயற்படுத்தினோமேயானால் தேவையற்ற பதற்றமோ, நிதானமற்ற அவசரமோ நம்மை ஆட்கொள்ளாது. நம் கருமமும் வீணே சிதறிப் போகாது.

தேவையற்ற பதற்றமும், அவசரமும் நம் செயலுக்கு மட்டுமின்றி நம் உடலுக்கும் ஊறு பயப்பன. அவசரத்திலெடுக்கப்படும் தவறான முடிவுகள் கூட சற்று சாவகாசமாக நிதானிக்கப்பட்டிருப்பின் விபரீதங்கள் தடுக்கப்பட்டிருக்கலாம். பரபரப்பான செய்திகளை முதலில் தரவேண்டுமென்ற ஆர்வத்திலும் - போட்டியிலும் சில ஊடகங்கள்கூட தீர்க்கமாக ஆராயாமல் செய்திகளை வெளியிடும் போக்கும் அவசர கலாசாரத்தின் பிரதிபலிப்பே.

நம்ம இவ்வாரக் கதையின் நாயகனுக்கு எந்தத் திட்டமிடலுமிருப்பதில்லை. அதனால் அவரிடம் பதற்றத்திற்கோ பஞ்சமில்லை. ஏழாவது மாடியில் அமைந்திருந்த அவரது காரியாலயத்தில் பதற்றத்துடன் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தார். "குமார் உன் மகள் வாணி கார் விபத்தில் அகப்பட்டு இறந்துவிட்டாள்" என்று யாரோ கூறுவது கேட்டது. அதைக் கேட்டதும் அவர் பதற்றம் அதிகரித்தது. என்ன செய்வதென்றே தெரியவில்லை. "லிப்ட்" க்காக காத்திருக்க, முடியாது. விரைவாக படிகளால் இறங்குவோமென நினைத்தவராக வாயிலைக் கடந்தார். அவர் வெளியே கால் வைத்த பின்னர் தான் அவர் வாயிலென நினைத்து வெளியே கால் வைத்தது கதவல்ல,ஜன்னல் என்பது புரிந்தது. இப்போது மாடியிலிருந்து தலை கீழாக கீழ் நோக்கி விழுந்து கொண்டிருந்தார்.

ஆறாம் மாடியைக் கடந்த போது தனக்கு வாணி என்ற பெயரில் மகள் கிடையாது என்பது அவருக்கு ஞாபகம் வந்தது. ஐந்தாம் மாடியை அண்மித்த போது தனக்கு மகளே கிடையாது என்பது மண்டையில் உறைத்தது. நாலாம் மாடியை கடந்த போதுதான் தனக்கு இன்னும் திருமணமே ஆகவில்லை என்பது நினைவுக்கு வந்தது. மூன்றாம் மாடியைக் குப்புறக் கடந்தபோது தான் தன் பெயர் குமார் அல்ல என்பது அவருக்குப் புரிந்து. யாரோ ஒருவருக்குச் சொல்லப்பட்ட செய்தியை பதற்றத்தில் தனக்கு சொல்லப்பட்டதாக நினைத்துத் தான் அவசரப்பட்டுவிட்டதாக அவர் மனம் வருந்திய போது அவர் உடல் நிலத்தைத் தொட்டது.

**அவசரக்காரனுக்கு புத்தி மத்திமம்.**

**எப்.எக்ஸ்.அன்ரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு நீர்வளம் பாதுகாக்கப்பட வேண்டும்

இறைவனின் இயற்கை அன்பளிப்பில் கிடைத்த ஓர் அழியாச் சொத்தாக நீர் காணப்படுகின்றது. **“நீரின்றி அமையாது உலகு”** என்பது வள்ளுவரின் வாக்கு. ஆரோக்கியமான வாழ்வுக்கு நீரே மிக முக்கியமான அடிப்படைத் தேவையாக இருந்து வருகின்றது. **“ஆழி சூழ் உலகு”** என்பதற்கிணங்க இவ்வுலகில் மூன்றில் இரண்டு பங்கு தண்ணீரால் சூழப்பட்டுள்ளது. மனித உடலிலும் சுமார் 75வீத நீர்தான் காணப்படுகின்றது. நம் உணவில் உள்ள சத்துக்களை தேவையான உறுப்புக்களுக்கு எடுத்துச் செல்லவும் கழிவை கழிவு உறுப்புக்களுக்கு அனுப்பவும் நீர் அவசியம். உணவில்லாமல் ஒரு வாரம் வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் தண்ணீர் இல்லாமல் ஒரு மணிநேரம் கூட இருக்க முடியாது. ஒரு கிராம் தங்கத்தை விட ஒரு மிடறு தண்ணீரின் மதிப்பு அதிகம் என்பது தாகம் கொண்ட மனிதனுக்கு தான் தெரியும்.


இவ்வாறு அற்புதமான சக்திகளைக் கொண்ட நீருக்கான கேள்வியை நோக்கும் போது இலங்கையில் நகர்ப்புறத் தொகையில் சுமார் 70 சதவீதத்தினர் குழாய் நீர் வசதியைக் கொண்டுள்ளனர். நகர்ப் பிரதேசங்களில் சேரிகளிலும் கொட்டில்களிலும் அரை குறை நிரந்தர இருப்பிடங்களிலும் வசித்து வரும் மக்கள் பொருத்தமான சுகாதார நீர் வசதியைப் பெற முடியவில்லை. அவர்களுக்கு வீதிக்குழாய்கள் மூலம் 20 குடும்பங்களுக்கு ஒரு குழாய் என்ற ரீதியில் நீர் வழங்கப்பட்டு வருகின்றது. எனினும் கிராமப் பிரதேசங்களைப் பொறுத்தவரையில் குடித்தொகையில் சுமார் 15 சதவீதத்தினர் மட்டும் குழாய் மூலம் நீர் வசதியைப் பெறுகின்றனர். ஏனையோர் ஆறுகள், ஓடைகள் மற்றும் ஏரிகள் போன்ற மேற்பரப்பு நீர்நிலைகளில் இருந்தும் கிணறுகள், குழாய்க்கிணறு போன்ற நிலத்தடி நீர் மூலங்களிலிருந்தும் தமது நீர்த் தேவையை பூர்த்தி செய்கின்றனர்.

உள்நாட்டு போரினால் பாதிக்கப்பட்ட இலங்கையின் வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் வடக்கின் வசந்தம் வேலைத்திட்டம் கொண்டு வரப்பட்டது. இது 2009 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் குளங்களை புனரமைப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பூர்த்தியாகவில்லை என்ற குற்றச்சாட்டு விவசாயிகளால் முன்வைக்கப்பட்டது. வறுமை ஒழிப்பு தினம் கடந்த வருடம் **ஒக்டோபர் 17** ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது. வறுமை ஒழிப்பில் வடக்கின் நீர்ப்பிரச்சினை முக்கிய பங்காற்றுவதாகவுள்ளது. வடக்கில் காணப்படும் நீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டால் வடக்கில் காணப்படும் ஏனைய அபிவிருத்திப் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

முன்மொழியப்பட்ட நீர் வழங்கல் செயற்றிட்டத்தின் மீளாய்வுக் கலந்துரையாடல் அண்மையில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றுள்ள நிலையில் வடமாகாண விவசாய நீர்ப்பாசன மற்றும் குடிநீர் தேவைகள் குறித்தும், வட மத்திய பாரிய கால்வாய் திட்டம், நெதர்லாந்து அரசின் நிதியுதவியில் 2020 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ள **“யாழ்ப்பாணத்திற்கு நீர்”** செயற்றிட்டம் ஆகியன தொடர்பாகவும் வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் ஜெய்க்கா நிறுவனத்தின் நிதியுதவியின் கீழ் முன்னெடுக்கப்படும் **“எல்லங்கா”** குளக் கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாகவும் இதன் போது கலந்துரையாடப்பட்டது. மக்களின் வறுமைக்கு முக்கிய காரணியாக இருக்கும் நீர்ப்பிரச்சினைக்கு துரிதமாக தீர்வு காணப்பட வேண்டிய கடப்பாடுள்ளது.

வடக்கு மாகாண மக்களின் பிரதான வாழ்வாதாரமாக விவசாயம் காணப்படுகின்ற நிலையில் விவசாயத்துக்கு தேவையான நீர் வசதிகள் செய்து கொடுக்கப்படாவிட்டால் வடக்கின் அபிவிருத்தி எவ்வாறு சாத்தியமாகும். விவசாயத்துக்கான நீர்ப்பாசனத்துடன் வடக்கு மக்களின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்வதாக நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் ஆராயப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் வேலணை கண்ணபுரம் பகுதி மக்கள் குடிதண்ணீருக்கான பிரச்சினைகளை நாளாந்தம் எதிர்கொண்டு வரும் நிலையில் கடந்தகாலங்களில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக இருந்த காலத்தில் வழங்கப்பட்ட குடிதண்ணீர் தற்போது குறுகியதோர் வரையறை முறைமை ஊடாக தங்களுக்கு வழங்கப்படுவதாகவும் அங்குள்ள சுமார் 45 குடும்பங்கள் குழாய் வழியாக கிடைக்கும் நீரையே நம்பி வாழ்ந்து வருவதாகவும் ஒவ்வொரு குடும்பமும் 20 லீற்றர் வரையே நீரை பெற்றுக்கொள்ள முடியும் அதுவும் சில நாட்களில்



வழங்காது 2 நாட்களுக்கு ஒரு தடவை வழங்கும் நிலையும் காணப்படுவதால் குடிதண்ணீருக்கு மக்கள் பெரும் சிரமப்பட்டு வருகின்றனர் என அக் கிராமவாசி ஒருவர் குறிப்பிடுகின்றார். எனவே இதனை கருத்தில் கொண்டு அம்மக்கள் குடிதண்ணீருக்காக நாளாந்தம் எதிர்கொள்ளும் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வினை பெற்றுக்கொடுக்க உரிய அதிகாரிகள் முன்வர வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்லாறு கிராமத்துக்கு வருடம் முழுவதும் குழாய் மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வரும் நிலை காணப்படுகின்றது. அங்கு சுமார் 250 இற்கு மேற்பட்ட குடும்பங்களின் குடிநீர்ப் பிரச்சினையை தீர்ப்பதற்கு கரைச்சிப் பிரதேச சபையினால் பிரமந்தனாறுக் கிராமத்திலிருந்து குடிநீர் விநியோகத்திட்டம் கடந்த ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந் நிலையில் தற்போது அந்நீர் கரிய நிறத்தில் காணப்படுபவதாகவும் அதனை பாத்திரத்தில் எடுத்து வைக்கும் போது பாத்திரத்தின் அடிப்பகுதியில் கறுப்பு நிறத்திலான தூசு படிவதாகவும் இதனால் குடிப்பதற்கு ஏற்ற நீராக இல்லை என்று அங்குள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்தின் கோணாவில், காந்தி கிராமம், ராஜன் குடியிருப்பு, அக்கராயன், பூநகரி போன்ற இடங்களில் பாரிய நீர்த் தட்டுபாட்டு நெருக்கடி நிலவி வருவதால் அன்றாட அனைத்து நீர்த்தேவைக்காகவும் பணம் கொடுத்தே நீரினை பெற்று வருகின்றனர். யாழ்.பொம்மை வெளி கிராம மக்களும் இவ்வாறான பிரச்சினையை எதிர்கொண்டு வருகின்றனர். இக்கிராமங்களில் பொதுக் கிணறுகளை அமைப்பதன் மூலம் குடிநீர் நெருக்கடிக்கான தீர்வினை வழங்க முடியும். இரணைமடு நீர்ப்பிரச்சினை, சுன்னாகம் நிலத்த்டி நீர் மாசு அடைதல் போன்ற இன்னும் பல்வேறு பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வினை பெற்றுக் கொடுத்து மக்களை வறுமை நிலையிலிருந்து பாதுகாக்க வேண்டும்.

வீட்டு நடவடிக்கைகளில் நீரை விரயம் செய்யாமல் சிக்கனமான முறையில் உபயோகிப்பது குறித்து நுகர்வோருக்கு விளக்கமளிக்க வேண்டும். இதன்மூலம் நீரை முகாமை செய்ய முடியும். அடுத்து, இலங்கையின் நீர்வளம் பற்றி நோக்கும் போது ஆற்றுவடிகால் நிலங்களை கொண்டிருப்பதுடன். இவற்றில் 16 வடி நிலங்கள் ஈரவலயத்தில் அமைந்துள்ளன. நாட்டின் நதிகளின் நீரோட்டம் ஏனைய புவியியல் காரணிகளின் அடிப்படையில் ஒன்றுக்கொன்று வேறுபட்டுக் காணப்படுகின்றது.

நீர்த்தேக்கங்கள், குளங்கள் மற்றும் ஏனைய நீர் நிலைகள் என்பன ஏனைய தரை மேற்பரப்பு நீர் ஆதா ரங்களாக இருந்து வருகின்றன. நிலத்தடி நீர்வளம் பெருமளவுக்கு நிலத்தின் கீழ்ப் பகுதியில் காணப்படும் மண் மற்றும் பாறை அமைப்புக்கள் என்பவற்றின் நீரியல் சார்ந்த குணாம்சங்களில் தங்கியுள்ளது. இலங்கை யில் 3 வகையைச் சேர்ந்த நிலத்தடி நீர் வளம் காணப்படுகின்றது.

கரையோர அல்லது வண்டல் படிவு பாறைகளில் காணப்படும் நிலத்தடி நீர், காலநிலை அழிவுக்குட்பட்ட பாறைகளில் காணப்படும் நிலத்தடி நீர், பாறை அடித்தள நிலத்தடி நீர். இவை தவிர நீர் மேற்பரப்பு நீர்நிலைகள் மூலமும் நீரினைப் பெறுவதனூடு நீரிற்கான கேள்வி பூர்த்தி செய்யப்படுகின்றது. இதனடிப்படையில் நோக்குகின்ற போது வருங் காலத்தில் நீருக்கான கேள்வியை பூர்த்தி செய்வதில் பாரிய சிக்கல்கள் ஏற்படலாம். இலங்கை அரசாங்கம் விவசாயத்தையும் கைத்தொழில்துறை நடவடிக்கைளையும் இன்றைய பொருளாதார நிலைமையின் கீழ் மேம்படுத்தும் செயற்றிட்டங்களை அண்மைக் காலங்களில் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது.

எனவே எதிர்காலத்தில் நீருக்கான கேள்வி அதிகரித்துச் செல்லும் போது தற்போதைய நீர் வளங்களைக் கொண்டு இப்பிரச்சினையை தீர்ப்பது சிரமமானதாக இருந்து வரும். ஆகையால் நீர்வளத்தை பேண வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்து நீர்வளத்தை முகாமை செய்ய வேண்டியுள்ளது. எனினும் அரசினால் மாத்திரம் இதனை மேற்கொள்ள முடியாது. சிவில் சமூகம், சுற்றாடலில் அக்கறை கொண்டுள்ள நிறுவனங்கள், பாடசாலை மாணவர்கள், தனிப்பட்டவர்கள் நீரின் தரத்தை பாதுகாக்கும் பாதுகாவலர்காக முன்வர வேண்டும்.

உலகில் நுகரப்படும் நீரில் மூன்றில் இரண்டு பங்கு விவசாயத்திற்கு தேவைப்படுகின்றது. தொழிற்சாலைகளின் நீர்த்தேவையும் அதிகரித்து வருகின்றது. எனவே நீரின் தேவையைப் பிரதிபலிக்கும் நீண்டகால கொள்கைகளை உருவாக்கி நீர் முகாமைத்துவம் சரிவர நடைமுறைப்படுத்த வேண்டும், நீர் வழங்கலும் அதன் பயன்பாடும் தொடர்பான கல்வித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். சுற்றாடல் சம்பந்தமாக கல்விக் கொள்கைகள் மூலம் சூழல் பாதுகாப்பு என்ற பொதுக்கருத்தை மக்களிடையே உருவாக்க வேண்டும்.

மக்கள் நீரைப் பாதுகாப்பதன் அவசியத்தை உணர செய்ய வேண்டும், பெருந்திட்டங்களை விட நமது முன்னோர்கள் ஏற்படுத்தியிருந்த குளங்கள், வாவிகள், குட்டைகள் போன்றவற்றையும் மீளவும் புனரமைத்து மழைக்காலங்களில் நீரைத் தேக்குதல் போன்ற முக்கிய சிறிய திட்டங்களை செயற்படுத்துவதே ஆக்கபூர்வமானதும் வரவேற்கத்தக்கதானதாகும்.

எனவே தூர்ந்து போயிருக்கும் குளங்களையும் மேற்பரப்பு பள்ளங்களையும் பராமரிக்கும் முகமாக வண்டல் படிவுகளை எடுத்து நீக்கி புதுப்பொலிவுடன் நீர் உட்புக வழி ஏற்பட செய்தல் வேண்டும். இதற்கான முன் முயற்சிகள் யாழ்ப்பாண குடாநாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியது. மழைகாலங்களில் போதியளவு நீர் தேக்கப்படுவதனால் எமது பிரதேச நீர்வளம் பேணப்படக்கூடிய வாய்ப்பு அதிகரிக் கப்படக் கூடிய சாத்தியம் தோன்றியுள்ளன.

மேலும் இது போன்ற செயற்றிட்டங்கள் ஊக்கப்படுத்தப்படல் வேண்டும். ஒவ்வொரு பிரதேசத்திலும் அந்தந்த பிரிவு சமூகசேவை இயக்கங்கள் இப்பணியில் ஈடுபட்டு வரலாம். தரிசு நிலங்களில் உயர்வரம்புகள் கட்டி நீரைச் சேமிக்கலாம். வானுயர மரங்களை வளர்த்து மேற்பரப்பில் இருந்து கோடை காலங்களில் ஆவியாகும் நீர் வெளியேறும் செய்முறைகளைத் தடுக்கலாம். தற்போது குடாநாட்டில் மரநடுகை இயக்கம் வெற்றியளித்து வருவதோடு பாடசாலை மட்டங்களிலும் கூட மரநடுகை ஊக்குவிக்கப்படுகின்றது. இதன்மூலம் வருங்காலத்தில் குடாநாட்டின் மேற்பரப்பு பசுமை நிறைந்து காணப்படும்.

இதன்மூலம் மேற்பரப்பிலிருந்து வெளியேற்றப்படும் நீர் குறைவதுடன் மண்வளமும் நீர்வளமும் பாதுகாக்கப்படும். பிரதேசம் முழுவதிலும் நீரியல் பிரச்சினைகளையும் நீர் வளங்களையும் பேணும் நடவடிக்கைகளையும் அவற்றின் முக்கியத்துவத்தினையும் உணரச் செய்வதற்கான வழிமுறைகளைக் கண்டுபிடித்து உரியமுறையில் பாடசாலை மட்டங்கள், கிராமிய மட்டங்கள் போன்றவற்றால் உணர்த்தப்படல் வேண்டும். எமது சூழல் பற்றிய தெளிவு மிக அவசியம். எமது சிறுவர்களுக்கு சூழல் பின்னணி பற்றி போதிய விளக்கத்தைக் கொடுத்தல் மிகச்சிறந்த நடவடிக்கையாகும்.

எமக்குக் கிடைக்கும் குறைந்த கால மழைவீழ்ச்சியை முறைப்படி சேகரிக்கும் வழிமுறைகளைக் கண்டறிந்து அமுல்படுத்தப்பட வேண்டும். பாரிய அளவுத்திட்டங்கள் அமுல்படுத்தப்படும் அதேவேளை சிறிய அளவினதான நடைமுறைச் சாத்தியமான திட்டங்கள் பயனில் சிறந்தது. அந்த வகையில் மேற்பரப்பு நீர்நிலைகள் புனருத்தாரணம் சிறந்த முன் முயற்சியாகும்.

பொதுநீர் வழங்கல் மிகக்குறைவாக உள்ள கிராமப்புறங்களில் பொது ஜன சுகாதார நிகழ்ச்சிகள் பலப்படுத்தப்பட வேண்டும். தனிநபர் மற்றும் உணவு, சுகாதாரம் என்பவற்றை மேம்படுத்துவதற்கு விசேட முக்கியத்துவம் அளிக்கப்படல் வேண்டும். வழங்கப்படும் குடிநீரில் நோயை ஏற்படுத்தும் நுண்ணுயிர்கள் உள்ளதா? என பொதுச் சுகாதார அதிகாரிகள் கிரமமாக பரிசோதனை செய்ய வேண்டும். தற்போது பல நதிகளும், நீர்த்தேக்கங்களும் குடிநீரைப் பெறும் நீர் ஆதாரங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் பல எதிர்காலத்தில் இதற்குப் பயன்படுத்தப்படவுள்ளன. தற்போதைய எதிர்கால சந்ததியினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நாட்டின் நீர் வளங்களின் தரத்தை திருப்திகரமாக பராமரித்தல் வேண்டும்.

இலங்கையில் நீர் முகாமைத்துவத்திலும், ஆய்வுகளிலும், தகவற்தொகுப்பிலும் நீர்ப்பாசனத்திணைக்களம், நீர்வளசபை, தேசிய நீர் வழங்குவடிகால்சபை, நாறா நிறுவனம், மகாவலி அதிகாரசபை, கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் என்பன முக்கிய பங்கு வகிக்கின்றன. இவை தவிர பல்கலைக்கழகங்கள், சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் என்பனவும் ஈடுபட்டு வருகின்றன. இவ்வகையில் களனிகங்கை, மகாவலிகங்கை என்பன ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. நிலக்கீழ்நீர் ஆய்வில் யாழ். குடாநாடும் உட்படுத்தப்பட்டுள்ளது.

அனைத்து நடவடிக்கைகளுக்கும் முக்கிய காரணியாக விளங்குவது மனிதனே என்பது புலனாகிறது. எனவே சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு முன்னர் மனிதனின் சிந்தனையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். அதன் மூலமே நிகழ்கால தேவையை சிறந்த முறையில் பூர்த்தி செய்வதோடு எதிர்கால சந்ததியினருக்கும் கையளிக்கும் வகையில் நீர்வளத்தை பாதுகாக்க முடியும்.

சிவராசா லோஜிகா
யாழ். பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துடுப்பாட்டம், பந்துவீச்சில் நம்பர்-1 ; சகலதுறையில்?




ஒருநாள் போட்டிகளில் இந்திய அணியில் தற்போது விளையாடி வரும் வீரர்களில் ரோஹித் ஷர்மா, தவான், கோலி, ராயுடு, டோனி ஆகியோர் உலகக் கோப்பை அணியில் தங்களது இடத்தை உறுதி செய்துள்ளனர்.

ஆனால் இவர்களில் ஒருவர்கூட பந்துவீசுவதில்லை. அதேபோல பும்ரா, சமி, குல்தீப், சாஹல் போன்ற பவுலர்கள் பட்டிங்கில் பங்களிப்பு அளிப்பதில்லை. புவனேஷ் மட்டும் ஓரளவு பட்டிங்கில் பங்களிப்பார்.

5 துடுப்பாட்டவீரர்கள் பந்து வீசுவதில்லை. பந்து வீசும் 4 வீரர்கள் துடுப்பாட்டம் செய்வதில்லை. பேக்அப் துடுப்பாட்ட வீரர்களாக ராகுல், பண்ட் ஆகியோரும் துடுப்பாட்டம் மட்டுமே விளையாடுவார்கள். கேதர் ஜாதவ் பார்ட் டைம் பந்து வீச்சாளராக செயல்பட்டு வருகிறார். நான்கு பந்துவீச்சாளர்கள் மற்றும் ஒரு சகலதுறை வீரராக அணியில் இடம்பெறும் நிலையில் 6ஆவது பந்து வீச்சாளராக பார்ட் டைம் பந்து வீச்சாளர் ஒருவர் மட்டுமே இருப்பது இந்திய அணிக்கு பலவீனமாக அமையும்.

தற்போது ஹர்திக் பாண்டியா மட்டுமே, இந்திய அணியில் பெயர் சொல்லும்படி சகல துறை வீரராக இருக்கிறார்.




விஜய் சங்கர் பேக்அப் சகல துறை வீரராக உள்ளார். ஜடேஜா அணியில் இடம்பெற்றால் பந்துவீச்சு மற்றும் சகல துறைவீரராக விளையாடுவார்.

உலகின் நம்பர்-1 துடுப்பாட்ட வீரர், நம்பர்-1 பந்து வீச்சாளர் என மாஸ் காட்டும் இந்திய அணி சகல துறை வீரர்கள் பட்டியலில் சிறப்பாக இல்லை. துடுப்பாட்ட தர வரிசைப் பட்டியலில் ஹோலி, ஷர்மா, தவான் என முதல் 15 இடங்களில் 3 இந்திய வீரர்கள் உள்ளனர். அதேபோல பந்து வீச்சில் பும்ரா, குல்தீப், சாஹல் என 3 பேர் உள்ளனர். ஆனால் சகலதுறைவீரர்கள் பட்டியலில் முதல் 15இல் ஒருவர்கூட இந்திய அணி வீரர் இல்லை.

இந்திய அணியை தவிர மீதமுள்ள 10 அணிகளின் வீரர்கள் சகலதுறை வீரர்கள் பட்டியலில் முதல் 15 இடத்தில் உள்ளனர். இங்கிலாந்து-4, ஆப்கானிஸ்தான்- 2, பாகிஸ்தான்-2, தென்னாபிரிக்கா-1, அவுஸ்திரேலியா-1, இலங்கை-1, சிம்பாவே-1, மேற்கிந்தியத் தீவுகள்-1, நியூசிலாந்து-1, பங்களாதேஷ்-1 என முதல் 15 சகலதுறை வீரர்கள் இடங்களை இந்த 10 அணியின் வீரர்கள் பிடித்துள்ளனர்.

ரஷித் கான், முஹம்மது நபி ஆகியோரின் பங்களிப்பின் மூலம் ஆப்கானிஸ்தான் அணி முன்னேறி சிறந்த அணியாக மாறி வருகிறது. இங்கிலாந்து அணியில் மொயின் அலி, க்ரிஸ் வோக்ஸ், அடில் ரஷீத், பேன்ஸ்டோக்ஸ்என சகலதுறை வீரர்களின் பங்களிப்பு தான் உலகின் நம்பர்-1 இடத்திற்கு காரணமாக உள்ளது.

இந்திய அணியில் இதுவரை வேகப்பந்து வீச்சாளர் சகலதுறைவீரராக கலக்கியது கபில் தேவ் மட்டுமே. 225 போட்டிகளில் 3783 ஓட்டங்கள், 253 விக்கெட்கள் எடுத்துள்ளார். இந்திய அணிக்கு பல சகல துறை வீரர்கள் விளையாடினாலும் ஒரு சில வருடங்கள் மட்டுமே அணிக்கு விளையாடி வருகின்றனர். துடுப்பாட்ட வீரர், பந்து வீச்சாளர் போல அணியில் நிரந்தரமாக விளையாடுவதில்லை. அஜீத் அகர்கர், இர்பான் பதான் ஆகியோர் சகலதுறைவீரர் திறமை இருந்தும் முழுவதுமாக சகல துறை வீரர்களாக ஜொலிக்கவில்லை. பின்னி, ரிஷி தவான் என சிலர் அணியில் இடம்பெற்றாலும் குறுகிய காலம் மட்டுமே விளையாடினர்.



2015ஆம் ஆண்டு உலகக் கோப்பைக்கு பிறகு இந்திய அணி பல சகலதுறைவீரர்கள் இந்திய அணியில் விளையாடினாலும் அவர்கள் பங்களிப்பு அணிக்கு போதுமானதாக இல்லை. ஸ்டுவர்ட் பின்னி, ரிஷி தவான் ஆகியோர் மட்டுமே இந்திய அணியில் இடம் பிடித்த மீடியம் பாஸ்ட் சகல துறைவீரர்கள். ஆனால் அவர்கள் அணியில் இடத்தை தக்க வைக்க முடியவில்லை.

உலகக்கோப்பைக்கு 3 மாதங்கள் மட்டுமே உள்ள நிலையில் காயம் காரணமாக பாண்டியா சில தொடர்களாக அணியில் இடம்பெறாமல் இருப்பது இந்திய அணிக்கு பின்னடைவாக உள்ளது. விஜய் சங்கர், ஜடேஜா ஆகியோர் அவுஸ்திரேலியா தொடரில் சகலதுறை வீரராக பங்களிப்பது இந்திய அணிக்கு மிகவும் அவசியமாக உள்ளது.

# இவரை ஆட்டமிழப்பு செய்தால்தான் நான் நம்பர்–1 பந்துவீச்சாளர் : பும்ரா

பெர்த் போன்ற பிட்ச்களில் பும்ராவின் பவுலிங்கை நான் சந்திக்க விரும்பவில்லை" என்று டிசம்பர் மாதம் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியின்போது விராட் ஹோலி குறிப்பிட்டார். அந்த தொடரில் ஒரு வரலாற்று சிறப்புமிக்க தொடர் வெற்றியை இந்திய அணி பெறுவதற்கு முக்கிய காரணமாக இருந்தது பும்ராவின் பவுலிங். லிமிடெட் ஓவர் ஸ்பெஷலிஸ்ட் என்று கருதப்பட்ட பும்ரா கடந்த வருடம் டெஸ்ட் போட்டிகளில் அறிமுகமாகி வெளிநாடுகளில் அசத்தினார்.

2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சர்வதேச போட்டிகளில் இந்திய அணிக்கு அறிமுகமானார் ஜஸ்ப்ரிட் பும்ரா. விளையாடத் தொங்கி 3 ஆண்டுகளில் இன்று உலகின் நம்பர்-1 பவுலராக திகழ்கிறார். யார்கர், ஸ்லொவ் பால், பவுன்சர் என பல விதமான பந்துவீச்சின் மூலம் துடுப்பாட்டவீரர்களை திணறடித்து வருகிறார். அவர் சர்வதேச போட்டிகளுக்கு அறிமுகமாக முக்கிய காரணமாக இருந்தது ஐ.பி.எல். போட்டிகளில் அவரின் அற்புதமான பந்துவீச்சு.

2013ஆம் ஆண்டு தனது முதல் ஐ.பி.எல். போட்டியில் ஹெயில், ஹோலி போன்ற பெரிய ஜாம்பவான்களுக்கு பந்துவீசினார். அந்த போட்டியில் கோலியின் விக்கெட்டை வீழ்த்தினார். குறுகிய காலகட்டத்தில் மிகவும் நல்ல முன்னேற்றத்தை கண்டுள்ளார். ஒவ்வொரு முறையும் பவுலிங்கில் அசத்தி ப்ட்ஸ்மேன்களுக்கு அதிக நெருக்கடி கொடுத்து வருகிறார். இன்று உலகின் சிறந்த பவுலர், டெத் ஓவர் ஸ்பெஷலிஸ்ட் இவர்தான்.

டெஸ்ட் போட்டியில் முதல் விக்கெட் ஏ பி டி வில்லியர்ஸ், ஒருநாள் போட்டிகளில் முதல் விக்கெட் ஸ்டீவ் ஸ்மித், 2013–ஆம் ஆண்டு ஐ.பி.எல். தொடரில்முதல்விக்கெட் விராட்ஹோலி, இருபது-20 போட்டிகளில் முதல் விக்கெட் வார்னர் என அனைத்தும் நட்சத்திர வீரர்களின் விக்கெட்.

ஒருநாள் போட்டிகளில் உலகின் நம்பர்-1 பந்துவீச்சாளரான ஜஸ்ப்ரிட் பும்ரா வரும் ஐ.பி.எல். தொடரில் விராட் கோலியின் விக்கெட்டை எடுப்பதில் முனைப்பாக உள்ளார். உலகின் சிறந்த பந்துவீச்சாளரா நான்? இன்னும் இல்லை. நான் இன்னும் உலகின் சிறந்த பட்ஸ்மேனை அவுட் செய்ய வேண்டும். விராட் ஹோலி, நான் வருகிறேன். இந்த முறை நீங்கள் என் அணியில் இல்லை" என்று பும்ரா ஐ.பி.எல். ப்ரோமோ ஒன்றில் கூறியுள்ளார்.

இந்திய அணியில் ஒன்றாக இணைந்து விளையாடிய வீரர்கள் ஐ.பி.எல். தொடரில் வேறு வேறு அணியில் விளையாடவுள்ளனர். வெளிநாட்டு அணிகளுடன் ஆக்ரோசமாக விளையாடிய வீரர்களுடன் ஒரே அணியிலும் இந்திய அணி வீரர்கள் விளையாடவுள்ளனர். ஐ.பி.எல். போட்டிகள் பற்றி பலரும் கருத்துகள் கூறி வரும் நிலையில் இந்த ப்ரோமோ வெளியிடப்பட்டு ரசிகர்கள் அனைவரிடமும் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

ஐ.பி.எல். நிர்வாகத்தின் அதிகாரபூர்வ டுவிட்டர் பக்கத்தை 6.3 மில்லியன் ஃபாலோவர்ஸ் ஃபாலோ செய்து வருகின்றனர். அதேபோல ஒவ்வொரு அணிக்கும் தனியாக அதிகாரபூர்வ டுவிட்டர் கணக்குகள் உள்ளன. அதிகபட்சமாக மும்பை அணிக்கு 4.97 மில்லியன் ஃபாலோவர்ஸ் உள்ளனர். சென்னை அணி - 4.54, கொல்கத்தா அணி - 4.12, பெங்களூர் அணி - 3.35, சன்ரைசர்ஸ் அணி - 2.02, பஞ்சாப் அணி - 1.91, டெல்லி அணி - 1.32, ராஜஸ்தான் அணி - 1.09 மில்லியன் ஃபாலோவர்ஸ்களை கொண்டுள்ளது.

ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணி தனது முதல் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு எதிராக மார்ச் 23ஆம் திகதி விளையாடுகிறது. 24-ஆம் திகதி டில்லி அணியுடன் மும்பை அணி மோதவுள்ளது. மும்பை மற்றும் பெங்களூர் அணிகள் 28ஆம் திகதி விளையாடவுள்ளது. ஐ.பி.எல். தொடரில் மும்பை அணியை எதிர்கொள்ளும் போது பும்ராவின் பவுலிங் பெங்களூர் அணிக்கு சவாலாக இருக்கும். இதில் கோலி VS பும்ரா, டி வில்லியர்ஸ் VS பும்ரா மிகவும் எதிர்பார்க்கப்படும் ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் வலிமை

சர்ஜிக்கல் ஸ்ட்ரைக் நடத்தியபோது 4 மணிநேரம் தாக்குதல் நடத்தியதாகச் செய்திகளை வெளியிட்டது இந்திய பாதுகாப்புத் துறை. ஆனால் இன்று நடந்த பதிலடி தாக்குதலுக்கு இந்திய விமானப்படை வெறும் 21 நிமிடங்களே எடுத்துக் கொண்டதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

கடந்த 2016 ஆம் ஆண்டு செப்டெம்பர் 29 ஆம் தேதி அதிகாலை 12.30 மணி பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் சுமார் 2 கி.மீ.தூரம் ஊடுருவி "சர்ஜிக்கல் ஸ்ட்ரைக்" எனப்படும் போர் நடத்தி 38 பயங்கரவாதிகளைக் கொன்றது இந்திய இராணுவம். செப்டெம்பர் 18, 2016 அன்று இந்தியாவிற்குள் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கான பதிலடியே இந்த சர்ஜிக்கல் ஸ்ட்ரைக். அதே போல மற்றுமொரு சர்ஜிக்கல் ஸ்ட்ரைக்கை அன்று அதிகாலை 3.30 மணியளவில் நடத்தியுள்ளது இந்திய விமானப் படை. இரு வாரங்களுக்கு முன்பு ஜம்மு-காஷ்மீர் மாநிலம் புல்வாமா பகுதியில் இந்திய இராணுவ வீரர்கள் சென்ற வாகனத்தின் மீது பாகிஸ்தான் ஆதரவு தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலுக்குப் பதிலடியாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்திய இராணுவம் 2016 ஆம் ஆண்டு சர்ஜிக்கல் ஸ்ட்ரைக் நடத்தியபோது, நான்கு மணிநேரம் தாக்குதல் நடத்தியதாகச் செய்திகள் வெளியாகின. ஆனால் தற்போது நடத்தப்பட்டுள்ள பதிலடித் தாக்குதலுக்கு இந்திய விமானப்படை வெறும் 21 நிமிடங்களையே எடுத்துக் கொண்டதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. 12 மிரஜ்ரக போர் விமானங்களில் சுமார் 1,000 கிலோ வெடிகுண்டுகள் கொண்டு இந்தத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டுள்ளதாக ஏ.என்.ஐ.செய்தி தெரிவித்துள்ளது. மேலும் மூன்று இடங்களில் இந்தத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டதாகவும் அந்தச் செய்தி தெரிவிக்கிறது. பாகிஸ்தானின் பாலகோட் (Balakot) பகுதியில் அதிகாலை 3.45 மணியிலிருந்து 3.53 மணிக்குள்ளாகவும், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரின் தலைநகரான முசாஃபராபாத்தில் (Muzaffarabad) அதிகாலை 3.48 மணியிலிருந்து 3.55 மணிக்குள்ளாகவும், சக்கோட்டி (Chakothi) பகுதியில் 3.58 மணி முதல் 4.04 மணிவரையிலும் இந்திய விமானப்படையின் தாக்குதல்கள் அரங்கேறியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தப் பதிலடி தாக்குதலுக்குப் பொதுமக்கள் தரப்பிலும், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சிகள், பிரபலங்கள் என பல்வேறு தரப்பினரிடம் இருந்தும் மத்திய அரசுக்குப் பாராட்டுகள் குவிந்தவண்ணம் உள்ளன. டுவிட்டர் ட்ரெண்டிங்கில் சர்ஜிக்கல் ஸ்டிரைக்-2, இந்தியன் ஏர் ஃபோர்ஸ், இந்தியா ஸ்டிரைக்ஸ் பேக், ஜெய்ஹிந்த், ஏர் ஸ்டிரைக் என டொப் ட்ரெண்டிங்கை ஆக்கிரமித்துள்ள அனைத்து ஹேஷ்டேக்குகளும் விமானப்படையின் தாக்குதல் சம்பந்தமானவைதான்.



அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகிய மூன்று நாடுகளுக்குப் பிறகு அதிகளவு படைபலமும் ஆயுத பலமும் கொண்ட உலகின் நான்காவது வலிமையான இராணுவத்தைக் கொண்ட நாடாகத் திகழ்கிறது இந்தியா.

## உலகின் நான்காவது வலிமையான இராணுவம் இந்திய இராணுவம்!

ஆக்டிவ் இராணுவ வீரர்கள்-1,362,500, மொத்த இராணுவ வீரர்கள்-4.207, 250, ரிசர்வ் செய்யப்பட்டுள்ள இராணுவ வீரர்கள்-2,844,750.

இராணுவப்படை டாங்குகள்-4,426, போர்க் கவசம் கொண்ட வாகனங்கள்-3,147, இழுவை பீரங்கிகள்-4,158.

தானியங்கி பீரங்கிகள்-190, ரொக்கெட் புரஜெக்டர்ஸ்-266.

### கடற்படை

ரோந்துக் கப்பல்கள்-139

வழித் துணைக்கப்பல்கள்-22, நீர்மூழ்கிக்கப்பல்கள்-16, போர்க்கப்பல்கள்-14, வெடி குண்டுக் கப்பல்கள்-11, அகழ் பீரங்கி போர்க்கப்பல்கள்-4, விமானம் ஏந்திய போர்க்கப்பல்கள்-1.

### விமானப்படை

மொத்த போர் விமானங்கள்-2,185

போர் விமானங்கள்-590, தாக்குதல் விமானங்கள்-804, போக்குவரத்து விமானங்கள்-708, பயிற்சி விமானங்கள்-251, மொத்த ஹெலிகொப்டர்கள்-720, தாக்குதல் ஹெலிகொப்டர்கள்-15

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : பத்ரகாளி
இயற்றியவர் : வாலி
இசை : இளையராஜா
பாடியவர்கள் : ஜேசுதாஸ், சுசிலா



கண்ணன் ஒரு கை குழந்தை
கண்கள் சொல்லும் பூங்கவிதை
கன்னம் சிந்தும் தேனமுதை
கொண்டு செல்லும் என் மனதை
கையிரண்டில் நானெடுத்து
பாடுகின்றேன் பாடுகின்றேன் ஆராரோ
மைவிழியே தாலேலோ
மாதவனே தாலேலோ
கண்ணன் ஒரு கை குழந்தை

உன் மடியில் நானுறங்க
கண்ணிரெண்டும் தான் மயங்க
என்ன தவம் செய்தேனோ
என்னவென்று சொல்வேனோ
உன் மடியில் நானுறங்க

ஏழ் பிறப்பும் இணைந்திருக்கும்
சொந்தமிந்த சொந்தமம்மா
வாழ்விருக்கும் நாள் வரைக்கும்
தஞ்சமுந்தன் நெஞ்சமம்மா

அன்னமிடும் கைகளிலே
ஆடி வரும் பிள்ளையிது
உன் அருகில் நானிருந்தால்
ஆனந்தத்தின் எல்லையிது

காயத்ரி மந்திரத்தை
உச்சரிக்கும் பக்தனம்மா
கேட்கும் வரம் கிடைக்கும் வரை
கண்ணுறக்கம் மறந்ததம்மா

மஞ்சள் கொண்டு நீராடி
மைகுழலில் பூச்சூடி
வஞ்சிமகள் வரும்போது
ஆசை வரும் ஒரு கோடி

மஞ்சள் கொண்டு நீராடி
மைகுழலில் பூச்சூடி
வஞ்சிமகள் வரும்போது
ஆசை வரும் ஒரு கோடி

கட்டழகன் கண்களுக்கு
மை எடுத்து எழுதட்டுமா
கண்கள் பட கூடுமென்று
பொட்டு ஒன்று வைக்கட்டுமா

கண்ணன் ஒரு கை குழந்தை
கண்கள் சொல்லும் பூங்கவிதை
கன்னம் சிந்தும் தேனமுதை
கொண்டு செல்லும் என் மனதை
கையிரண்டில் நானெடுத்து
பாடுகின்றேன் பாடுகின்றேன் ஆராரோ
மைவிழியே தாலேலோ
மாதவனே தாலேலோ

ஆராரியோ ஆராரியோ
ஆராரியோ ஆராரியோ
ஆராரிரோ...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 172

# நீரிழிவு நோயும் உடற்பயிற்சியும்




இன்று அதிகளவில் பாதிப்புக் களை ஏற்படுத்தும் தொற்றா நோய் களில் ஒன்றாக நீரிழிவு நோய் காணப்படுகிறது. குறிப்பாக ஆசிய நாடுகளில் இந் நோயின் தாக்க மானது அதிகமாக வுள்ளது. அது வும் உடல் திணிவுச் சுட்டி (Body Mass Index – BMI) குறைந்த வர்களில் கூட இது ஓர் பிரச்சினை யாகவுள்ளது.

உலகின் 60% நீரிழிவு நோயாளிகள் ஆசியாக் கண் டத்திலேயே வாழ்கின்றனர். இதற்கு காரணம் அவர் களின் தசை நார்களின் பரு மன் (Muscle Mass) குறை வாக வும் வயிற்றுப்பகுதி களில் அதி களவு கொழுப்புப் படிவு ஏற்படுவது மேயாகும். இவற்றிற்கு மேலாக இவர் களின் வாழ்க்கை முறையை யும் பாரிய பங்கு வகிக்கின் றது. அவையாவன நகரமய மாதலி னால் ஏற்பட்ட உடற் பயிற்சிக் குறைவு, புகைப் பழக்கம், பிரதான உண வாக அதிகளவில் அரிசி யினையும் தீட்டிய தானியங் களையும் பயன்படுத்து வதாகும். நமது ஆசியக் கண்டத்தில் அளவுக்கதிக மான இனிப்புப் பாவனை யும் ஓர் காரணியாக அமை கின் றது.

எமது நாட்டைப் பொறுத்த வரையில் தற்போது 1.1 மில்லியன் மக்கள் (2015) இந் நோயினால் பாதிக்கப் பட்டுள்ளனர். இள வயதி னரிடையேயும் இந்நோயின் ஆதிக்கம் அதிகரித்து வரு கின்றது.

எனவே இந்நோயின் தாக்கத் திலிருந்து மீள்வதற் கும் அதனைக் கட்டுப்படுத்து வதற்கும் நாம் எமது உண வுப் பழக்கத்தினை மாற்றிக் கொள்வதுடன் ஒழுங்கான உடற் பயிற்சியில் ஈடுபடு வதுமே சிறந்த வழியாக அமையும்.

### உடற் பயிற் சியின் நன்மைகள்

நீரிழிவு நோயாளிகளுக்கு உடற்பயிற்சியே மிகவும் பாதுகாப் பானதும், விரும் பத்தக்கதுமான ஒரு கட்டுப் பாட்டு முறையாகும். இந் நோயினால் ஏற்படக்கூடிய பக்க விளைவுகள் ஏற்பட்ட பின்னரும் கூட உடற்பயிற்சி செய்வதன் மூலம் இந் நோயின் தாக்கம் மேலும் மேலும் அதிகரிக்காது கட்டுப் படுத்திக் கொள்ளலாம்.

### நீரிழிவு நோயும் உடற்பயிற்சியும்

ஒரு நோயாளி உடற் பயிற்சி செய்வதனால் அவ ரது குருதியில் குளுக்கோ சின் அளவு குறைவடை வதுடன் உடல் நிறையும் குறை வடையும். ஒழுங் கான உடற்பயிற் சியில் ஈடு படும்போது உடலில் இன் சுலின் பயன்பாடு (Insulin Sensitivity) அதிகரிக்கின் றது. இதனால் குருதியில் குளுக்கோசின் அளவு கட்டுப் படுத்தப்படுகின்றது.

உடற்பயிற்சியின் மூலம் எமது உடலில் தசைநார்கள் வலிமை பெற்று பருமனில் அதிகரிக்கின்றன (Increase Muscle Mass). இதனால் குருதியிலுள்ள குளுக் கோசின் பாவனை நாளுக்கு நாள் அதிகரிப்பதனால் குருதியில் குளுக் கோசினளவு கட்டுப் படுத்தப்படுகின் றது. தசை நார்கள் வலிமை பெறுகின்ற மையால் உடல் சமநிலை (Balance) அதிகரிக்கின் றது. எமது இயக்கங்கள் ஒழுங்குபடுத் தப்படகின்றது (Coordination). இதனால் விபத்துக்கள் (Falls) முறிவு கள்(Fracture) குறைக்கப் படுகிறது.

### உடற் பயிற் சியினை ஆரம்பித்தல்

நீரிழிவு நோயாளி ஒரு வர் உடற்பயிற்சியினை ஆரம்பிக்க முன்னர் வைத் திய ஆலோசனை யைப் பெற்றுக் கொள்வது நல்லது. குறிப்பாக அவரது மருந்து களில் மாற்றம் செய்ய வேண்டி வரலாம். அல்லது தென் படாதி ருக்கும் சில நோயின் பக்க விளைவுகள் பாதிப் புக்களை அல்லது உயிரா பத்துக்களைக் கூட ஏற்படுத் தலாம். ஆரம்பத்தில் ஒரு நோயாளி தினமும் 30 நிமிட

(16ஆம் பக்கம் பார்க்க)

## உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி நிறுவனங்களே...!

## அரிய வாய்ப்பினை தவறவிடாதீர்கள்

அரசகொள்கைகளுக்கு ஏற்ப உங்கள் நிறுவனத்தை மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC) வில் பதிவுசெய்து கொள்வதற்காக நடைபெறும் கலந்துரையாடலில் பங்குகொண்டு பயன்பெறுங்கள்....!

TVEC யில் பதிவு செய்து கொள்வதால் உங்களுக்கு கிடைக்கும் நன்மைகள்

- சட்டரீதியாக தொழிற்கல்வி நிலையம் ஒன்றினை நடத்திச் செல்வதற்கான அனுமதி
- NVQ பாடநெறி ஒன்றினை அங்கீகாரம் செய்துகொள்ள முயற்சிப்பதற்கான திறவுகோல்
- TVEC இணைய மற்றும் அரசவர்த்தமானி அறிவித்தல்களில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக அங்கீகாரம் கிடைத்தல்
- அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்களில் உங்களது நிறுவனம் உள்வாங்கப்படுவதற்கான அங்கீகாரம்.

எமது முயற்சியினால் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் (TVEC) உயர் அதிகாரிகளுக்கும்.உங்களுக்கும் இடையில் பதிவுகள், மற்றும் பதிவு களில் ஏற்படும் சவால்கள் தொடர்பில் வடமாகாணத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் நிலைய மற்றும் பாடநெறி பதிவுக்கு விண்ணப்பிக்கும் முறை, இணையத்தள பதிவுகள் போன்ற பல்வேறு சந்தேகங்களிலிருந்து நீங்கள் தெளிவு பெற்றுக்கொள்ளலாம்.

**எனவே உங்கள் நிறுவனங்களை எதிர்வரும் 08.03.2019க்கு முன்னர் 077 4440 267 அல்லது 021 492 7500 எனும் தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு உங்களது பங்குபற்றுதலை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்**

TVEC BERENDINA

- நிகழ்வு ஏற்பாடு





வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மற்றும்
வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் விடுத்துள்ள செய்தி
அனுசரணை: இலங்கைக்கான சுவிட்ஸர்லாந்து தூதரகம்

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

Swiss Agency for Development and Cooperation SDC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்கில் போரில் நச்சிகேட்டா இப்போது அபிநந்தன்



கடந்த 1999ஆம் ஆண்டில் நடந்த கார்கில் போரின்போது, இந்திய விமானி ஒருவர் பாகிஸ்தான் ராணுவத்திடம சிக்கிக்கொண்டது போல் தற்போது அபிநந்தன் சிக்கிக் கொண்டுள்ளார்.

புல்வாமா தீவிரவாத தாக்குதலில் 40 சிஆர்பிஎப் வீரர்கள் கொல்லப்பட்டதற்குப் பதிலடியாகப் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் இருக்கும் பாலகோட்டில் ஜெய்ஷ் இ முகமது தீவிரவாத அமைப்பின் முகாம்கள் மீது இந்திய விமானப்படை தாக்குதல் நடத்தித் திரும்பின. இதில் 350 பேர் கொல்லப் பட்டதாக மத்திய அரசு கூறுகிறது.

இதைத் தொடர்ந்து இந்திய எல்லையான ரஜவுரி பகுதியில் வந்து குண்டு வீசிவிட்டு பாகிஸ்தான் விமானங்கள் சென்றன. அப்போது பாகிஸ்தானின் எப்-16ரக விமானத்தை இந்திய ராணுவம் சுட்டு வீழ்த்தியது. இதற்கிடையே பாகிஸ்தான் எல்லைப்பகுதிக்குள் சென்ற இந்திய மிக் ரக விமானங்களை அந்நாட்டு ராணுவம் சுட்டு வீழ்த்தியது. இதில் இரு இந்திய விமானிகளைக் கைது செய்துள்ளதாகப் பாகிஸ்தான் ராணுவம் தெரிவிக்கிறது.

இதில் கைது செய்யப்பட்டு ஒரு விமானி காமாண்டர் அபிநந்தன். சென்னையைச் சேர்ந்த அபிநந்தன் பாகிஸ்தான் ராணுவத்திடம் சிக்கியதும் அவரை ராணுவமும், பொது மக்களும் சேர்ந்து தாக்கினார்கள். ரத்தம் முகத்தில் வழிந்தோட, கைகள் கட்டப்பட்ட நிலையில் அபிநந்தன் அழைத்துச்செல்லப்படும் வீடியோ வெளியானது.

அபிநந்தன் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு. மனிதநேயமின்றி நடத்தப்பட்ட வீடியோ காட்சிகள் கார்கில் போரின்போது பாகிஸ்தான் ராணுவத்திடம் சிக்கிக்கொண்ட இந்திய விமானப்படை வீரர் கே. நச்சிகேட்டாவை நினைவு படுத்துகிறது.

கடந்த 1999-ம் ஆண்டு பிரதமர் வாஜ்பாய் ஆட்சியின்போது பாகிஸ்தானுடன் கார்கில் போர் நடந்தது. அந்த போரில் இந்திய விமானப்படை வீரரும். நம்பர்-9 படை யின் வீரருமான கே.நச்சிகேட்டா மே 27 ஆம், திகதி மிக்-27 விமானத்தை இயக் கியபோது எஞ்சின் பழுதால் பாகிஸ்தான் பகுதிக்குள் தரையிறங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால், அவர் தரையிறங்கிய பின்புதான் தெரிந்தது தன்னைச் சுற்றி ஏராளமான பாகிஸ்தானிய ராணுவத் தினர் சுற்றிவளைத்துள்ளனர் என்பதை உணர்ந்தார். அதன்பின் பாகிஸ்தான் ராணுவம் நச்சிகேட்டாவை கைது செய்து அழைத்துச் சென்றது. கார்கில் போரில் இந்தியா சார்பில் பாகிஸ்தானிடம் சிக்கிய ஒரே வீரர் நச்சிக்கேட்டா என்பது குறிப்பிட த்தக்கது.



முன்னாள் பிரீதமர் வாஜ்பாயுடன், நச்சிகேட்டா

### நச்சிகேட்டாவுக்கு என்ன நேர்ந்தது

ஏறக்குறை பாகிஸ்தான் ராணுவத்தி னரால் 8 நாட்கள் சிறையில் அடைக் கப்பட்ட நச்சிகேட்டாவை அந்நாட்டு ராணுவத்தினர் பல கொடுமைகளுக்கும், சித்திர வதைக ளுக்கும் ஆளாக்கினார்கள். ஆனால், இதைப் பார்த்த பாகிஸ்தான் ராணுவத்தைச் சேர்ந்த மூத்த அதிகாரி ஒருவர் நச்சிக்கேட்டா உயிருக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்தால், சர்வதேச குற்றமாகிவிடும் என்று அவரை சித்திர வதை யிலிருந்து மீட்டுள்ளார். இதை பாகிஸ்தானிலிருந்து திரும்பிய பின் நச்சிகேட்டா தெரிவித்தார்.

அப்போது அவர் ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில், " பாகிஸ்தான் எல்லைக்குள் நான் விழுந்தவுடன் என்னை அந்நாட்டு வீரர்கள் பிடித்துச் சென்று பல சித்ரவதைகளை எனக்குக் கொடுத்தனர், கொலை செய்யவும் திட்டமிட்டனர். ஏனென்றால், எதிரிநாட்டு விமானி, அந்நாட்டில் குண்டு வீச வந்தவன் என்பதால், எனக்கு ஏராளமான தொந்தரவுகள் இருந்தன.

அப்போது, மூத்த அதிகாரி ஒருவர் சூழலை அறிந்து கொண்டு என்னை சித்ரவதையில் இருந்து காப்பாற்றி ராவல்பிண்டி சிறைக்குக் கொண்டு சென்றார். அனை வரையும் கட்டுப்படுத்திய அந்த அதிகாரி என்னைக் காப்பாற்றினார். அப்போது பாகிஸ்தான் வீரர்களுக்கு இருந்த ஆத்திரத்தில் அந்த அதிகாரி தலையிடாவிட்டால் என்னைக் கொலை செய்திருப்பார்கள். அவர்கள் 4 நாட்கள் எனக்கு உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் செய்த கொடுமைகளை வார்த்தைகளில் விவரிக்க இயலாது. கடினமானது. இவர்களிடம் துன்பத்தை அனுபவிப்பதைக் காட்டிலும், நான் செத்துவிடலாம் என்று நினைத்தேன். ஆனால், கடவுளுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். 8 நாட்களில் நான் பாகிஸ்தான் பிடியிலிருந்து மீட்கப்பட்டேன் " எனத் தெரிவித்தார்.

இந்திய அரசு ஐ.நா .வரை சென்று சர்வதேச அளவில் அளித்த நெருக்கடி, அழுத்தம் காரணமாக 8 நாட்களில் பாகிஸ்தான் அரசு நச்சிகேட்டாவை விடுவித்தது. 1999 ஆம் ஆண்டு ஜூன் 3 ஆம் திகதி செஞ்சிலு வைச் சங்க நிர்வாகிகளிடம் நச்சிகேட்டா ஒப்படைக்கப்பட்டார். மறுநாள் வாகா எல்லை வழியாக இந்தியாவுக்கு நச்சி கேட்டா வந்து சேர்ந்தார். அவரை அப்போ தைய குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன், பிரதமர் வாஜ்பாய் பாராட்டி, வாழ்த்துத் தெரிவித்தனர். 2000-ம் ஆண்டு வாயு சேனா விருது நச்சிகேட்டா வுக்கு வழங்கப்பட்டது.


இந்திய விமானி அபிநாத்தும் கடந்த வெள்ளிக்கிழமை பாகிஸ்தான் அரசால் விடுவிக்கப்பட்டுள்ளார். இவர் பாகிஸ்தான் - இந்திய எல்லை வாகாப் பகுதியில் வைத்து விடுதலை செய்யப்பட்டார். இவரை வரவேற்க பல இலட்சம் பொதுமக்கள் எல்லையில் திரண்டு நின்றபோதும் அவர் மக்களுக்கு காட்சிப்படமாய் வாகனத்தில் டில்லிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

# வீதி விபத்துக்களை குறைப்பதில் அதிக விழிப்புணர்வு அவசியம்

வாகன விபத்துக்கள் தற்போது பெரிதும் அதிகரித்துக் காணப்படுகின்றன. இலங் கையில் மாத்திரமல்லாமல் உலகின் பல் வேறு நாடுகளிலும் வீதி போக்குவரத்து அதிகரித்து, வாகன விபத்துக்களும் முன்னொரு போதும் இல்லாதளவுக்கு அதிகரித்துள்ளன. இதனை சர்வதேச நிறுவனங்களும் உறுதிப் படுத்தி உள்ளன.

அந்த வகையில் உலக சுகாதார ஸ்தாப னம் வெளியிட்டுள்ள அறிக்கையில், வீதிப் போக்குவரத்துகளின் போது ஏற்படுகின்ற வாகன விபத்துக்கள் காரணமாக வருடமொ ன்றுக்கு 13.5 இலட்சம் மக்கள் உயிரிழப்ப தாகவும், அவர்களில் பெரும் பகுதியினர் வளமான இளவயதினர் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வீதிப் போக்குவரத்து வாகன விபத்துக்கள் குறிப்பாக வளர்முக நாடுகளுக்கு பெரும் பிரச்சினையாக மாறியுள்ளன. இதற்கு இலங்கையும் விதிவி லக்கல்ல.



இந்நாட்டில் இடம்பெற்று வரு கின்ற வாகன விபத்துக்களின் படி நாளொன்றுக்கு 6 முதல் 8 பேர் உயிரிழப்பதாக பொலிஸ் பதிவு கள் தெரிவிக்கின்றன.

அதேநேரம் மூன்று மணித் தியாலங்களுக்கு ஒரு தடவை குறைந்தது ஒரு வாகன விபத்து இடம்பெறுவதாகவும் மதிப்பிடப் பட்டுள்ளது. இந்நாட்டில் 2011 ஆம் ஆண்டில் 2011 ஆகக் காணப்பட்ட வாகன விபத்துக்கள், 2018ஆம் ஆண்டு நிறைவ டையும் போது 2500க்கு மேல் அதிகரித்துக் காணப்பட்டன. இதன்படி வீதிப் போக்குவர த்து வாகன விபத்து உயிரிழப்புக்கள் அதிகரி த்து வருவதை இப்புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டுகின்றது.

வீதிப் போக்குரவத்து வாகன விபத்துக்கள் அதிகரித்துக் காணப்படுவதற்கு பல்வேறு காரணங்கள் அடிப்படையாக உள்ளன. குறிப்பாக வீதிப்போக்குவரத்து சட்ட ஒழுங்கு களை மதியாமை, அவற்றை மீறிச் செயற்படு தல், முன்பாக செல்லும் வாகனத்தை முந்திச் செல்ல வேண்டும் என்ற மனப்பான்மை யுடன் வாகனத்தைச் செலுத்துதல். வாகனங் களில் ரேடியோ, தொலைக்காட்சி என்பவற் றின் ஒலியை அளவுக்கதிகமாக உயர்த்துதல், தூக்கமின்றி இரண்டு, மூன்று நாட்கள் தொட ராக வாகனம் செலுத்துதல், சில சாரதிகள் போதைப்பொருட்களைப்பாவித்த நிலையில்வாக னம் செலுத்துதல், கையடக்க தொலை பேசி யைப் பாவித்தல் போன்றன அவற்றில் சுட்டிக் காட்டத்தக்க காரணங்களாக விளங்கு கின்றன.

அதேவேளை பாதசாரிகளும் வீதிச் சட்டங்களை மதியாது செயற்படுவதும் வீதி விபத்துக்களுக்கு காரணமாக அமைந் திருக்கின்றன. இவ்வாறான நிலையில் இன் றைய காலகட்டத்தில் இந்நாட்டில் வாகன விபத்துக்கள் இடம்பெறாத நாளே கிடையாது என்ற துரதிர்ஷ்டகரமான நிலைமை ஏற்பட்டி ருக்கின்றது. இது பெரும் துரதிர்ஷ்டகர நிலை மையாகும்.

வாகனம் செலுத்துபவர்கள் பொறுப்பு மிக்கவர்களாக உருவாக வேண்டும். அவர் கள் உருவாக்கப்பட வேண்டும் அதாவது வாகன சாரதி வாகனத்துடன் வீதிக்கு வரும்போது தாம் உயிர்களுடனும் உயிர்களுக்கு மத்தியி லும் வாகனத்தைச் செலுத்துகின்றேன். அத னால் எந்தவொரு உயிருக்கும் பாதிப்போ பங் கமோ ஏற்பட்டு விடக் கூடாது என்ற நோக்கும் இலக்கும் கொண்டவர்களாக அவர்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும். அதற்கான உறுதிப்பாட்டையும், மனவலிமை யும் சாரதிகள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆகவே இன்று பெரும் சமூகப் பிரச்சினை யாக மாறியுள்ள வீதிவிபத்துக்களை தவிர்த் துக் கொள்வதை அல்லது கட்டுப்படுத்திக் கொள்வதை நோக்காகக் கொண்டு செயற்பட வேண்டும். இதற்கான விழிப்புணர்வு நடவடி க்கைகளை அறிவூட்டலுடன் மேற்கொள்ள வேண்டும். அப்போது வீதி வாகனப் போக்கு வரத்து விபத்துக்களைப் பெரிதும் குறைத்துக் கொள்ளலாம். அதுவே இன்றைய அவசர தேவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

facebook

# காட்டில் ஒரு வழக்கு

ஐயோ... அம்மா அப்படீண்ணு யாரோ அலறதைக் கேட்டு பறவைகள் திடுக்கிட்டுச்சு. சத்தம் கேட்ட திசையைப் பார்த்து வேகம் வேகமாப் பறந்தது. அங்கே ஒரு ஆந்தை வயிற்றைப் பிடிச்சபடி வலியல் துடிச்சுகிட்டு இருந்தது. அதைப் பார்த்த ஆந்தையோடு நெருங்கிய நண்பன் காகம் ஓடிப்போய் ஆந்தையோட முதுக தடவிக் கொடுத்தது. என்ன நடந்திச்சு? எப்படி வயிற்று வலி வந்திச்சு? அப்படீண்ணு அன்பா விசாரித்தது.

ஏதோ ஒண்ணு என் வயிற்றில் வந்து மோதியது. அவ்வளவுதான் எனக்குத் தெரியும். வேற ஒன்றும் எனக்குத் தெரியாது.... ஐயோ உயிர் போகுதே? ஆந்தை மறுபடியும் வயித்துப் பிடிச்சுகிட்டு அழத் தொடங்கியது. காகம் ஆந்தையைக் கூட்டிகிட்டு வைத்தியரிடம் போனது. காட்டு வைத்தியரான குயில் அதோட வீட்டில் ஏதோ பச்சிலைகளைப் பிழிஞ்சு சாறு எடுத்துகிட்டிருந்தது.

வைத்தியரே:... வைத்தியரே... என் நண்பன் வயித்துவலியால துடிக்கிறான். காப்பாத்துங்க காப்பாத்துங்க..ண்ணு கத்தியது காகம்.

செஞ்சுகிட்டிருந்த வேலையை அப்படியை விட்டுட்டு குயில் எழுந்து வந்தது. ஆந்தையைப் பரிசோதிச்சுப் பாத்தது.

என்ன சாப்பிடக்கூடாததை ஏதையாக்கும்சாப்பிட்டியா? அப்படீண்ணு ஆந்தைகிட்டே கேட்டது. நான் எதுவும் சாப்பிடவில்லை... ஏதோ ஒன்று என் வயிற்றின் மேலே வந்து மோதியது. அவ்வளவுதான் எனக்குத் தெரியும். ஐயோ வலி உயிர் போகுது... வேகமா எதாவது பண்ணுங்க வைத்தியரே ஆந்தை ஆழாத குறையாக கேட்டது.

குயில் வைத்தியர் ஆந்தையோட வயிற்றை கூர்ந்து கவனிச்சாரு. தொட்டுப் பாத்தாரு. அவருக்கு விஷயம் புரிஞ்சிருந்தது.

யாரோ ஒரு பையன் களிமண் உருண்டையை வைத்து ஆந்தையைக் குறிபார்த்து விட்டிருக்கான் அது வயித்தில் இருக்கு. அதனால் நான் சொல்லுவதைக் கவனமாகக் கேட்டுங்குங்க. ஆந்தையை மாங்குளத்துக்குக் கூட்டிட்டுபோ. அந்தக் குளத்தில் கழுத்து மட்டும் வெளியே தெரியிற மாதிரி ஒரு நாள் முழுக்க ஆந்தை தண்ணீரில் நிக்கட்டும். வயிற்றுவலி சரியாயிடும்ணு சொல்லிட்டு மறுபடியும் மூலிகையைப் பிழியத் தொடங்கிச்சு குயில் வைத்தியர்.

காகம் ஆந்தையைக் கைத் தாங்கலா மாங்குளத்துக்குக் கூட்டிட்டுப் போச்சு. ஆந்தையைத் தண்ணீரில் இறங்கி நிற்கவைத்தது. காகம்ஆந்தைக்கு உணவுகொண்டு வரப் போனது.

நேரம் ஆக ஆக களிமண் உருண்டை மெல்ல மெல்ல தண்ணீரில் கரையத் தொடங்கிச்சு. ஒரு நாளாச்சு. ஆந்தை தண்ணீரிருந்த தாவி வெளியே வந்திச்சு. ஆகா... என்ன ஆச்சரியம் வயிற்று வலி சூரியனைக் கண்ட பனிபோல மாயமாய் மறஞ்சு போயிருச்சே அப்படீண்ணுட்டு விர்ணு மேலே பறந்துச்சு. சர்ணு கீழே ஏறங்கிச்சு. சிறகை அசைக்காம வானத்தில் மிதந்தது. மகிழ்ச்சியில் கத்தியது.

ஆந்தை மகிழ்ச்சியா பறக்கிறத பார்த்திட்டு இரண்டு பேர் அங்கே வந்தாங்க. ஆந்தை அவர்களைப் பார்த்ததும் கீழே இறங்கி வந்திச்சு. என்ன ஆந்தையாரே வயித்து வலியெல்லாம் குணமாயிருச்சா? குயில் வைத்தியர் சிரிச்சுகிட்டே கேட்டாரு. ஓ போயே போயிருச்சு ஆந்தை மகிழ்ச்சியாகச் சொல்லிச்சு.

சரி என் வைத்தியத்துக்குத் தர வேண்டிய கட்டணத்த தா அப்படீண்ணு குயில் கேட்டுச்சு. கட்டணமா? எதுக்கு? தண்ணீர் தானே என் வயிற்று வலியைக் குணமாக்கிச்சு.

நீங்க ஒண்ணும் செய்யவில்லையே பிறகு எதுக்குக் கட்டணம் கேட்கறீங்க? ஆந்தை கேலியா கேட்டது.

குயில் வைத்தியருக்கு ஒரே வருத்தமாப் போயிருச்சு. அது பரிதாபமா காகத்தைப் பார்த்துச்சு. அதை கவனிச்ச ஆந்தை... என்ன பார்க்கிறீங்க, நீங்க என்ன காட்டுக்குப் போனீங்களா, மூலிகை பறிச்சீங்களா, சாறு பிழிஞ்சீங்களா? எதற்காக உங்களுக்குக் தரணும் கட்டணம் அப்படீண்ணு கோபமா கேட்டுச்சு. ஆந்தை சொன்னதக் கேட்டு காகமும் வாயடைச்சுப் போச்சு.

ம்ம்... அப்படியா சொல்றே... நான் காட்டு நீதிமன்றத்திலே வழக்குப் போடப் போறேன்" என்றபடி குயில் விருட்டுண்ணு பறந்து போச்சு.

வழக்குப் போடறதுண்ணு போடட்டும். நீதிமன்றத்திலே பார்த்துக்கலாம் அப்படீண்ணு சொல்லிட்டு ஆந்தையும் பறந்து போச்சு.

அடுத்தநாள் காட்டு நீதிமன்றம் கூடியது. விலங்குகளும் பறவைகளும் நீதி மன்றத்துக்கு முன்னால் கூடியிருந்தாங்க. நீதிபதி முயல் வந்தார். எல்லாரும் எழுந்து நின்று நீதிபதிக்கு மரியாதை செலுத்தினாங்க. முயல் நீதிபதி உயரமான இருக்கையில் உட்கார்ந்தாரு. அவர் உட்கார்ந்ததும் எல்லாரும் அவங்கவங்க இடத்தில் உட்கார்ந்தாங்க. நீதிபதி முதலில் ஆந்தையைக் கூப்பிட்டாரு. ஆந்தை நடந்ததையெல்லாம் ஒண்ணு விடாம சொல்லிச்சு.

என்னோட வயிற்று வலிக்கு மருந்தா இருந்தது தண்ணீர் தான். குயில் எதுவும் செய்யவில்லை. அதனால் குயில் வைத்தியருக்குக் கட்டணம் கொடுக்கத் தேவையில்லைண்ணு தீர்ப்பளிக்கணும்ணு கணம் நீதிபதி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன் சொல்லியது.

அடுத்ததாக குயில் தன்னோட வாதத்தை முன் வைத்தது. எல்லா நோய்க்கும் மருந்து கொடுத்துத் தான் குணப்படுத்துணும்ணு எந்த வைத்திய புத்தகத்திலையும் சொல்லப்படவில்லை. சில நேரங்களில் அறிவுரை சொல்றதும் மருந்தாகும். என ஆந்தை எனக்குக் கட்டணம் தரணும்ணு தீர்ப்பு வழங்கணும்ணு கேட்டது.

இரண்டு பேரோட வாதங்களையும் கூர்ந்து கேட்ட முயல் நீதிபதி தீர்ப்பு வழங்கினாரு.

குயிலோட வாதத்தை இந்த நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளுது. எனவே ஆந்தைக் குயிலுக்குக் கட்டணம்கொடுத்தேயாக வேண்டும். ஆந்தை கட்டணம் கொடுக்க மறுத்தா ஆந்தையை வைத்தியருகிட்ட கூட்டிட்டுப் போன காகம் குயிலுக்குக் கட்டணம் கொடுக்கணும் இதுதான் தீர்ப்பு அப்படீண்ணு முயல் நீதிபதி எழுந்தாரு.

ஐயோ... நீதிபதி அவர்களே கொஞ்சம் பொறுங்க... அப்படீண்ணு சொல்லிட்டு காகம் பேசத் தொடங்கிச்சு.

நானோ பரம ஏழை. அங்கும் இங்கும் பறந்து போய் எச்சில்களைத் திண்ணு வாழ்ந்திட்டிருக்கேன். என்னால் எப்படிக் கட்டணம் கட்ட முடியும்? அப்படீண்ணு சொல்லியது. காகம் பேசுறதை கேட்ட குயிலு... காக்கையாரே. எனக்கு மூலிகைகளைத் தேடிக் கண்டுபிடிக்கணும் புதுப்புது மருந்துக தயாரிக்கணும், அதனால் அடையிருந்து குஞ்சு பொரிக்கவோ, குஞ்சுகளுக்குத் தீனி கொடுத்து வளக்கவோ நேரமில்லை.

அதனால் நான் உன்னோட கூட்டில் முட்டைபோடறேன். நீ அடைகாத்து குஞ்சு பொரிச்சு குஞ்சுகளைக் கவனிக்கணும். இதுக்கு நீ ஒத்துகிட்ட கட்டணம் தர வேண்டாம். அப்படீண்ணு சொல்லிச்சு.

காகமும் அதுக்கு ஒத்து கொண்டது. காகமும் காகத்தோட நண்பர்களும் ஒன்றாக சேர்ந்து நன்றி மறந்த ஆந்தையைக் கொத்தி விரட்டியது. அன்றையிலிருந்து குயில் காக்கையோட கூட்டில் முட்டைபோடத் தொடங்கிச்சு. காக்கைகளோட தாக்குதலுக்குப் பயந்துகிட்டு ஆந்தை பகலில் தலை காட்டாமல் எங்கேயாவது மறைந்திருக்கத் தொடங்கியது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1659


### செந்தூரன்

அடக்க முடியாத கோபத்தைக் கட்டி வை... காலம் உன்னிடம் ஒருநாள் கண்டிப்பாக வரும்... அப்போது பாவம் பார்த்து ஒருவனையும் விடாதே கருவறு



### ஹொலின்

நிமிர்ந்து நிற்பதெல்லாம் பலம் என்றோ! வளைந்து நிற்பதெல்லாம் பலவீனம் என்றோ முடிவெடுத்து விடாதீர்கள்... நிமிர்ந்து நிற்கும் வேலை விட வளைந்து கொடுக்கும் வில் அம்பு தான் அதிக தூரம் பாயும்




### தனபாலன்

முன்பின் தெரியாதவர்கள்கூட முதுகில் குத்துவதில்லை... முகம் அறிந்த உறவுகள் தான் அதிகம் குத்துகிறார்கள்



### வின்சன்

எத்தனை முறை ஏமாற்றப்பட்டாலும் நீ அடுத்தவரை ஏமாற்ற ஒருபோதும் கற்றுக் கொள்ளாதே என்கிறது என்னுள் இருக்கும் மனிதாபிமானம்



### கஜானன்

பொருத்தமாகப் பொய் பேசக்கூடியவர்கள் தான் இந்த உலகில் கடைசிவரை யோக்கியனாக இருக்க முடியும்



### ராகவன்

எல்லாப் பெண்களுக்கும் கிடைத்துவிடுவதில்லை தனக்காக கண்ணீர் சிந்துமளவிற்கு ஒரு ஆணின் உண்மையான அன்பு



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு நோயும் உடற்பயிற்...

நேரம் கிழமையில் 5 அல்லது 6 தினங்கள் பயிற்சியில் ஈடுபடலாம். அவ்வாறு ஆரம்பத்தில் ஒரே முறையில் 30 நிமிடம் பயிற்சியினைச் செய்ய முடியாதவர்அதனை இரண்டு அல்லது மூன்று வேளைகளில் பிரித்துச் செய்யலாம்.

ஆரம்ப காலத்தில் மெதுவாக ஆரம்பித்து நாளடைவில் நேரத்தினையும், வேகத்தினையும் கூட்டிச் செல்லலாம். ஆரம்பிக்கும் போது குறைந்த இலக்கை நோக்கி (Lowergoals) நகர வேண்டும். அப் போது தான் இலகுவில் இலக்கை எட்ட முடியும் பயிற்சியும் மனம கிழ்ச்சியைத் தரும். தினமும் பயிற்சிக்கு முன்னர் உடலை பயிற்சி யில் ஈடுபடுவதற்கான ஆர ம்ப பணிகளைச் செய்தே (Worm-up) ஆரம்பிக்க வேண்டும். அதுபோல் முடிக் கும் போதும் (Cool down) செய்ய வேண்டும். நோயாளிகளுக்கான பயிற்சிமுறை இரண்டு வகைப்படும்.

- காற்றுச் சுவாசத்தின் மூலம் பயிற்சியில் (Aerobic Workout) ஈடுபடுதல்.
- உபகரணங்களைப் பயன்படுத்தி பயிற்சியினை (Resistance Exercise) மேற்கொள்ளுதல்.
- காற்றுச் சுவாசத்தின் மூலம் பயிற்சியில் (Aerobic Workout) ஈடுபடுதல்.

காற்றுச் சுவாசத்தின் மூலம் செய்யும் உடற் பயிற் சியினை உயர் இதயத் துடிப்பு வீதத்தின் (Maximum Heart Rate) 50% இல் ஆரம்பித்து மெது மெதுவாக 70% வரை கொண்டு செல்லலாம்.

(Maximum Heart Rate = 220 –Age) அதாவது 60 வயதுடைய ஒருவர் ஆரம்பத்தில் மெதுவாக 80-90 துடிப்பு/நிமிடம் என்ற அளவில் ஆரம்பித்து நாளடைவில் 110-120 துடிப்பு/ நிமிடம் என்ற இதயத்துடிப்பு வீதத்தில் தனது பயிற்சி களை மேற் கொள்ளலாம்.

**உபகரணங்களைப் பயன்படுத்தி பயிற்சியினை (Resistance Exercise) மேற்கொள்ளுதல்.**

உடற்பயிற்சி உபகரணங்களைப் பயன்படுத்தி பயிற்சியினை மேற்கொள்ளும் போது (Resistance Exercise) கை நிறைகளைப் (Dumbbells) பயன்படுத்தி அதிகளவு பயிற்சிகளை மேற் கொள்ளுதல் போதுமானதாக அமையும். இப் பயிற்சியின் மூலம் உடலின் பிரதானமான தசைநார்களுக்குப் பயிற்சியினை வழங் கலாம். (major muscle groups) உதாரணமாக கால் கள், கைகள், தோள் மூட்டு, பின்பகுதி, வயிற்றுப்பகுதி என்பன அடங்கும்.

பயிற்சிகளில் ஈடுபடும் போது கிழமையில் காற்றுச்சுவாசத்தின் மூலம் மேற் கொள்ளும் பயிற்சிகளை 3அல்லது 4 தினங்களும் உபகர ணங்களைப் பயன்படுத்திச் செய்யும் பயிற்சியினை இரண்டு தினங்களும் மேற் கொள்ளலாம்.

உபகரணங்களைப் பயன்படுத்தி செய்யும் பயிற்சியினை செய்யும்போது ஒரு தடவையில் (Sets) 8 முதல்2முறை(Repetitions) பயிற்சி செய்யலாம். இவ்வாறு 3முறை (3Sets) செய்யலாம். ஒவ்வொரு முறை செய்யும்போது (In Between Each Sets) தசை நார்களுக்கு 2-3 நிமிட ஓய்வு வழங்குவதன் மூலம் தசைக்கான குருதிச் சுற்றோட் டத்தினைச் சீராக்கிக் கொள்ளலாம்.

இதனால் தசைநார் தேவை யான போசணையினைப் பெற்றுக்கொள்ளும். பயிற்சியை ஆரம்பிக்கும்போது மிகச் சிறிய எடையில் ஆரம்பித்து சில கிழமைகள் இடை வெளியில் மெதுமெதுவாக நிறையைக் கூட்டிச் செல்லலாம். நிறையை அதிகரிப் பதிலும் பார்க்க எண்ணிக் கையினைக் கூட்டுவது (Repetitions) பாதுகாப்பான தாக அமையும்.

காற்றச் சுவாசத்தின் மூலம்மேற்கொள்ளக்கூடிய பயிற்சிகளாக நடத்தல் (Walk), துள்ளுதல் (Jog), நடை இயந்திரத்தை பயன்படுத்துதல் (Treadmill) போன்றன அடங்கும். இவற்றைவிட நீச்சல், சைக்கிளோட் டம் என்பனவும் இதிலடங் கும்.

**பயிற்சியில் ஈடுபடும் போது கவனத்தில் கொள்ள வேண்டியன.**

நீங்கள் விரும்பிய நேரத்தில் பயிற்சியினை மேற் கொள்ளலாம். அவ்வாறு தெரிவு செய்யும்போது தினமும் உங்களால் தடையின்றிப் பயிற்சியில் ஈடுபடக் கூடிய நேரமாக இருத்தல் வேண்டும்.

உணவு உட்கொண்ட பின் பயிற்சியிலீடுபடுவது நல்லதல்ல. தனியாக பயிற்சி களை செய்வதிலும் பார்க்க நண்பருடனோ அல்லது குழு வாகவோ சேர்ந்து செய்வது விரும்பத்தக்கது. அதாவது அவசர நிலை மைகள் ஏற்படும் போது உதவியாக இருப்பதுடன் ஒரு மனமகிழ்ச்சியான சூழலில் பயிற்சியினை மேற்கொள்ள வழிவகுக்கும். உடலின் பகுதிகளில் காயங்கள் அல்லது வீக்கங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் அதனைக் கவனயீனமாக விட்டு விடாது வைத்திய ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதாவது தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் பயிற்சியிலிருந்து போது மான அளவு ஓய்வு எடுத்துக் கொள்வது நல்லது.

நெஞ்சுவலி, தலைச் சுற்று, மூச்சுத்திணறல் அல்லது உடற்பயிற்சி செய்ய முடியாத நிலை ஏற்பட்டால் உடனடியாக பயிற்சியினை நிறுத்தவும். உடனடியாக அரு கிலுள்ள வைத்திய சாலை யில் ஆலோசனை அல்லது சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும்.

**Dr.செ.அறிவுச்செல்வன்**
**பொறுப்பு வைத்திய அதிகாரி, விளையாட்டு மருத்துவ அலகு.**

**நன்றி: நீரிழிவுக் கைநூல்**
**யாழ்.நீரிழிவுக் கழகம்**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org